



# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06





மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0713594443. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –406

## பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்ட பின்னரே தேர்தல் என்பது சாத்தியப்படும் – ஜனாதிபதி ரணில்



## மன்னாரில் மண் மாஃபியாக்கள் சுட்டுக்கொலை என்ற செய்தியே இனி வெளிவரும்



## டொலரின் வீழ்ச்சியும் சாதக,பாதக தன்மைகளும்



## தமிழ் தரப்பு ஒன்றிணைந்து பயணிப்பதையே நாம் விரும்புகின்றோம் – மாவை

# பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்ட பின்னரே தேர்தல் என்பது சாத்தியப்படும் – ஜனாதிபதி ரணில்

சீனாவின் எக்ஸிம் வங்கியிடமிருந்து நிதி உறுதி கடிதம் கிடைத்ததையடுத்து, தானும் மத்திய வங்கி ஆளுநரும் கையெழுத்திட்ட இணக்கப்பாட்டுக் கடிதம் சர்வதேச நாணய நிதியத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்துக்கு அறிவித்தார். இதன்படி, நாட்டுக்கான தனது கடமையை நிறைவேற்றியுள்ளதாகவும், சர்வதேச நாணய நிதியம் தனது கடமையை இம்மாத இறுதிக்குள் நிறைவேற்றும் என எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். பொருளாதாரத்தின் தற்போதைய நிலை மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகளின் முன்னேற்றம் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அன்று (07) நாடாளுமன்றத்தில் விசேட உரையொன்றை நிகழ்த்தினார். தற்போது அரசால் முன்னெடுக்கப்பட்டு வரும் இந்த வேலைத்திட்டம் சீர்குலைந்தால் 2022 பெப்ரவரி மாத நிலைமையைவிட மிகவும் ஆபத்தான நிலைக்கு நாடு தள்ளப்படலாம் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய உரை பின்வருமாறு:-

"இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு சாதகமான தீர்வாக சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாட அரசாங்கம் 2022 மார்ச் நடுப்பகுதியில் தீர்மானித்தது. அதன் பிறகு அந்நியச் செலாவணி நெருக்கடி மோசமடைந்தபோது, ஏப்ரல் 2022 நடுப்பகுதியில், வெளிநாட்டுக் கடனைச் செலுத்தும் திறன் இல்லை என்று அறிவிக்கப்பட்டது. இலங்கை ஒரு வங்குரோத்து பொருளாதாரமாக அன்று தொடக்கம் செயற்பட்டது. அதன் பாதகமான விளைவுகளை நீங்கள் அனைவரும் அனுபவித்திருக்கிறீர்கள். 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், இந்த நாடு எரிபொருள் வரிசைகள், எரிவாயு வரிசைகள், மின்வெட்டு, உணவுப் பற்றாக்குறை, மருந்துகளை வாங்குவதில் உள்ள சிரமங்கள், பணவீக்கம், ரூபாயின் வீழ்ச்சி மற்றும் வறுமை அதிகரிப்பு போன்ற பல பிரச்சினைகளைச் சந்தித்துள்ளது. இலங்கையில் இவ்வாறான ஒரு அவல நிலை நவீன வரலாற்றில் இருந்ததில்லை என்பது அனைவரும் ஏற்றுக்கொள்ளும் உண்மையாகும். ஜூன் 2022 முதல் நிலவி வந்த பொருளாதாரப் பிரச்சினைகள் படிப்படியாக ஓரளவுக்குத் தீர்க்கப்படும் போக்கை காண்பித்தது. உரங்கள் வழங்கியதால், கடந்து வரும் சிறு மற்றும் பெரும் போகங்களில் சிறந்த அறுவடை கிடைத்தது. விவசாய பொருட்களின் ஏற்றுமதியும் வழமை நிலைக்கு திரும்பியது. நாட்டில் நிலவும் பொருளாதாரப் பிரச்சினைகளை படிப்படியாகத் தீர்க்கும் வகையில், ஸ்திரப்படுத்தல் திட்டம் வகுக்கப்பட்டது. அதற்கு பொருத்தமான திட்டத்தை அரசு செயற்படுத்தியது. அவற்றில் சிலவற்றை இந்த உயரிய சபையில் நினைவுபடுத்த விரும்புகின்றேன். எரிவாயு மற்றும் பெற்றோல் என்பன வழமை போன்று கிடைப்பதை உறுதி செய்வது, பாடசாலைகள் மற்றும் பரீட்சைகளை உரிய முறையில் நடத்துவது, தொடர்ச்சியாக மின்சாரம் வழங்குவது, உரங்கள் வழங்குவது, சமுர்த்தி பயனாளர்களுக்கு மேலதிக நிதி வழங்குவது மற்றும் 2019 இல் அமுல்படுத்தப்பட்ட வரிக் கொள்கை மீள செயற்படுத்துவது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள அரசுக்கு நேரிட்டது. 2019 இன் பிற்பகுதியில் அவசரகால அமுல்படுத்தப்பட்ட வரிக் குறைப்புகளுக்குப் பிறகு, அரச வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8% ஆகக் குறைந்தது. அதை சீர்செய்ய புதிய வரிக் கொள்கைகளை முன்னெடுக்க நேரிட்டது.

அதேபோல், மத்திய வங்கியின் நிதிக் கொள்கைகளின் கீழ் வட்டி விகிதங்களை உயர்த்த நேரிட்டது. தொடர்ந்து அதிகரித்து வரும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த வட்டி விகிதங்களை உயர்த்துவதே எம்மிடமிருந்த சாதகமான நடவடிக்கையாகும். கடந்த ஆண்டு செப்டெம்பரில் சராசரி பணவீக்கம் 70% வரை உயர்ந்தது. உணவுப் பணவீக்கம் 90 சதவீதத்தைத் தாண்டியது. ஆனால், தற்போது பணவீக்க வேகம் 50 வீதம் வரை குறைந்துள்ளது. அத்தோடு உணவுப் பணவீக்கமும் 54 சதவீதமாகக் குறைந்துள்ளது. மேலும், அந்நியச் செலாவணி பற்றாக்குறையால், பணப் பரிமாற்ற விதிகளை கடுமையாக்கவும், இறக்குமதியை கட்டுப்படுத்தவும் நேரிட்டது. எங்களால் வெளிநாட்டுக் கடனைச் செலுத்த முடியாது என அறிவித்தவுடன், வெளிநாடுகளும் நிதி நிறுவனங்களும் இலங்கையுடனான நிதிக் கொடுக்கல் வாங்கல்களைக் கட்டுப்படுத்தின. உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் கூட புதிதாக நிதி வழங்குவதை நிறுத்தின. வெளிநாட்டு உதவியில் செயற்படுத்தப்பட்ட அனைத்துத் திட்டங்களையும் நிறுத்த நேரிட்டது. கடன்பத்திரங்களை கூட திறக்க முடியவில்லை. இலங்கைக்கு கடன் வழங்கக் கூடாது என்ற தர நிலைக்கு, கடன் தர நிர்ணய நிறுவனங்கள் எமது நாட்டைத் தரமிறக்கின. இந்நிலையில் எமக்கு

**ஏற்றுமதி**
**வெளிநாட்டில் பணிபுரிவதற்கு தொழிலாளர் இடம்பெயர்தல்**
**சுற்றுலாத் துறை மூலம் அந்நியச் செலாவணி கிடைத்தன.**

நாடு மற்றும் சமூகத்தில் நிலவிய சாதகமற்ற சூழ்நிலையினால், 2022 ஆம் ஆண்டு முழுவதும் சுற்றுலாத்துறை வெற்றிபெறவில்லை. ஆனால் இந்த ஆண்டு நிலைமையில் இருந்து எழுந்து நிற்கும் அறிகுறிகள் தென்படுகின்றன. அந்நியச் செலாவணி அனுப்புவது சாதாரண நிலைமைகளில் இருந்த மட்டத்தை விட 1/3 ஆகக் குறைந்தது. இது மேலும் அதிகரிக்கும் போக்கைக் காட்டுகின்றது. ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்க உதவும் உள்ளீடுகளை இறக்குமதி செய்யப் போதுமான அந்நியச் செலாவணி நம்மிடம் இன்னும் இல்லை. எமது நாட்டின் பொருளாதாரத்தில் உள்ள நெருக்கடி, குறிப்பாக அந்நிய செலாவணி நெருக்கடி குறித்து 2021 முதல் சர்வதேச நாணய நிதியம் தொடர்ந்து எச்சரித்தது. 2022 நடுப்பகுதியில் இருந்து IMF உடன் தொடர்ச்சியாக பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டன. அந்தப் பிரதிநிதிகள் இடைக்கிடையே இலங்கைக்கு வந்து, கொடுப்பனவு நிலுவை நெருக்கடி, நிதி நெருக்கடி மற்றும் அந்நிய செலாவணி நெருக்கடி குறித்து எங்களுடன் ஆழமாக கலந்துரையாடினர். மேலும், பல தசாப்தங்களாக தாமதமாகி வரும் கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தங்களை தொடர்ந்தும் ஒத்திவைக்க முடியாது என்றும் IMF சுட்டிக்காட்டியுள்ளது. 2022 செப்டெம்பர் முதலாம் திகதியில் IMF உடன் அதிகாரிகள் மட்ட உடன்பாட்டை எட்டினோம். எவ்வாறாயினும், நாடு கடன் நிலைத்தன்மையை அடையும் வரை இந்த ஒப்பந்தத்தை IMF பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்க முடியாது என்று IMF தெரிவித்துள்ளது. எனவே, கடனை நிலைநிறுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக அரசு இலங்கையின் கடன் வழங்குநர்களுடன் தொடர்ந்து பேச்சுகளை நடத்தியது.

இதற்காக, Lasads மற்றும் Clifford Chance ஆகிய சர்வதேச நிபுணத்துவ நிறுவனங்களின் ஒத்துழைப்பைப் பெற்றோம். இது ஒரு நீண்ட மற்றும் சிக்கலான பேச்சுகளாகும். இதன்படி, இலங்கைக்கு கடன் வழங்கிய பரிஸ் கழகத்துடனும், பரிஸ் கிளப்பில் அங்கம் வகிக்காத இந்தியா மற்றும் சீனாவுடனும் நிதியுதவி உத்தரவாதங்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் தொடர்ச்சியாகக் கலந்துரையாடப்பட்டது. 2023 ஜனவரி 16 ஆம் திகதி அந்த உறுதிமொழியை இந்தியா வழங்கியது. சீனா அதை ஜனவரி 18 அன்று வழங்கியது. 2023.01.25 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் இலங்கைக்கு நிதி உத்தரவாதத்தை வழங்க பாரிஸ் கிளப் ஒப்புக்கொண்டது. அதன் பிறகு, மார்ச் 2ஆம் திகதி IMFஇன் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவாவுடன் IMF கடன் உதவித் திட்டம் பற்றி கலந்துரையோடினேன். IMF உடனான பேச்சின் போது, அதன் உடன்பாட்டைப் பெறுவதற்கு பல பணிகளை முன்கூட்டியே செய்ய வேண்டியிருந்தது. மின்சார விலையை மறுசீரமைத்தல், பெற்றோலிய விலைகளை மறுசீரமைத்தல், மத்திய வங்கியின் சுயாதீனத்தை உறுதி செய்தல், பணவீக்கத்தை கட்டுப்படுத்த வட்டி விகிதங்களை உயர்த்துதல், பொது நிறுவனங்களை மறுசீரமைத்தல், சமூக பாதுகாப்பு கட்டமைப்பை வலுப்படுத்துதல், அரச வருமானத்தை அதிகரிக்கப் பணியாற்றுதல் மற்றும் பொது செலவினங்களைக் கட்டுப்படுத்துதல், பெற்றோலிய மற்றும் மின்சாரத் துறைகளில் போட்டித்தன்மையை விரிவுபடுத்துதல் போன்ற பல விடயங்களை முன்கூட்டியே செய்ய வேண்டியிருந்தது. இலங்கை முன்கூட்டியே செய்திருக்க வேண்டிய அந்தப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன. மேலும், இந்த நாட்டு மக்கள் படும் இன்னல்களை நான் அறிவேன். அதற்காக அரசு என்ற வகையில் மன்னிப்புக் கோருகின்றோம். அன்றிரவு சீனாவின் எக்ஸிம் வங்கியிடமிருந்து நிதி உத்தரவாதக் கடிதத்தைப் பெற்றோம். அதன்படி அன்றிரவே நானும் மத்திய வங்கி ஆளுநரும் இணக்கப்பாட்டுக் கடிதத்தில் கையொப்பமிட்டு சர்வதேச நாணய நிதியத்துக்கு அனுப்பி வைத்தோம். இப்போது நமது கடமைகள் நிறைவடைந்துவிட்டன. இந்த மாத இறுதிக்குள், நான்காவது வாரமளவில் , IMF தனது

> **"இந்த நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்கான பயணத்தில் எம்முடன் இணைந்து கொள்ளுமாறு எதிர்க்கட்சியை நான் கேட்டுக்கொள்கின்றேன். இதனை நிறைவேற்றிய பின்னர் ஜனாதிபதித் தேர்தலா, பொதுத் தேர்தலா எது தேவை என்பதை தீர்மானிக்க முடியும். "**

கடமையைச் செய்யும் என்று எதிர்பார்க்கின்றேன். அதன்பிறகு உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றிடமிருந்து முதலாம் கட்ட நிதி கிடைக்கும். IMF உடனான இதற்கு முன்னர் 16 சந்தர்ப்பங்களில் செய்து கொண்டதைப் போலல்லாமல், இந்த முறை உடன்பட்ட விடயங்களை தவறாமல் செய்யப்பட வேண்டும். இல்லையேல் IMF இலங்கையுடன் இணைந்து செயற்படாது. அந்தச் சூழ்நிலையில், பலதரப்பு மற்றும் இருதரப்பு நிதி நிறுவனங்கள் எங்களுடன் இணைந்து செயல்பட முடியாது. அதன்படி, வெளிநாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் பெருமளவில் தடைப்படும். ஒரு விடயத்தை நாம் வலியுறுத்த வேண்டும். தற்போது நாம் வெளிநாட்டு கடனை செலுத்தவில்லை. (பலதரப்பு நிதி நிறுவனங்களுக்கு மட்டுமே கடன் செலுத்தப்படுகிறது) IMF உடன் ஏற்கனவே உள்ள ஒப்பந்தம் முறிந்தால், வெளிநாடுகள் மற்றும் தனியார் வங்கிகளில் (SB) வாங்கிய கடனை செலுத்த நேரிடும். 2029 வரை ஆண்டுதோறும் சுமார் 6 முதல் 7 வரையான பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடன்கள் செலுத்தப்பட வேண்டும். இந்தக் கடனை அடைக்க நம்மிடம் அந்நியச் செலாவணி இல்லை. எனவே, IMF தலையிட்டு வெளிநாட்டுக் கடன் வழங்குநர்களுடன் ஒப்புக் கொள்ளப்பட்ட கடன் நிலைத்தன்மை உரையாடலைத் தொடர வேண்டும். இன்று அதற்கு தற்போது மாற்று வழி இல்லை. எனவே, சர்வதேச நாணய நிதியத்துடன் நாம் செய்து கொண்டுள்ள ஒப்பந்தம், நமது பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான விசேட முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தம் என்பதை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றோம். பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த பல கடினமான பொருளாதார நடவடிக்கைகளை எடுத்தோம். பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்வதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொண்டு வருகின்றோம். இதனால் சமூகத்தில் உள்ள அனைவருக்கும் தொடர்ச்சியாக இன்னல்கள் ஏற்படும். இத்தகைய கடினமான மற்றும் சிக்கலான சூழ்நிலைக்கு மத்தியில், கடந்த 7 - 8 மாதங்களாக செலவழித்து, அதை ஒரு சாதகமான நிலைக்கு கொண்டு வந்துள்ளோம். இதிலிருந்து முன்னேற பொருளாதார சீர்திருத்தங்கள் தேவை. இதை நாட்டில் உள்ள அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். பல்வேறு செல்வாக்குச் செலுத்தும் குழுக்கள், அரசியல் கட்சிகள், தொண்டர் குழுக்கள், தொழிற்சங்கங்கள் போன்றவை இது குறித்து ஆழமாகச் சிந்திக்க வேண்டும். வரிச்சுமை அதிகமாக உள்ளதாக தொழில் வல்லுநர்கள் கூறுகின்றனர். இருப்பினும், இந்த நிலைமை ஒரு குறுகிய காலத்திற்கு பராமரிக்கப்பட வேண்டும். இல்லையெனில், இந்தத் திட்டம் சீர்குலைந்தால், 2022 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் இருந்த நிலையை விட மிகவும் ஆபத்தான இடத்திற்கு நாடு தள்ளப்படலாம். அப்போது சம்பளம், ஓய்வூதியம், வேலை என்பன பறிபோகும் தொழிற்சாலைகள் மூடப்படும், பாடசாலைகள் தினமும் மூடப்படும் என்று பலரும் நினைத்தார்கள். அவற்றை நாம் ஓரளவு கட்டுப்படுத்தியுள்ளோம். ஆனால், சமூகத்தில் செல்வாக்கு மிக்க குழுக்கள் நாம் முன்வைத்த வேலைத்திட்டத்தை பல்வேறு நடவடிக்கைகள் மூலம் நாசமாக்கினால், அதிலிருந்து உருவாகும் சமூக மாற்றம், மிகவும் ஆபத்தானதாக இருக்கும். இது நம் சமூகத்தில் முன்னெப்போதும் இல்லாத சோகமான காலத்துக்கு வழிவகுக்கும். கருத்துக்களை வெளியிடும் உரிமையை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். அதனை அமைதியாகச் செய்யுங்கள். கூட்டங்கள் நடத்துவதும், போராட்டம் நடத்துவதும் ஒரு பிரச்சினையல்ல. ஆனால், இந்தப் போராட்டத்தின் மூலம் இந்த வேலைத்திட்டத்தை சீர்குலைத்தால், அதற்கு எதிராக இந்த அரசு கடுமையாகச் செயற்படும் என்று கூற விரும்புகின்றேன்.

நான் ஒன்று சொல்ல வேண்டும். இப்போது டொலர் விலை குறைந்து வருகிறது. ஜூலை 9ஆம் திகதி இந்த நாடு வீழ்ந்திருந்தால் இன்று இந்த நிலை இருந்திருக்காது. அப்போது யாரின் உதவியும் இருக்கவில்லை. இதற்கு நடவடிக்கை எடுத்த முப்படை மற்றும் பொலிஸாருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்கள் எடுத்த அந்த நடவடிக்கையால் தான் இன்று நமக்கு எரிபொருளும் மின்சாரமும் கிடைத்துள்ளது. எனவே, அந்த சக்திகளுக்கு இந்த நிலைமையை தகர்க்க அனுமதிக்க மாட்டோம். இந்த நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்கான பயணத்தில் எம்முடன் இணைந்து கொள்ளுமாறு எதிர்க்கட்சியை நான் கேட்டுக்கொள்கின்றேன். இதனை நிறைவேற்றிய பின்னர் ஜனாதிபதித் தேர்தலா, பொதுத் தேர்தலா எது தேவை என்பதை தீர்மானிக்க முடியும். அதுவரை நீங்கள் காத்திருக்கத் தயாரா? இல்லையா? என்று கேட்கின்றேன். உங்களுக்கு இதை ஏற்கவோ? நிராகரிக்கவோ? முடியும். குறிப்பாக ஜூன் நடுப்பகுதிக்குள் நாட்டின் வருமான நிலைமையை குறித்து கருத்தில் கொள்ள வேண்டும். அதிலிருந்து முடிவுகளை எடுக்கலாம். குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதி கிடைத்தவுடன் ஒப்பந்தத்தை சபையில் சமர்ப்பித்து முன்மொழிவொன்றை கொண்டு வருவேன். அதை சபை ஏற்பதா? இல்லையா? என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள். இன்றேல் எங்களுக்கு மாற்று வழியைக் தாருங்கள். அதன் பிறகு எதிர்கால பயணம் மற்றும் திட்டங்கள் தொடர்பில் நாம் புதிய வரைபு ஒன்றை சமர்ப்பிக்க இருக்கின்றோம். அதனை தேசிய சபைக்கும் வழங்குவோம். நாடாளுமன்றத்தில் ஆராய்ந்து உடன்பாடு எட்டப்பட்ட பிறகு நீண்ட கால மற்றும் நடுத்தர கால திட்டத்தை முன்வைப்பேன். தற்போது, நாடாளுமன்றத்தின் தேசிய சபைக் குழுக்களிடமிருந்து பல அறிக்கைகள் கிடைத்துள்ளன. அதற்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன். ஆனால் 8 மாதங்கள் என்ற குறுகிய காலத்துக்குள் இப்பணியை எங்களால் முடிக்க முடிந்தது. அதைப் பயன்படுத்திக் கொண்டு முன்னேறுவோம்"

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## பொருளாதாரம், தேர்தல், மீன்பிடி – குழப்பத்தில் அரசியல் தலைவர்கள்

நாட்டை கட்டியெழுப்ப வேண்டிய கட்டாய தேவையில் நாட்டின் ஜனாதிபதி செயற்பட வேண்டும் என்று நிர்ப்பந்தித்துள்ள நிலையில் தமிழ், சிங்கள அரசியல் தரப்பினர்கள் இதற்குள் தமது அரசியலை செய்து கொண்டிருப்பது வேடிக்கைக்குரிய விடயமாகும். அதே நேரத்தில் பாராளுமன்றத்தில் மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்த சில சர்ச்சையான கருத்துக்கள் அதற்கு பதிலளிக்கும் வகையில் திலீபன் எம்பி யின் சர்ச்சையான கருத்துக்களை வெளியிடுவதும் குறிப்பாக அரசாங்கத்தின் சப்பாத்துக்களை துடைக்கின்ற நடவடிக்கையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா செய்துவருகின்றார் என்றும் சாணக்கியன் சுமந்திரனின் சப்பாத்தை துடைக்கும் செயலை செய்து வருகின்றார் என்றும் ஆர்கோசமான உரைகளை செய்தும் பிரயோசனமற்ற விதத்தில் நடைபெற்றுவருகின்றமை பாராளுமன்றத்தையே அசிங்கப்படுத்தும் ஒரு செயலாகும். மற்றுமொரு விடயமாக உள்ளூராட்சிமன்ற தேர்தல் இடம்பெற வேண்டும் என்றும் அவை நடைபெறாவிட்டால் மக்களின் நலன் சார்ந்த விடயங்களை செய்ய முடியாமல் போகும் என்றும் ஒரு தரப்பு கூறுகின்றது. மறு தரப்பு தேர்தலை வைத்தால் என்ன, விட்டால் என்ன என்ற நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றது. திறைசேரியில் பணம் இல்லை எவ்வாறு தேர்தலை வைப்பது என்பது ஒரு பிரச்சனை. (IMF) சர்வதேச நாணய நிதியத்தின் பணம் இந்த நாட்டிற்கு கிடைக்கும் என்பது ஜனாதிபதியின் உறுதிப்பாடாகும். ஆனால் குறித்த பணத்தை வேறு விடயங்களுக்கு செலவழிப்பதன் ஊடாக நன்மை கிடைக்கும் என்றும் ஒருவேளை உள்ளூராட்சிமன்ற தேர்தலின் ஊடாக தான் தோற்றுவிடுவேன் அவ்வாறு தோற்றுவித்தால் நலிவடைந்த அரசாங்கத்திற்கு எதிராக மீண்டும் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரும் சூழல் உருவாக்கப்படும். அதனால் தான் அதனுடைய ஆட்சி கவிழ்க்கப்படும் என்ற ஒரு பயம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. மக்கள் ஆதரவு இன்றி மக்கள் பிரதிநிதிகளின் ஆதரவோடு பாராளுமன்றம் நுழைந்து பிரதமராகி ஜனாதிபதியாகி உலக வரலாற்றில் ஒரு சாதனையாளராக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் திகழ்கின்றார். எது எவ்வவாறாயினும் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலைமைகளை ஓரளவேனும் நிவர்த்தி செய்திருக்கின்றார் என்றே கூற வேண்டும்.

குறிப்பாக டொலர், பெற்றோல், கேஸ் போன்ற பிரச்சனைகளினால் மக்கள் பாதிக்கப்பட்ட நிலையில் தெருக்களில் எரிபொருள்களுக்காக இறங்கி நின்ற மக்களுக்கு தற்பொழுது விலைவாசிகள் அதிகரிக்கப்பட்டாலும் பொருட்களை இலகுவாக பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகளை நாட்டின் ஜனாதிபதி ஏற்படுத்திக்கொடுத்திருக்கின்றார். எனினும் இந்த நாடு பொருளாதார ரீதியில் பழைய நிலைக்கு திரும்பவில்லை என்பது பலரதும் எதிர்பார்ப்பாகும். அதனை முன்வைத்தே அடுத்தகட்ட நகர்வுகளை நகர்த்த வேண்டும் என்பதை தமிழ் அரசியல் தரப்புக்கள் செயற்படுகின்றன.

குறிப்பாக உள்ளூராட்சிமன்ற தேர்தலை தவிர்த்து மாகாணசபைத் தேர்தலை அல்லது ஜனாதிபதி தேர்தலை வைக்க வேண்டும் என்பது இன்றைய அரசாங்கத்தின் நிலைப்பாடு. தமிழ் தரப்புக்களை பொறுத்தவரையில் மாகாணசபை தேர்தல் அல்லது உள்ளூராட்சிமன்ற தேர்தலை வைத்தால் அது தமிழ் மக்களின் பக்கம் பலமாக இருக்கும் என்பது சிலரின் கருத்து. பதவி மோகங்களிற்காக தமது கதிரைகளை தக்கவைத்துக்கொள்வதற்கு முன்நின்று களமிறங்கி ஏதாவது ஒரு தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தி வருகின்றனர். இது இவ்வாறிருக்க பூகோள ரீதியிலான பிரச்சனையில் இலங்கை அரசு சீனா, இந்தியா, அமெரிக்கா நாடுகளின் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாகியிருக்கின்றது. குறிப்பாக கச்சைதீவு விவகாரம், இலங்கை சீன மயமாக்கல் போன்ற விடயங்களில் அந்நிய நாடுகள் இலங்கையை ஆக்கிரமிக்கின்ற ஒரு சூழல் ஏற்படுத்தப்படுகின்ற நிலைமையும் காணப்படுகின்ற இடத்தில் இந்த நாட்டில் அனைத்து வளங்களிலும் கட்டியெழுப்ப வேண்டுமாக இருந்தால் தமிழ் மக்களுக்கான தீர்வுதிட்டம் என்ற விடயத்தில் அரசாங்கம் கவனம்செலுத்த வேண்டும் என்பது இன்றைய அரசியல் நிலைமையின் யதார்த்தம் இல்லையேல் போராட்டம் என்பது வேறு வடிவில் மாற்றம் பெற்று திணிக்கப்படுகின்ற ஒரு தீர்வு பொறிக்குள் இலங்கை அரசு தள்ளப்படும்.



பல்துறை எழுத்தாளர்
புயல் பெ.ஸ்ரீகந்தநேஷன்




# கல்லறைப் பூக்கள்

"ஓம் அப்பா"
"என்ன வந்தாலும் உனது இலட்சியத்தை நீ அடைந்து உலகம் முழுவதும் சேவையும் தொண்டும் செய்யணும்?. 'நீ அழலருகே சேர்ந்த மலர்' போல இல்லாமல் உன்னுடைய இலட்சியத்தை அடையும் வரை முயற்சி செய்"
"அப்பா சொக்கா வாங்கித் தா" - கமலி செல்ல மொழியில் கேட்டு விட்டு பக்கத்து கட்டிலில் மூச்சு பேச்சு அற்று கிடந்த தாயைப் பார்த்து, கண்ணீர் வடித்த சிறுமியின் பக்கம் பார்வையைத் திருப்பினாள்.
"தம்பி, சாத் எல்லாம் சரி இப்ப எங்க இருக்கிங்க?"
"யோகபுரம் பள்ளிக்கூத்தில்" என்றான்.
யோகபுரம் என்றதும் கனகருக்கு பத்திரிகை ஞாபகம் வரவே. குட்டித் தூக்கம் களைந்து கண்களை விழித்துப் பார்த்தார். எல்லாம் பகற் கனவே. அதே வைத்தியசாலை. அதே இடம் மனைவி பிள்ளைகளைக் காணவில்லை. கடல் போல அறிவும் குயில் போல குரலும் உடைய அந்த தாதி கண்களுக்கு எட்டிய தூரத்தில் இல்லை. வைத்தியசாலை இலவச உணவே கனகரின் பசியை ஆற்றியது. ஐந்து நாட்களுக்குப் பின்னர் கனகர் சுயமாக எழுந்து நடந்தார். 'பருந்தும் நிழலும்' போல இருந்த தனது குடும்பத்தைப் பிரிந்து மழையில் நனைந்த காய்ச்சல்காரன் மாதிரி உள்ளம் உருகினார்.

*04.*

ஆறாம் நாள் தலைமை வைத்தியர் வந்தார்.
"அய்யா காலில் நோவு எதுவும் இருக்கா?" - இரத்தினச் சுருக்கம் போல கேட்டார்.
"இல்லை அய்யா"
"நாளைக்கு நீங்க போகலாம்"
"குடிக்க மருந்து இருக்கா?"
"எழுதித்தாறன் ஓப்பிட்டியில எடுங்கள்"
"திரும்ப வரணுமா?"
"ஏதும் வருத்தமா இருந்தா வாங்க?"
"நன்றி அய்யா"
"கட்டாயம் 'டிக்கட்'ட எழுதி எடுத்துக் கொண்டு போங்க"
"தன்னுடைய பகற் கனவு பலிக்க போவதை எண்ணி ஒளியைக் கண்ட இருள் போல அவரின் முகம் சிறிது நேரம் பிரகாசித்தாலும் பகற் கனவு பலிக்குமா? - எண்ணி சூரியன் முன் மின்மினி போல முகத்தில் ஏக்க உணர்வு தென்பட்டது.
"தம்பி ஐந்து நாளுக்கு முதல் தந்த பேப்பர் இருக்கா?"
"ஓம் அய்யா இருக்கு"
"தம்பி அதைத் தா. நாளைக்கு நான் என்ர குடும்பத்தைத் தேடி போறன். 'பேப்பரில்' என்ர பிள்ளைகள் இருக்கற 'அட்ரஸ்' இருக்கு. இஞ்ச 'டெலிப்போகூன்' வசதியும் குறைவு. அதை வச்சித்தான் 'அட்ரஸ்' சரியாக பிடிக்கலாம்."
பத்திரிகையை வாங்கி மடித்து கைப்பையில் வைத்தார். நான்காவது பக்கம் தவறுதலாக கிழிக்கப்பட்டதை அவர் அவதானிக்கவில்லை. கிழித்தவரும் ஊழித் தீப்போல யாருக்கும் ஒன்றும் சொல்லாமல் தன் உறவுகளுக்கு அஞ்சலி பூக்கள் தூவ சென்று விட்டார். கனகருக்கு அன்றைய தினம் வாயு போல வேகமாக சென்றது.

*05.*

ஏழாம் நாள் கனகர் இடக்கையில் சிறிய துணிப்பையுடனும் வலக்கையில் பத்திரிகையுடனும் ஒரு வயதான வழிப்போக்கனின் துணையுடன், மாங்குளத்திலிருந்து மல்லாவிக்குச் சென்ற கண்ணாடிகள் இல்லாத மினி பஸ்ஸி லிருந்து மல்லாவி டவுணில் இறங்கினார்.
"அய்யா இந்த ஊரா?"
"ஓம் தம்பி"
"எங்க அய்யா இந்த தள்ளாடும் வயதில் போயிட்டு வாறிங்க?"
"தள்ளாடுற வயசுக் கிழவன் இல்லாட்டி இப்ப மினிபஸ்ஸிலிருந்து இறங்கியிருப்பாயா?. பகிடிக்குத் தம்பி. நான் இந்த எம்பது வயசிலையும் கச்சான் வித்துதான் சீவிக்கிறன். அதான் தம்பி மாங்குளத்திற்குப் போயிற்று வாறன். 'கால்ல ஷெல்பட்டது' என்று சொல்கிறாய். எங்க போகணும் சொல்"
"யோகபுரம் ஸ்கூலுக்கு"
"சரி வா இடத்தைக் காட்டுறன். ஸ்கூலுக்குப் பக்கத்திலதான் என்ர வீடும் இருக்கு. பக்கத்தில்தான் ஸ்கூல் இருக்கு பையப் பைய நடந்து போவம்"
"அய்யா உங்களுக்குச் செந்தக்காரர், பிள்ளைக் குட்டிகள் யாரும் இல்லையா?"
"தொண்ணூறாம் மாண்டு இடப் பெயர்வோட பல பேர் காணாம பேயிற்றாங்க. இரண்டு மகள்மார்கள் இருக்கிணம் அவர்களிட பாடும் பெரும் பாடுதான். மருமகன்கள் உதவாதவர்கள். என்ர பாட நானே பாக்கிறன் இதில் என்ன இப்போ?"
"என்ன தம்பி முழங்கால் நோவுதா? இவ்வளவோட போயிற்று உனக்கு ஊழ்வினை நன்றாக இருக்கு போல"
ஊழ்வினை என்றதும் தனக்குத் துன்பத்தில் அன்னைபோலும் ஆறுதல் மொழி மொழிந்த தாதியார் ஞாபகத்திற்கு வந்ததும் அவளிடம் சொல்லாமல் வந்து விட்டோமே என்பதை எண்ணி மனம் சற்று சஞ்சலப்பட்டார், கனகர். சிறிது மௌனம் சிறிது நடையில் தளர்வு சிறிய யோசனை.
"என்ன கவலை? வா...வா..." - முதியவர் கூறி, கனகரின் வலக்கையைப் பிடித்து நடப்பதற்கு துணை புரிந்தார்.
"ஒன்றுமில்லை"
"காயப்பட்டு ஆஸ்பத்திரியில இருந்துட்டு, உறவுகளைத் தேடி போறாயா?"
"எப்படி அய்யா சரியா சொல்லுறீங்க?"
"ஒரு கிழமையா இந்த றோட்டில உன்ன மாதிரி எத்தனைப் பேர பாத்திருப்பன்"
"எல்லாம் அனுபவம்தான அய்யா! அதாலதான் இந்த வயசிலையும் ஒழைப்பில நம்பிக்கை"
"பள்ளிக்கூட வாசல் வந்திட்டுது நீ போய் பாரு இருப்பாங்க. அடுத்த வளவுதான். என்ர வீடு. அந்தா பாரு தெரியுது கிடுகு குடிசை. நேரம் கிடைக்கேக்க வீட்டுப்பக்கம் வந்துட்டு போ..."
"மெத்த பெரிய உபகாரம் அய்யா போயிட்டு வாங்க"
.........................?....................................
"யார பார்க்கப் போறிங்க?" என்றான், வாயிற் காவலன்.
"பிள்ளைகள்" என்றவாறு கனகர் பத்திரிகையின் இரண்டாம் பக்கத்தைக் காட்டினார்.
"நீங்கள் தான் கனகரா?"
"ஓம்"
"ஜியஸ், உங்கள வந்தா இஞ்ச பதிய சொன்னாரு. உள்ள மூன்றாம் நம்பர் அறைக்குப் போங்க ஜியஸ் இருக்கிறார்."
"எக்ஸியுஸ்மி ஜியஸ், மே ஐ கம் இன்?"
"yes you may come in"
"ஜியஸ் நான் என்ர பிள்ளைகளைப் பார்க்கணும்"
"what is you name?"
"மை நேம் இஸ் சின்னத்தம்பி. கனகர்"
"சாத்தும் கமலினியும் உங்கட பிள்ளைகளா?"
"ஓம் எப்படி இருக்காங்க?"
"விடிய சாப்பாடு முடிஞ்சு அங்க பாருங்க கிறவுண்டுள பிள்ளைகள் விளையாடுறாங்க. அதற்குப் பக்கத்தில் பெரிய கொட்டாம் மரம் ஒன்று நிக்குது. அதற்குக் கீழ உங்கட பிள்ளைகள் யோசிச்சுக் கொண்டு இருக்கிறாங்க"
கனகர், தூரத்தில் இருக்கும் பிள்ளைகளைக் கண்டதும் திடீரென எழுந்து, "என்ர செல்லங்களே" என சப்தமிட்டு ஓடு முற்பட்ட போது கால்கள் இடம் கொடுக்கவில்லை, கிராமசேவையாளரும் அனுமதிக்கவில்லை.
"ஸிட் டவுண். உங்கட டீற்றல் பதியணும் கொஞ்சம் பொறுங்கள்"
"என்ன டீற்றல?"
"உங்கட பிள்ளைகளையும் மனைவியையும் எப்படி பிரிஞ்சிங்க?"
"நானும் மனைவியும் பிள்ளைகளும் கிளாலிக் கடற்கரையில் இரவு வேளையில் வாகனத்தின் வரவுக்காக காத்துக்கொண்டிருந்தனாங்கள். சிறிதும் அசைய முடியாது சனக்கூட்டம். அந்த இரவில் ஆள ஆளுக்கு முகம் தெரியாது. திடீரென 'பிளேன்' ஒன்று வரும் சத்தம் கேட்டது. இருள் மேலும் கருமையாகியது. இடை இடையே எரிந்த விளக்குகள் எல்லாம் முழுமையாக அணைந்தன. 'பொம்..பொம்' என்று சத்தம் கேட்டது. நாங்கள் சனக்கூட்டத்திற்குள்ளே நிலத்தில் படுத்துக் கிடந்ததுதான் தெரியும். என்னைத் தூக்கிவாரி போட்டது. கால்கள் லேசாக குளிர்ந்தன கையில் தடவிப்பார்த்தேன் இரத்தம் கசிவதை உணர்ந்தேன். என் பிள்ளைகள் மனைவியைக் காணவில்லை, கூப்பிட்டுப் பார்த்தேன். சத்தத்தையும் காணவில்லை." - கண்ணீர் வடித்தார்.
"சரி நீங்க போயிற்று பிள்ளைகளப் பாருங்க"
"ஜியஸ், நானும் பள்ளிக்கூடத்தில இருக்கலாம்ந்தானே?"
"ஓம் மண்டபம் மூன்றில் நீங்களும் பிள்ளைகளும் இருங்க. பாய், சாப்பாட்டுக் கோப்பைகளுக்கும் பதிஞ்சிரிக்கு கொண்டு வந்து தருவாங்க"
"தெங்யூ ஜியஸ்"
மெது மெதுவாக கனகர் தனது பிள்ளைகளை நோக்கி வைத்த கண் வாங்காமல் நடந்து சென்றார். பலசரக்குக் கடையைப் பூட்டி வீட்டுக்குப் போகும் போது பிள்ளைகளுக்கு ஏதாவது தின்பண்டங்கள் எடுக்காமல் போகமாட்டார். இப்போது வெறுங்கையோடு செல்வதை எண்ணி அனலிடைப்பட்ட மெழுகுபோல அவரின் உள்ளம் துன்பத்தில் உளைந்தது.
மைதானத்தில் விளையாடிய சிறுவன் ஒருவன் பின்பக்கமாக ஓடிவந்து, கனகரோடு இடிபட்டதும் அவர் "மகன் அப்பு சாத், மகள் கமலி நான் அப்பா வந்திருக்கன்" என கண்ணீர் மல்க கத்திக்கொண்டு, விழப்போகின்ற போது மைதானமே மௌனம் கொண்டது. சாத்தினதும் கமலியினதும் காதுகளில் தந்தையாரின் சப்தம் விழுந்ததும். சப்தம் வந்த பக்கம் திரும்பி தந்தையை கூப்பிடு தூரத்தில் இருப்பதை உணர்ந்து, மின்னல் வேகத்தில் "அப்பா...அப்பா..." எனக் கதறிக் கொண்டு ஓடி வந்து அவரை விழாமல் தங்கள் கரங்களினால் தாங்கினார்கள். கனகரும் இருவரையும் கட்டித் தழுவி முத்தமிட்டார்.
சிறிது அமைதி சிறிது கலக்கம் சிறிது பிரமை.
"அப்பா எங்க அப்பா போயிருந்திங்க. அம்மா எங்க அப்பா?.

தொடரும்...



# மன்னாரில் மண் மாஃபியாக்கள் சுட்டுக்கொலை என்ற செய்தியே இனி வெளிவரும்

இன்று குறிப்பாக மன்னார் மாவட்டத்திலே மண் மாஃபியாக்களினுடைய அத்துமீறல்கள் கூடுதலாக இடம்பெறுவதாக ஊடகங்கள் வாயில்களால் அறியமுடிகின்றது. அந்த அடிப்படையில் மண் மாஃபியாக்களை யார் உருவாக்குகின்றார்கள். ஏன் அவ்வாறு அதிகாரம் கொண்டவர்களாக வருகின்றார்கள் இதற்கு உறுதுணையாக யார் செயற்படுகின்றார்கள் என்பதனை முதலாவதாக கண்டறிந்து கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்ககைளை எடுத்தால் மட்டுமே மண் மாஃபியாக்களை மன்னார் மாவட்டத்தில் மட்டுமல்ல இலங்கையின் முழு பாகங்களில் இருந்தும் அவர்களை இல்லாதொழிக்கின்ற நடவடிக்கைகளை செய்ய முடியும். ஆனால் மாஃ பியாக்கள் இல்லாது அரசாங்கம் இயங்குவது என்பது நடைமுறையில் சாத்தியமற்றது ஒன்று. இன்று இருக்கின்ற 200 நாடுகளில் மாபியாக்கள் வெவ்வேறு பெயர்களில் வெவ்வேறு அடைமொழிகளை வைத்துக்கொண்டே இயங்கி வருகின்றன. இன்று தீனா குரூப். ஆவா குரூப் என இலங்கையில் உருவாக்கப்பட்டதெல்லாம் அரச பின்புலங்களிலே உருவாக்கப்பட்டது தான் இந்த குழுக்கள் எல்லாம். எனவே இந்த குழுக்கள் காலப்போக்கில் இல்லாமல்போகின்றன. பொலிஸ். இராணுவம் STF, TID, CID, NIV போன்ற அனைத்து தரப்புக்களுடனும் தொடர்பினை வைத்திருப்பதாக அல்லது அவர்களுடன் நாங்கள் தொடர்பில் இருப்பதாகவும் தொடர்ந்தும் கூறிக்கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் தமது தேவைக்காக மட்டும் பயன்படுத்திவிட்டு சந்தர்ப்பம் சூழ்நிலைகள் வருகின்ற பொழுது அவர்களின் கதையை முடித்து விடுகின்ற ஒரு நடவடிக்கையை தான் அரச பயங்கரவாதம் என கூறுகின்றதை இந்த இலங்கை அரசு செய்து வருகின்றது. மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக்காலத்தில் இருந்து இதுவரையிலும் கிட்டத்தட்ட 258 மண் மாஃபியாக்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருக் கின்றார்கள். அதில் மைத்திரிபால சிறிசேனவின் தம்பியும் அடங்குகின்றார் அவரை வலிராஜா என்றழைப்பார்கள் அவரும் தாக்குதலுக்கு இலக்காக்கி கொல்லப்பட்டிருந்தார். வெளிநாட்டிலே மைத்திரிபால சிறிசேன இருந்த சமயத்திலே அவரது மரணச்சடங்கிற்கு செல்லவில்லை என்பதும் ஒரு அம்சமாக இருக்கின்றது.

எனவே ஆரம்பத்தில் இருந்து பல மாஃபியாக்களை எடுத்துக்கொள்ளலாம். அதுபோன்று வடக்கு கிழக்கு பிரதேசங்களிலே இயங்குகின்றவர்கள் கொழும்பில் இருக்கின்ற அரச புலனாய்வு கட்டமைப்புக்களுடனும் அல்லது இராணுவ உயர் அதிகாரிகளுடனும் அல்லது அரசாங்கத்தினுடைய ஆட்சியாளர்களின் நேரடி அனுசரணையிலும் இயங்கக்கூடியவர்கள் அவர்கள் காலத்துக்கு காலம் கட்சி மாறுவார்கள் கட்சி மாறிக்கொண்டு யார் அவர்களுக்கு மண் கடத்துவதற்கு உதவி புரிகின்றார்களோ அந்த கட்சியை ஆதரித்து அவர்களுக்காக வாக்கு வங்கிகளை அழிப்பார்கள் தற்பொழுது குத்துவிளக்கு சின்னத்தில் அவர்கள் உள்ளூராட்சி மன்ற தேர்தலிலே போட்டியிடுவதாக கூட தகவல்கள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. எது எவ்வாறிருப்பினும் இந்த மண் மாஃபியாக்களை அரசாங்கம் சிறிது காலம் பயன்படுத்திவிட்டு அவர்களை சுட்டுக்கொல்வது என்பது தான் நடைமுறையாக இருக்கின்றது. எனவே இந்த மண் மாஃபியாக்கள் ஒன்றை புரிந்துகொள்ள வேண்டும் தமிழினமாகிய எங்களை அவர்கள் பயன்படுத்திவிட்டு எமது உயிருக்கே உலைவைத்து விடுவார்கள் என்ற சூழல் உருவாகும். அதுபோன்று இங்கு பெரிதாக பேசப்பட்ட ரவுடிகள் மற்றும் கந்துவட்டிக்கு பணம் கொடுப்பவர்கள் பேசப்பட்டார்கள்.

இவ்வாறு பேசப்பட்ட ரவுடிகள் அனைவரையும் ஏதோ ஒரு வகையிலே இந்த அரசாங்கம் இல்லாமல் ஒழித்திருக்கின்றது. அதற்கு காரணம் என்று கூறுவதற்கு கூட எதுவுமே இல்லை ஆனால் அந்த பைல்களை கூட அவர்கள் தேடமாட்டார்கள். அவர்கள் இறந்ததன் பின் பலரும் அன்பின் நிமித்தம் வருவதல்ல இப்படிப்பட்ட ஒரு கொடூரன் இறந்து விட்டான் என்பதைப் பார்ப்பதற்காக வருவார்கள் கொடூரனாக மாற்றுபவர்களும் இந்த அரச பயங்கரவாதிகள் என்று தான் இவர்களையும் குறிப்பிட வேண்டும். அரசாங்கத்தில் உள்ள ஒரு சிலர் தமது தேவைக்காக உதாரணமாக குறித்த பிரதேசங்களிலே கட்டுமானங்கள் வளரக்கூடாது அந்த பிரதேசங்களிலே கல்வி செழித்தோம்பக்கூடாது. குடு. கஞ்சா போன்ற பாவனைகள் அனைத்தும் சாதாரண மட்டத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்க வேண்டும். மண் கடத்தல்கள். கிரவல் கடத்தல்கள். மரம் கடத்தல்கள் போன்ற சம்பவங்களும் இடம்பெறவேண்டும். அன்றாடம் பொலிஸார் நீதிமன்றிற்கு ஒருசிலரை சமர்ப்பித்துக்கொண்டிருக்க வேண்டும் சிந்திக்கவிடக்கூடாது அந்த விதத்திலே நல்ல சிந்தனையுடன் படிப்பிலே அல்லது உயர்வதாக இருந்தால் அவர்களை போராட்ட சிந்தனைகளை சிந்திக்க விடாது அவர்களை குடி போதையிலும் மது போதையிலும். கடத்தல் சம்பவங்களிலும் ஈடுபட வைத்து விட்டால் இவர்கள் போராட்டத்திற்கு அதாவது மக்கள் புரட்சிக்கு போராட்டத்திற்கு இவர்கள் வரப்போவதில்லை என்பது அரசாங்கத்திற்கு திட்டவட்டமாக தெரியும்.

எனவே அந்த பிரதேசங்களை தொடர்ந்தும் அவ்வாறான ஒருகட்டமைப்பில் வைத்துக்கொள்வது இன்று பார்த்தால் மன்னாரிலே குறித்த மண் மாஃபியாக்கள் வந்து அரசாங்கத்தோடு பணிபுரிகின்றவர்களைக்கூட காணியில் இருந்து வெளியேறுமாறு காண்பித்த காணொலிகளை பார்த்தால் அல்லது அங்கு வந்திருக்கின்ற பொலிஸ் உயர் அதிகாரிகளை பார்த்தால் அவர்களுக்கு இவர்கள் அடிமை போன்ற ஒரு காட்சித் தோற்றம் தான் தோற்றுவிக்கப்படுகின்றது. பொலிஸாருக்கு அதிலே எந்த ஒரு அதிகாரமும் இல்லை அவரை கைது செய்து சிறையில் அடைத்தாலும் மறுநாள் வெளியில் வரக்கூடியளவு செல்வாக்கை குறித்த நபருக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டிருக்கின்றது. இவர்களுடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட நேரடி தொடர்பினை வைத்திருக்கின்றார்கள். வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்களை காப்பாற்றுவதான செய்திகளும் தற்பொழுது வெளிவந்திருக்கின்றன. அரசாங்கம் கேட்கின்றது இன்று எங்களுக்கு 100 லோட் மண் தேவை என்று இதனை குறித்த மண் கடத்தல் காரர்களிடம் தான் அவர்கள் கூறலாம் என்னும் பொழுது அவர்களால் பணத்தை கூட கேட்டு பெற்றுக்கொள்ள முடியாது எனவே மண்ணை கடத்தி கொடுத்து அதனை அவர்கள் சீர் செய்வார்கள். பின் அதை பணமாக்கி கொள்வார்கள் இங்கிருந்து வேறு வேறு இடங்களிற்கு மண் விற்கப்படுகின்றது மன்னார் மாவட்டத்தையோ அல்லது வடக்கு கிழக்கை பொறுத்தவரையில் மண் மாஃபியாக்கள் எங்களது பகுதிகளுக்கு இந்த மண்ணை பயன்படுத்தக்கூடியளவில் அவர்கள் செயற்படுத்துவார்களாக இருந்தால் அது வரவேற்கத்தக்கது. மக்களுக்கு பிரயோசப்படலாம் அவரும் பிரயோசப்பட்டுக்கொள்ளலாம். ஆனால் மண் ஏத்துபவர்கள் அனைவரும் மண் மாஃ பியாக்கள் அல்ல. அவர்கள் மண் மாஃபியாக்களாக ஆக்கப்படுகின்றார்கள். குறிப்பாக 1 டிப்பர் மண் 50 ஆயிரம் ரூபாய் என்றால் அதில் 15 ஆயிரம் ரூபாய் யாருக்கு போகின்றது என்பது தொடர்பாக மண் ஏற்றுபவர்கள். விற்பவர்கள். வாங்குபவர்களிடம் கேட்டு விசாரித்தால் அது நன்றாக தெரியும். கடமையில் ஈடுபடுகின்ற பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களே இவ்வாறான கீழ் தரமான செயல்களை செய்கின்றார்கள். அதுபோன்று வழிமறிக்கின்ற பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் அதை செய்கின்றார்கள். அங்கு ரோந்து நடவடிக்கைகளுக்காக ஈடுபட்டுக்கொண்டு செல்லுகின்ற பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் அவ்வாறு செய்கின்றார்கள்.

இவ்வாறெல்லாம் இடம்பெறும் பொழுது தற்பொழுது மண்ணை தோண்டுகின்றார் மண்ணை விற்கின்றார் இந்த இடத்தில் வளங்கள் அழிக்கப்படுகின்றது என்றெல்லாம் கூறப்படுவது இதற்கு அனுமதி கொடுத்தவர்களை எதற்காக அனுமதி கொடுத்தீர்கள் என அவர்களை கைது செய்து உள்ளே தள்ளுவதன் ஊடாக இவ்வாறான மண் மாஃபியாக்களை தடுக்கலாம். மாஃபியாக்கள் என்பது ஒரு அரச இயந்திரம் இயங்குவதற்கு கண்டிப்பாக அவசியம். அரச இயந்திரம் இயங்குவதற்கான மாஃபியாக்கள் இயங்கா விட்டால் ஒரு போதும் இந்த அரசாங்கத்தை நடத்த முடியாது. அதாவது குறித்த அரசாங்கங்கள் தமக்காக இந்த மாஃபியாக்களை பயன்படுத்தி விட்டு அடுத்த அரசாங்கம் ஆட்சிக்கு வரும் பொழுது இந்த லிஸ்டை அவர்களிடம் கொடுப்பார்கள். இதில் நல்லபடியாக இவர்கள் இயங்குவார்களாக இருந்தால் இவர்களுக்கு இடமுண்டு அல்லது போனால் இவர்களை சங்காரம் செய்வதற்கான அனுமதியையும் கொடுத்துவிடுவார்கள். அதி பயங்கர மாஃபியாக்களாக செயற்பட்ட பலர் இன்று கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். எனவே இந்த அரசாங்கத்தை பொறுத்தவரையில் மண் மாஃபியாக்களை இல்லாமல் செய்ய வேண்டுமாக இருந்தால் அனுமதிப் பத்திரம் கொடுக்கப்படுகின்றவர்களுடைய இடங்களில் இருந்து அவை நிறுத்தப்பட வேண்டும். அல்லது அரசாங்கம் அந்த மண்ணை விற்பதற்காக குறித்த இடங்களிலே அரச காணிகளாக இருந்தால் ஒதுக்கப்பட்டு மண்களை எவ்வாறு வழங்குவது என்ற போமிட்டுக்களின் அடிப்படையிலே அதனை வழங்க வேண்டும். இவ்வாறு வழங்குவதன் மூலம் மட்டும் தான் இதனை கட்டுப்படுத்த முடியுமே தவிர மண் மாஃ பியாக்களாக உருவாக்கப்பட்டவர்கள் மீது அதிரடி நடவடிக்கைகள் எடுக்கின்றபொழுது நிச்சயம் GS, DS, RDS என இருப்பவர்கள் கூட அவர்களுடன் நேரடித் தொடர்பில் இருக்கின்றார்கள் அவர்கள் இவர்களுக்கு எதிராக செயற்பட தொடங்கினால் இவர்களுக்கு கொலை அச்சுறுத்தல்கள் விடுகின்ற நடவடிக்கைகளை அவர்கள் கட்டாயம் செய்வார்கள். ஏனென்றால் அவர்கள் கூடுதலான பணத்தை செலவளிக்கின்றார்கள் மண் மாஃபியா என்று ஒருவரை குறிப்பிடுவதாக இருந்தால் அந்த மண் மாஃபியா எவ்வளவு செலவழிக்கின்றது. பாதுகாப்பு கடமையாளருக்கு. அந்த பிரதேசத்தில் இருப்பவர்களுக்கு. பிரதேச செயலாளர் அல்லது கிராம உத்தியோகஸ்தருக்கு அதை எதிர்த்து வரும் ஏனையோருக்கு என அனைவருக்கும் லஞ்சம் கொடுத்து கொடுத்து தான் அந்த மண் எடுத்துச் செல்லப்படுகின்றது.

எனவே சில இடங்களில் 18 அடி கூட குழிகள் தோண்டப்பட்டு மண் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. அதனை மூடவும் இல்லை 5 அடிக்கு மேல் போகக்கூடாது என்றும் நிபந்தனைகள் இருப்பதாக கூட கூறப்படுகின்றது. எது எவ்வாறிருப்பினும் வடக்கு கிழக்கிலே அதிகரித்துவருகின்ற இந்த மண் மாஃபியாக்கள் ஒன்றை சிந்திக்க வேண்டும் கோவிலுக்கு நேந்துவிடப்படுகின்ற ஒரு மாடு அல்லது ஆடு என்ற அடிப்படையில் தான் எங்களை வைத்து அவர்கள் செயற்படுத்துகின்றார்கள் என்பதை நீங்கள் நன்கு அறிந்துகொள்ள வேண்டும். அவ்வாறு செயற்படுத்தினால் தான் குறிப்பிட்ட காலங்களில் அவருடைய கை ஓங்குமாக இருந்தால் அவர்களை என் கவுன்டரில் போட்டுத் தள்ளுவதற்கு மக்கள் மத்தியிலே ஆர்ப்பாட்டங்களை ஏற்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு ஏற்படுத்துவதன் ஊடாகத்தான் அதனை செய்ய முடியும் மக்கள் செய்துவிட்டார்கள் என்ற ஒரு நிலைப்பாட்டை கூட இன்று மன்னாரிலே மண் கடத்தல்களை தடை செய்ய சென்ற ஒரு GS கொல்லப்பட்டிருக்கின்றார். இவ்வாறு மண் மாஃபியாக்களால் பலரும் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். இதனை பொறுத்துக்கொள்ளாத மக்கள் முறைப்பாடு செய்யும் பொழுது அரசாங்கமே பார்க்கும் மக்களே இவர்களை கொலை செய்துவிட்டதாக மக்கள் மீது குற்றத்தை சாட்டி இவர்களது பைலை குலோஸ் செய்யும் நடவடிக்கையைத் தான் இந்த அரசாங்கம் இறங்கும். எனவே தமிழர் பிரதேசத்தில் நாங்கள் ஒரு வீரனை இழக்கின்றோம் என்று தான் கூறவேண்டும்.

அநியாயமாக ஒருவரது இறப்பு வருகின்றது இதற்கு அனுமதி கொடுத்து மண்ணை எடுத்து விற்பதற்கான ஒரு யாட்டை உருவாக்கி அரசாங்கம் கொடுத்தால் உண்மையிலே எல்லோரும் இதனூடாக பயனடைய வேண்டிய விதத்திலே அமையும். இதற்கு பெறப்படுகின்ற கட்டுமானங்கள் ஏன் பிடிக்கக்கூடாது அரசாங்கம் பிடிப்பதன் ஊடாக நிச்சயமாக அதனை வளம் பெற செய்ய முடியும். எனவே அரசாங்கம் இவ்வாறான நடவடிக்கைகளை செய்யாது பிரச்சனைகளை பூதாகாரமாக்கி இறுதியிலே கொலையுடன் முடியக்கூடிய நடவடிக்கைகளைத் தான் இந்த அரசாங்கங்கள் செய்து வந்திருக்கின்றன. செய்துகொண்டிருக்கின்றன என்பது யதார்த்த பூர்வமான உண்மையாக இருக்கின்றது.

எனவே மண் மாஃபியாக்களை கட்டுப்படுத்துகின்ற ஒரு அரசாங்கம் தன்னுடைய கட்டமைப்பு அந்தந்த பிரதேசங்களில் உருவாக்கப்பட வேண்டும் அவ்வாறு உருவாக்கப்படுகின்றபொழுது தான் இந்த மண் மாஃபியாக்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரமுடியும். 125 இடங்களிலே மன்னார் மாவட்டத்தில் மட்டும் மண் எடுக்கப்பட்டு பிற இடங்களிற்கு விற்கப்படும் சூழலிலே இன்று மன்னார் மாவட்டம் கடலால் சூழப்பட்ட பிரதேசம் அமிழ்ந்து போகக்கூடிய ஆபத்தான சூழ்நிலையிலே மன்னார் பிதேசம் இருக்கின்றன. எனவே மண் மாஃபியாக்களினுடைய நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக கட்டுப்படுத்த வேண்டும். அவ்வாறு கட்டுப்படுத்துவதன் ஊடாக மாஃ பியாக்களின் உயிரையும் காத்துக்கொள்ளமுடியும். ஏனென்றால் இவ்வாறானவர்களை அரசாங்கம் என் கவுன்டரில் போட்டுத்தள்ளும் என்பதிலும் மாற்றமில்லை.

**–துரியோதரன்–**

# டொலரின் வீழ்ச்சியும் சாதக,பாதக தன்மைகளும்



## ஊடறுப்பு

**கலாநிதி கணேசமூர்த்தி**

**கேள்வி : இலங்கையில் தற்போது இருக்கின்ற மிக பிரதானமான பேசுபொருள் அமெரிக்க டொலருக்கு எதிராக வேகமாக உயரும் இலங்கை ரூபாய்களின் பெறுமதி தொடர்பிலே இலங்கையில் இருக்கக்கூடிய சாதாரண மனிதர்கள் தொடங்கி தொழில் துறை சார்ந்து, வங்கி துறை சார்ந்திருக்கக்கூடியவர்கள் அதே போன்று இலங்கையில் இருக்கின்ற பொருளியல்துறை சார்ந்த பொருளியல் நிபுணர்கள் எல்லாம் கதைக்கின்ற விடயமாக மாறியிருக்கின்றது. அவை தொடர்பிலும் இந்த திடீர் மாற்றத்திற்கான காரணம் என்ன இவை உண்மையில் திண்ம நிலையான மாற்றமாகவா அல்லது திரவ நிலையான மாற்றமாகவா தற்பொழுது பார்க்கப்படுகின்றது?**

பதில் : தற்போதைக்கு இது திரவ நிலையில் தான் இருக்கின்றது இது வாயு நிலைக்கு வரக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக இருப்பது போல் தான் தெரிகின்றது திண்ம நிலைக்கு மாறுவதற்கான வாய்ப்புக்கள் இனி இதற்கேற்ப எடுக்கப்படும் நடவடிக்கைகளை பொறுத்து தான் தீர்மானிக்கப்படும். நாங்கள் சற்று பின்னோக்கி செல்லுவோமாக இருந்தால் 2022 இல் இலங்கை ரூபாயின் பெறுமதி 230 என்றளவிலே மத்திய வங்கி பிடித்துவைத்துக்கொண்டிருந்த நிலைமையின் போது திடீரென அந்த ரூபாயின் பெறுமதியை இலங்கை மத்திய வங்கி கைவிட்டுவிட்டது. எனவே இந்த நிலைமை காரணமாக ரூபாவை கொடுத்து டொலரை வாங்கும் அளவு டொலருக்கான தட்டுப்பாடு துரிதமாக அதிகரித்த காரணத்தினாலே அந்த டொலரின் விலையானது மிக சடுதியாக உயர்ந்து 400 ரூபாய் வரை என்ற அடிப்படையில் சென்றது. இதற்கு அடிப்படையில் அமைந்த காரணம் ஊக வணிக நடவடிக்கைகள் என்று சொல்லலாம்.

குறிப்பாக இந்த வங்கிகளுக்கு இடையிலே இடம்பெறுகின்ற டொலர் வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள் தான் அதற்குரிய கேள்விகளை தீர்மானிக்கப்படும். திடீரென மத்திய வங்கி தான் நிர்ணித்து வைத்திருந்த ரூபாய் பெறுமதியை தற்காலிகமாக கைவிட்டு வங்கிகளை குறிப்பிட்ட எல்லைக்குள் நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் என விட்ட காரணத்தினாலே வங்கிகள் ரூபாயை கொடுத்து அதிகளவு டொலர்களை வாங்கி வைத்துக்கொள்ள வேண்டிய ஒரு சூழல் ஏற்பட்டது அந்த காலப்பகுதியிலே. எனவே இந்த நடவடிக்கையை நாங்கள் கூறுவோம் ஊக வணிகத்தால் ஏற்பட்ட பீதி அல்லது பனிக் என்ற நடவடிக்கை தான் அப்பொழுது ஏற்பட்டது. தற்பொழுது மார்ச் மாதம் 1ஆம் திகதியில் இருந்து இலங்கை ரூபாயினுடைய பெறுமதி சடுதியாக அதிகரித்துக்கொண்டு செல்வதற்கும் மத்திய வங்கி எடுத்த ஒரு நடவடிக்கை தான் காரணமாக அமைந்திருக்கின்றது. இதனுடைய தொழினுட்ப ரீதியிலான விளக்கங்களை சாதாரண மக்கள் புரிந்துகொள்வது கடினம் என்பதனால் அந்த தொழினுட்ப ரீதியான விளக்கங்களுக்கு செல்லாமல் இரண்டு காரணங்களை சொல்லலாம் ஒன்று மத்திய வங்கி டொலர் விற்கப்படுகின்ற எல்லையை குறைத்திருக்கின்றது அதாவது மத்திய வங்கி முன்னர் அறிவித்த வீதத்தைவிட குறைத்து ஒரு வீதத்தை டொலரின் விலையை நிர்ணயித்திருக்கின்றது. அதற்கு மேலதிகமாக அதைவிட முன்னர் 2 ரூபாய் 60 சதம் குறைந்தளவோ அல்லது கூடுதலான அளவோ சந்தையில் நீங்கள் நிர்ணயித்துக்கொண்டிருந்த அந்த நிலையை மாற்றி 5 ரூபாய் கூடுதலாகவோ குறைவாகவோ விற்றுக்கொள்ளுங்கள், வாங்கிக்கொள்ளுங்கள் என்ற அடிப்படையிலே அதனை நிலைப்படுத்த விரும்பியது. இரண்டாவது காரணம் ஏற்றுமதியாளர்கள் தாங்கள் இலங்கைக்குள்ளே ஏற்றுமதி வருமானத்தின் மூலம் கொண்டுவருகின்ற டொலர்களிலே 25 வீதம் மத்திய வங்கியிடம் உடனடியாக கொடுத்து அதை ரூபாயாக மாற்றிக்கொள்ள வேண்டும. அதனை தற்பொழுதுமத்தியவங்கிகுறைத்திருக்கின்றது. எனவே கூடுதலான டொலர்கள் இறக்குமதி ஏற்றுமதி மூலம் உழைக்கின்ற டொலர்களை தற்பொழுது வங்கிகள் தம்வசம் வைத்திருக்க முடியும். அது மட்டுமல்லாது மத்திய வங்கி முன்னர் ரில்லியன் கணக்கிலே இலங்கை ரூபாயை மத்திய வங்கி அச்சிட்டு வெளியிட்டது எனவே அதற்கு சார்பாக டொலரின் விலை அதிகரிக்க வேண்டும் தற்பொழுது அச்சடித்து வெளியிடுகின்ற அளவு குறைந்திருக்கின்றது.

எனவே டொலருக்கு சார்பாக இலங்கையினுடைய ரூபாயின் விலை அதிகரிக்க வேண்டும். இது தவிர இன்னும் சில காரணிகள் உண்டு அவை ஒவ்வொன்றாக நாம் பட்டியலிட்டுக்கொண்டு சென்றால் அதிலே ஒரு காரணம் இலங்கை பொருளாதாரம் மிக மிக சுருக்கமடைந்திருக்கின்றது. அரசாங்கத்தின் கொள்கைகள் காரணமாக பொருளாதாரம் மிக சுருங்கிவிட்டது. குறிப்பாக பெரும்பாலான இறக்குமதிகள் செய்யமுடியாதளவிற்கு தடை செய்யப்பட்டுள்ளன. மற்றும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையில் இருந்து டொலர்களை வெளியில் கொண்டு செல்வதற்கான கட்டுப்பாடுகளும் மிக அதிகமாக இருக்கின்றன அதை அதிகரிக்கின்ற நடவடிக்கையைத் தான் அரசாங்கம் செய்திருக்கின்றது. ஒரு பக்கம் நாட்டினுடைய பொருளாதாரம் சுருங்கி இருப்பதன் காரணமாக இறக்குமதிகளுக்கான கேள்வி குறைந்திருக்கின்றது கட்டுபாடுகள் காரணமாக டொலருக்கான கேள்வி குறைந்திருக்கின்றது. எனவே பொருளாதாரத்தின் சுருக்கம் மற்றும் டொலருக்கான கேள்வி குறைவு என்னும் இரண்டும் சேர்ந்து டொலருக்கான கேள்வி வீழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது. அதே வேளை தற்பொழுது சுற்றுலாப் பயணிகளின் வருகை சற்று அதிகரித்திருக்கின்றது. அதே போல டொலர் பெறுமதி அதிகமாக இருக்கும் காரணத்தினால் இது ஒரு நல்ல சந்தர்ப்பம் இலங்கையிலே முதலீடு செய்வதற்கு என்று பலர் இலங்கையிலே ஒரு நிலத்தையோ கட்டடத்தையோ கொள்வனவு செய்வது இலாபகரமாக இருக்கும் என்ற அடிப்படையில் அதிக பேர் இலங்கைக்குள்ளே டொலரை கொண்டு வந்திருக்கின்றார்கள்.

எனவே டொலரினுடைய நிரம்பல் தற்பொழுது ஏற்றுமதி காரணமாக அதிகரித்திருக்கின்றது அதேபோல் உல்லாச பயணிகள் வருகை காரணமாக அதிகரித்திருக்கின்றது. வெளிநாட்டில் இருந்து உழைத்து அனுப்புகின்ற பண வருகை காரணமாக அதிகரித்திருக்கின்றது இதற்கு அப்பால் உலக வங்கியினுடைய இன்டநெசனல் பைனன்ஸ் கோப்பரேசன் என்று சொல்லக்கூடிய அமைப்பு இலங்கையின் மூன்று வங்கிகளுக்கு 400 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான நிதி உதவியை அத்தியாவசிய இறக்குமதிகளை செய்வதற்காக வழங்கப்போவதாக அறிவித்திருக்கின்றது. எனவே 400 மில்லியன் இலங்கைக்குள்ளே வரும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. இதற்கு அப்பால் அண்மைக்காலத்தில் சர்வதேச நாணய நிதியம் அதனுடைய 2.9 பில்லியன் கடன் பொதியினை கையெழுத்து இடப்போவதாக தற்பொழுது அறிவித்தல் வந்திருக்கின்றது. இவை அனைத்தும் இணைந்து இலங்கையில் டொலரினுடைய வருகை அதிகமாக இருக்கும் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தியிருக்கின்றது இதற்கு மேலதிகமாகவும் இன்னும் காரணங்கள் உண்டு இலங்கையினுடைய பங்கு சந்தை மற்றும் இலங்கையின் பிணைமுறி சந்தை ஏற்கனவே விற்ற பிணைகளை கொள்வனவு செய்வதற்கு பணமில்லை என அரசாங்கம் சொல்லிவிட்டது. ஆனால் மீண்டும் இந்த பிணைகளை தற்பொழுது விற்பனை செய்து கொண்டிருக்கின்றார்கள் அதனை வெளிநாட்டவர்கள் வந்து வாங்கிக்கொண்டும் இருக்கின்றார்கள்.

எனவே ஒருபக்கம் பிணைமுறிகளை பெற்ற கடன்களை செலுத்துவதில் இருந்து தளர்ந்து கொண்ட போதிலும் புதிய பிணைமுறிகளை அரசாங்கம் விற்றுக்கொண்டிருக்கின்றது அதன் மூலம் டொலர்கள் வந்து கொண்டிருக்கின்றது. அடுத்து பங்கு சந்தை நடவடிக்கைகளும் ஓரளவிற்கு வெளிநாட்டவர்களை கவரக்கூடியதாக மாற்றப்பட்டிருக்கின்றன. எனவே இவை அனைத்தும் ஒன்றிணைந்து இலங்கைக்குள்ளே டொலர் வருகையை அதிகரித்திருக்கின்றது அதேபோல் டொலர் வெளிச்செல்லுகின்ற வழிகளை அடைக்கப்பட்டிருக்கின்றன. இவையனைத்தும் சேர்ந்து டொலர்களை இலங்கைக்குள்ளே பதுக்கி வைத்திருக்கின்றவர்கள் எவரும் இருந்தால் இனி டொலரின் பெறுமதி குறையும் என்ற பீதியின் காரணமாக அவர்களும் அந்த டொலர்களை சந்தையில் விற்பனை செய்யும் நிலைவரும்.

**கேள்வி : நீங்கள் குறிப்பிட்ட காரணிகளுடன் ஒப்பிடும் பொழுது டொலரின் பெறுமதி இனிவரும் நாட்களில் பல்வகையான வீழ்ச்சிக்குள் செல்கின்ற பொழுது வங்கிகள் மத்திய வங்கியினுடைய கையிருப்பு அதிகரிக்கப்பட்டிருப்பதாக பொருள் கூடுமா இலங்கையில் இருக்கக்கூடிய வங்கியின் நிலைமைகள் ஸ்திரமடைந்திருப்பதாக அர்த்தம் கொள்ளமுடியுமா?**

பதில் : டொலர் கையிருப்புக்களை பொறுத்தமட்டிலே மத்திய வங்கி இந்த உள் வருகைகள் காரணமாக குறிப்பாக உலக வங்கியிடமிருந்து வருகின்ற டொலர் மத்திய வங்கியிடம் வரக்கூடிய வாய்ப்பு இல்லை என்றாலும் இறக்குமதிக்காக பயன்படுத்தப்படப்போகும் வாய்ப்புக்கள் தான் இருக்கின்றது. ஆனால் ஐ எம் எப் இடம் இருந்து நிதி வருமாக இருந்தால் அது மத்திய வங்கிகளின் இருப்புக்களை அதிகரிக்க உதவும் அதேபோல் செப்டம்பர் மாதமளவிலே இலங்கை வல்லரசிடமிருந்து பெற்றுக்கொண்ட 400 மில்லியன் அமெரிக்க டொலர்களை திருப்பி செலுத்த வேண்டிய நிலை இருக்கின்றது. இதனை முதலாவதாக செலுத்த வேண்டியிருக்கும். எனவே இந்த டொலர்கள் வங்கித்துறைக்குள்ளே அதிகளவில் உள்பாயப்பட்டு அதிகளவு இருப்பது போல் தோன்றினாலும் கூட இது இலங்கையினுடைய மத்திய வங்கியின் டொலர் கையிருப்புக்களை அதிகரிப்பதற்கு எந்தளவு பயன்படுத்தமுடியும் என்பது ஒரு கேள்விக்குறியான விடயம். ஒரு பக்கம் நாட்டினுடைய பொருளாதாரம் சுருக்கமடைந்திருக்கின்ற காலத்தில் கேள்விக் குறைவு தான் இந்த ஒரு நிலைமை ஏற்பட்டிருப்பதாக எடுத்துக்கொண்டாலும் கூட வழமைக்கு நாடு திரும்பும் பொழுது அதே போல் கடன் மீள் செலுத்தல்களை ஆரம்பிக்கும் பொழுது இந்த நிலைமைகளை தொடர்ந்தும் பேணமுடியாத நிலைவரும்.

எனவே வணிக வங்கிக்கிடையே டொலர் கைருப்புக்கள் போதியளவு இருக்கின்றது என்றோ அல்லது மத்திய வங்கியிடம் டொலர் போதியளவு கையிருப்புக்கள் இருக்கின்றது என்றோ பொருள் கொள்ளமுடியாது. ஆனால் தற்பொழுது ஏற்பட்டிருக்கின்ற இந்த நிலைமைகளை பயன்படுத்தி இலங்கைக்குள்ளே அதிகளவு உல்லாச பயணிகள் வருவார்கள் அதிகளவு முதலீடுகள் வரும் அதேபோல் இந்த ஐ.எம். எப் இனுடைய நிலைமைகளை பயன்படுத்தி அதனுடைய ஒப்பந்தத்தை பயன்படுத்தி நாடு வெளிநாடுகளில் இருக்கின்ற நிதிச் சந்தைக்கு திறந்து விடப்படும் என்ற ஒரு நிலை வருகின்ற பொழுது மேலும் கடன்களை பெறுவதன் மூலமாக டொலர் பாய்ச்சலை அதிகரிக்கலாமே தவிர பொருளாதாரத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு விரிவாக்கத்தின் காரணமாக உடனடியாக டொலர் உள்பாய்ச்சல்களை அதிகரிப்பது என்பது இலங்கையை பொறுத்தவரையிலே தற்போதைக்கு சாத்தியமில்லை.

தொடரும்...

# தமிழ் தரப்பு ஒன்றிணைந்து பயணிப்பதையே நாம் விரும்புகின்றோம் – மாவை



**கேள்வி : தமிழரசுக் கட்சியோடு இணைந்து பயணித்த தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் ஏற்பட்ட சில வாத பிரதிவாதங்கள் அல்லது வாக்குவாதங்களின் நிமித்தம் தாம் தனியே செயற்படுவதாக ஐந்து கட்சிகள் இணைந்து செயற்படும் நிலையை தோற்றுவித்த இந்த வேளையில் தமிழ் கட்சிகளுடன் ஒன்றிணைந்து செயற்படவே நாம் விரும்புகின்றோம் என நீங்கள் தெரிவித்திருந்தீர்கள். அது எந்த வகையில் இனி சாத்தியமாகும் அதனை எவ்வாறு நீங்கள் கடைப்பிடிக்கப்போகின்றீர்கள்?**

பதில் : தமிழ் தேசிய கூட்டமைப்பில் இறுதியாக ரெலோ, புளொட், இலங்கை தமிழரசுக் கட்சி ஆகிய மூன்று கட்சிகளும் மிக நீண்ட காலமாக ஒன்றாக செயற்பட்டுவந்திருக்கின்றன. அவர்கள் 2002 ஆம் ஆண்டுக்கு பின்னர் அப்பொழுது புளொட் இல்லாது விட்டாலும் விடுதலைப்புலிகளின் அனுசரணை கூட இருந்த காலம் அவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பாக இலங்கை தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் தேர்தல் காலத்தில் போட்டியிட்டு ஒற்றுமையாக இனத்தின் விடுதலைக்காக இணைப்பது என்ற தீர்மானத்தின் அடிப்படையில் நாங்கள் செயற்பட்டிருக்கின்றோம்.

இம்முறை உள்ளூராட்சி மன்ற தேர்தல் ஏனைய தேர்தல்களில் இருந்து வேறுபட்ட விதிமுறைகளை கொண்டிருந்த காரணத்தினால் சென்ற தேர்தல்களில் அடைந்த அனுபவத்தினாலும் வட்டார ரீதியாக 60 வீதமும் 40 வீதம் விகிதாசார அடிப்படையிலும் தேர்தல் பிரதிநிதித்துவத்தை கொள்ளுகின்ற ஒரு நடைமுறையில் எஞ்சிய வாக்குகள் பிரதிநிதித்துவத்தை பெறுகின்ற முறை தான் இந்த தேர்தல் முறை. தேர்தல் முறையை பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிராகரித்திருக்கின்றோம். இருந்தாலும் அது தற்பொழுது நடைமுறையில் இருக்கின்ற காரணத்தினால் ஒரு புதிய அணைகள் முறையை தேசிய கூட்டமைப்பில் அங்கம்வகித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் கலந்துரையாடல் இடம்பெற்ற பொழுது ஒரு பிரேரணையை முன் வைத்திருக்கின்றார். தனித்தனியாக ஒவ்வொரு கட்சியாக எங்களது கூட்டமைப்புஇருந்தாலும்தனித்தனியாக அல்லது கூட்டாக இந்த உள்ளுராட்சிமன்ற தேர்தலில் போட்டியிட்டால் கூடுதலான பிரதிநிதித்துவத்தை பெறலாம் என்ற கருத்தை முடிவு செய்யாது விட்டாலும் இலங்கை தமிழரசுக் கட்சியினுடைய செயற்குழு கூறிய பொழுது அந்த கருத்தை நாங்கள் தனித்தனியாக கேட்டதன் மூலம் கூடுதலான பிரதிநிதித்துவத்தை பெறக்கூடுமானால் நாங்கள் அதை பின்பற்றுவோம் என்றும் அதன் பின்பு பெற்ற பிரதிநிதித்துவங்களை கொண்டு தேசிய கூட்டமைப்பு மீண்டும் ஆட்சியை அமைத்து நிர்வாகத்தை பொறுப்பேற்கின்ற பொழுது அனைவருமாக இணைந்து ஒன்றுபட்டு நிர்வாகத்தை நடத்துவோம் என்ற கருத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். ஒற்றுமையுடன் இருக்க வேண்டும் என்றும் இலங்கை மத்திய தமிழரசுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் அந்த கருத்தை நாங்கள் அடுத்த இரண்டு தினங்களில் ஏனைய கட்சிகளோடு பேசுகின்ற பொழுது அவர்கள் அதில் விருப்பமில்லாமல் அல்லது ஏற்றுக்கொள்ளாது இருந்தபடியால் தமிழரசுக் கட்சி இருந்த அவகாசத்தில் நாங்கள் தொடர்ந்து தனித்தனியா போட்டியிடுகின்ற நடைமுறையை கடைப்பிடிக்க முயற்சித்துக்கொண்டிருந்த நேரத்தில் நாங்கள் அப்படியே செயற்படுவதற்கு தீர்மானித்து விட்டோம். அப்பொழுது நாங்கள் ஏனைய இரண்டு கட்சிகளுடன் கூடிப்பேசியிருக்கின்றோம்.

அப்பொழுது இவ்வாறு தான் நாங்கள் செயற்படுவோம் தனித்தனியாக போட்டியிட்டு பின் நிர்வாத்தை அமைக்கின்றபொழுது நாங்கள் ஒன்றாக சேருவோம் என்ற கருத்தை முன்வைத்து பேசியிருக்கின்றோம். அதில் தமிழரசுக் கட்சியினுடைய கருத்தில் ஏனைய கட்சிகள் விருப்பமில்லாமல் விட்டாலும் நாங்கள் எங்களுக்குள் முரண்பாடுகளை வளர்த்துக்கொள்ளாமல் நட்புறவோடு இந்த அடிப்படையில் தேர்தலில் வெற்றிபெற்ற பின் நாங்கள் ஒன்றாக செயற்படுவோம் என ஒரு கருத்துக்கு நாங்கள் வந்திருக்கின்றோம். அதன் பின் அடுத்த நாளே இனப்பிரச்சனையின் தீர்வை வைத்து ரணில் விக்ரமசிங்க அவர்களது அமைப்பில் செல்ல வேண்டி இருந்த பொழுதும் நாங்கள் அந்த விடயத்தையும் முதல் நாள் நடந்த தீர்ப்பிலே இனப்பிரச்சனை விடயத்திலும் ஏனைய பொதுப்பிரச்சனையிலும் ஒன்றுபட்டு தான் அரசாங்கத்துடனோ அல்லது சர்வதிகாரத்துடனோ செயற்படுவோம். இடைக்கால தீர்மானத்தை எடுப்போம். அந்த அடிப்படையில் ஒன்றுபடுவோம். என்ற கருத்தையும் ஏற்றுக்கொண்டபடியால் நாங்கள் அடுத்த நாளே ரணில் விக்ரமசிங்கவை சந்திக்கின்ற பொழுது நாங்கள் ஒன்றுபட்டு பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றோம்.

இந்த தேர்தல் காரணமாக தமிழரசுக் கட்சி தனியாகவும் ஏனைய கட்சிகள் ஒரு கூட்டாகவும் செயற்படுகின்ற பொழுது சில கருத்து பரிமாற்றங்கள் முரண்பாடுகள் ஏற்படாமல் இருக்க வேண்டும் என நாங்கள் தீர்மானித்த பொழுதும் சில விமர்சனங்கள் இருக்கத்தான் செய்கின்றது.

எனவே தான் நாங்கள் அந்த கேள்வியை எழுப்பிய பொழுது நான் கூறினேன் எவ்வாறாயினும் எங்களது அடிப்படை இலக்கு இந்த தேர்தல் அல்ல எங்களது விடுதலைக்காக ஒத்த கருத்தில் தமிழ் தேசிய கட்சிகளாக செயற்படுபவர்கள் இலக்கை அடைவதற்காக ஒன்றிணைந்து உழைப்போம் என்ற தீர்மானத்தை தொடர்ந்தும் கடைப்பிடிப்பதற்கு நாங்கள் எல்லா முயற்சிகளையும் எடுத்தும் இனத்தின் விடுதலைக்காக செயற்படுவோம் என்ற கருத்தை தான் நான் கூறியிருந்தேன்.

**கேள்வி : மீளவும் கூட்டமைப்பாக இணைய வேண்டுமாக இருந்தால் தமிழரசுக் கட்சி தான் ஒன்றிணைய வேண்டும் என்ற கருத்தை செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்திருந்தார். எனவே இது தொடர்பாக உங்களது கருத்து என்ன?**

பதில் : நாங்கள் அனைவரும் ஒன்றாக ஏற்கனவே இருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பாக செயற்படுவதற்கு அனைத்து முயற்சிகளையும் நாங்கள் எடுப்போம்.

**கேள்வி : இந்த தேர்தலுக்காக தான் கூட்டமைப்பு பிரிந்து சென்றனவா அல்லது தேர்தல் முடிந்தவுடன் மீண்டும் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றனவா?**

பதில் : நான் இப்பொழுது குறிப்பிட்டது மிகத் தெளிவானது தேர்தலில் தனித்தும் கூட்டாகவும் செயற்படுவதில் என்ன காரணம் என்றால் தற்பொழுது தேர்தல் நடக்குமா ? இல்லையா? என்றிருக்கின்றது. அதனால் தான் இனப்பிரச்சனை மீது நாங்கள் செயற்பட வேண்டிய அல்லது அதற்கான முயற்சிகளை எடுக்கின்ற பொழுது நாங்கள் தனித்தனியாக பேசத் தேவையில்லை என்ற கருத்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் வந்த பொழுதும் கூட இல்லத்தில் கஜேந்திரகுமார் உட்பட அனைவரையும் ஒன்றாக அழைத்து தான் அவர்கள் பேசியிருந்தார்கள். அதே மனப்பான்மையுடன் அவர்களது கருத்துக்கள் இருந்தும் நாங்கள் ஒன்றுபட்டுத் தான் இனப்பிரச்சனை ரீதியாகவும் இனம் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகள் ரீதியாகவும் ஒன்றுபட்டு செயற்படுவது தேவையாகவும் இருக்கின்றது என்பதனால் வேறு விவாதங்களை ஏற்படுத்தாது நாம் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்பதைத் தான் நான் குறிப்பிட்டிருந்தேன்.

**நேர்காணல் :இரணியன்**

# பெண்களும் மூலிகை சுகவாழ்வும்



**டாக்டர். வெற்றிவேல் சக்திவேல்**

B.S.M.S, P. G. Dip Pub Adm., M.Sc.

**பெண்கள் மூலிகை உணவுகளையும், மூலிகைத்தடுப்பு மருந்துகளையும், மூலிகை நோய் நீக்கும் மருந்துகளையும் உட்கொண்டு வருவதன் மூலம் சுகவாழ்வையும், நீண்ட ஆயுளையும் பெற்றுக்கொள்ளலாம்.**

## வெள்ளைபடுதல்

பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைபடுதல் நிலையில் அறுகம்புல்லுடன் மிளகும் சேர்த்து குடிநீராக்கி அருந்தும் போது சிறந்த பலனைக் காணலாம். மேலும் மோர், பால், தயிர் ஆகியவற்றுள் அறுகம்புல்லினை ஊறவிட்டு மிளகு சேர்த்தரைத்து வெள்ளைபடுதல் நிலையில் உட்கொள்ளலாம். அருகம்புல் ஒரு சிறந்த கிருமித் தொற்றுநீக்கி மூலிகையாகும். சந்தனச் சூரணமானது பாலுடன் சேர்த்து வெள்ளைபடுதலுக்கு பயன்படுத்தலாம்.





## தோல் நோய்கள்

குப்பிளாய் இலையுடன் மஞ்சளைச் சேர்த்து அரைத்துப் பூசுவதன் மூலம் கிரந்தியால் ஏற்படும் தோல் நோயில் (Eczema), காளாஞ்சுகப் படைநோய் அல்லது செதில் உரிப்படை நோயில் (Psoriasis) சிறந்த பலனைக் காணலாம். மஞ்சளானது தொற்று நீக்கி மூலிகையாகும். வேப்பிலை மஞ்சள் அவித்த நீர், வேப்பிலை மஞ்சள் களிம்பு என்பன கிரந்தியினால் ஏற்படும் தோல் நோயில் (Eczema) பயன்படுத்தலாம். வெண் குழியங்களில் இயோசினோபில் அதிகரிப்பை மஞ்சள் சூரணம் கட்டுப்படுத்தும்.

## பழைய நோ

மஞ்சளுடன் விராலி இலைகளை அரைத்து பற்றிட பழைய நோ தீரும்.



# மகளிர் தினம்



உடலுறுதி கொண்ட ஆணைவிட மனஉறுதி கொண்ட பெண் சிறப்பானவள். தாயாக மனைவியாக தங்கையாக மகளாக என உறவின் அனைத்து பகுதியாக உள்ள பெண்ணிற்க்கு இனிய மகளிர் தின வாழ்த்துகள்.

1975 ஆம் ஆண்டு மார்ச் 8ம் திகதியன்று சர்வதேச மகளிர் தினத்தை ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியது.

பெண்களைப் போற்றும் விதமாகவும், பெண்களின் முக்கியத்துவத்தை உணர்த்தும் விதமாகவும் மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது.

### மகளிர் தின சிறப்பு

ஒரு பெண் தன்னை தரம் உயர்த்துவது என்பது தனது குடும்பத்தையும், சமூகத்தையும் தரம் உயர்த்துவது ஆகும்.

முன்னைய காலத்தில் தான் பெண்கள் வீட்டில் முடங்கிகிடந்தார்கள். ஆனால் தற்போது பெண்கள் அனைத்து துறைகளிலும் சாதித்து வருகின்றார்கள்.

உதாரணமாக கூறுவோம் என்றால் அன்னை தெரஸா, இந்திரா காந்தி, கல்பனா சாவ்லா மற்றும் மேரி கோம் போன்ற பெண்ணினத்திற்கு பெருமை சேர்த்தவர்கள் ஆவார்கள்.

### பெண்ணின் பெருமை

ஆண்களை எதிர்கொள்வது சிரம்மஎன்ற நிலையிலிருந்து முன்னேறி அனைத்து துறைகளிலும் ஆண்களுக்கு நிகராக பெண்கள் சாதித்தே வருகின்றார்கள்.

பெண்கள் என்றாலே ஆசிரியர் மற்றும் செவிலியர் வேலைக்கு என்றே கூறுவார்கள். ஆனால் தற்போது பெண்கள் விமானம் ஓட்டுவது முதல் கணினி துறையில் கூட சாதித்து வருகின்றார்கள்.

### பெண்ணின் கல்வி

அன்றைய காலக்கட்டத்தில் தான் பெண்களுக்கு கல்வி தேவையில்லை என நினைத்து வீட்டு வேலை செய்யவிட்டார்கள். ஆனால் தற்போது பெண்களே கல்வியிலும் சாதித்து வருகின்றார்கள்.

குடும்பத்தை சரியான முறையில் நகர்த்தி செல்ல பொருளாதார நிலை அதிகரிக்க பெண்களுக்கு கல்வி அவசியமாகும். அதே போன்று பெண் கல்வி கற்றால் மட்டுமே பிரச்சினைகளை சரி செய்ய, மாற்று வழிகளை கண்டறிய நடைமுறை செயலை அறிய என பல நன்மைகள் காணப்படுகிறது.

### தாய்மை

கருவில் உருவான உயிரை பத்து மாதங்கள் வயிற்றில் சுமந்து மனதளவிலும், உடலளவிலும் பல மாற்றங்களை எதிர்கொண்டு குழந்தையை பிரசவிக்கும் வரை பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் அதிகம்.

ஆனால் அந்த பிரச்சனைகள் எதனால் ஏற்படுகிறது, அதை எவ்வாறு சரி செய்வதுஎன்பதைதெரிந்துகொண்டால் தாய்மை என்பது ஒரு பெரும் வரமாகவே இருக்கும். ஒரு குடும்பத்தின் விருத்திகாக மட்டும் பெண்ணை நினைக்க கூடாது. அந்த வலியினை ஒவ்வொரு ஆணும் உணர்ந்தால் பெண்களுக்கான துஷ்பிரயோகங்களும் குறையும்.

பெண்களை ஆண்களுக்கு நிகராக பார்த்தால் பெண்களுக்கு எந்தவொரு பாதிப்பும் ஏற்படாது. அவ்வாறு இல்லாதமையினால் தான் பெண்களுக்கான சாவால்கள் தொடர்ந்தவண்ணமே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**வீட்டு வேலைக்கு ஆட்கள் தேவை**

வவுனியா – கோயில் குளம் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றிற்கு பணிப்பெண் ஒருவர் உடன் தேவை.

தொ.பே :- 077 3142763

**நிறுவனத்திற்கு வேலைக்கு ஆட்கள் தேவை**

வவுனியாவில் இயங்கி வரும் பிரபல்யமான நிறுவனத்திற்கு பணிப்பெண் ஒருவர் உடன் தேவை. (வேலை நேரம் 8-4)

தொ.பே :- 077 6906182

**பணிப்பெண் தேவை**

வவுனியா நகரில் தாயை இழந்த 23வயதான பெண்ணுடன் சொந்தக்கடையை நடத்துவதற்கு உதவிபுரிய பணிப்பெண் ஒருவர் உடன் தேவை

தொ.பே :- 0704845366

## வாழ்வாளோ?

இடைவிடாமல் இவள் கேட்பது
இன்னும் கொஞ்சம் உரிமையைத்தான்
சம உரிமையைத் தான்!

தருவதாய் சொன்னவர்கள்!
தந்து விட்டதாய் சொல்கிறார்கள்!

கேட்கவும் உரிமையில்லாமல்
போலிச் சம உரிமையோடு
போலியாய் அவளும் வாழ்கிறாள்

எத்தனை நாள் வாழ்வாளோ போலியாய்!



# பிராந்திய செய்திகள்


## அரசாங்கத்தின் புதிய வரிக்கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து திங்கட்கிழமை போராட்டம்



அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் திங்கட்கிழமை (13) முதல் தொழிற்சங்கம் மற்றும் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பிக்க அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது. இதன்படி, மேல், தென், மத்திய மற்றும் கிழக்கு ஆகிய 04 மாகாணங்களை உள்ளடக்கிய அனைத்து வைத்தியசாலைகளிலும் அன்றைய தினம் காலை 08 மணி முதல் இந்த தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளதாக சங்கம் அறிவித்துள்ளது.

மேலும், வடக்கு, வடமத்திய, வடமேல், ஊவா மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணங்களை உள்ளடக்கிய அனைத்து வைத்தியசாலைகளிலும் எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 08.00 மணி முதல் இந்தப் பணிப்புறக்கணிப்பை அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன், எதிர்வரும் 15ஆம் திகதி நாடளாவிய ரீதியில் அனைத்து வைத்தியசாலைகளையும் உள்ளடக்கிய பணிப்புறக்கணிப்புப் போராட்டமொன்றை முன்னெடுக்க அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அன்று (10) இடம்பெற்ற விசேட மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக முட்டை விற்பனை செய்தவருக்கு அபராதம்!



ஹட்டன் நகரில் கட்டுப ்பாட்டு விலைக்கு அதிகமாக முட்டைகளை வி ற்பனை செய்த கடைக்காரர் ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட ்டுள்ளது. சந்தேக நபர் கடந்த 7ஆம் திக தி நுகர்வோர் சேவை அதிகாரசபையினரால் கை து செய்யப்பட்டு அன்று (10) ஹட்டன் நீ திவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

அங்கு அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதுடன், சந்தேக நபருக்கு மாவட்ட நீதிபதி பாரூக் டீன் ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதித்தார். சிவப்பு முட்டை ஒன்றை 52 ரூபாவுக்கும் வெள்ளை நிற முட்டையை 56 ரூபாவுக்கும் விற்பனை செய்யும் போது கடை உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## QR கோட்டா புதுப்பிக்கப்படும் தினத்தை மாற்றியதால் 300 இலட்சம் ரூபா செலவு குறைந்துள்ளது !



எரிபொருளுக்கான QR கோட்டா முறைமை புதுப்பிக்கப்படு ம் தினத்தை செவ்வாய்க்கிழமைக்கு மாற்றியதன் மூலம் மாதாந்த செலவை சுமார் 300 இலட்சம் ரூபாவால் குறைக்க முடிந்துள்ளதாக எரிசக்தி, மின்சக்தி அமைச்சர் காஞ்சன வி ஜேசேகர தெரிவித்துள்ளார்.

கொலன்னாவை, முத்துராஜவெல மற்றும் 11 இடங்களில் உள்ள டிப்போக்களில் 195 இலட்சம் ரூபாவுக்கு காணப்பட்ட நேரடி செலவும் மின்சாரம், நீர், தொடர்பாடல், சுத்தப்படுத்தல் உள்ளிட்டவற்றுக்கான 100 இலட்சம் ரூபா மறைமுக செலவும் மீதப்பட்டுள்ளதாக அமைச்சர் விடுத்துள்ள டுவிட்டர் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரமான QR கோட்டா முறைமைமைக்கு அமைவாக, எரிபொருள் விநியோகத்தை வாராந்தம் புதுப்பிக்கும் நாள் இதற்கு முன்னர் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவாக இருந்தது. எனினும், புதுப்பித்தல் நடவடிக்கை தற்போது ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## மின்சார கட்டணத்தை அதிகரித்தற்காக அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல்



தன்னிச்சையான மற்றும் சட்டவிரோதமான முறையில் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை செல்லுபடியற்றதாக்கக் கோரி பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க உச்ச நீதிமன்றத்தில் அன்று (10) அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

இந்த அடிப்படை உரிமை மனுவில் பிரதிவாதிகளாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் பலர் குறிப்பிடப்பட்டுள்ளனர். தனது மனுவை விசாரித்து இறுதித் தீர்மானம் அறிவிக்கப்படும் வரை மின்சாரக் கட்டணத்தை உயர்த்தும் முடிவை இடைநிறுத்த இடைக்கால உத்தரவு பிறப்பிக்குமாறு பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தனது மனுவில் மேலும் கோரியுள்ளார்.

## யாழில் வீட்டை உடைத்து திருட்டு - மூவர் கைது

யாழில் வீட்டை உடைத்து வீட்டு தளபாடப் பொருட்களைக் களவாடிய மூவரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர். இணுவில் பகுதியில் வைத்து சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். யாழ். சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் வீடொன்றை உடைத்து அங்கிருந்த வீட்டுத் தளபாடப் பொருட்கள் கடந்த மாதம் களவாடப்பட்டிருந்தன. அதனை அடுத்து வீட்டு உரிமையாளரால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த சாவகச்சேரி பொலிஸார் இணுவில் பகுதியில் வீடொன்றில் தங்கியிருந்த மூவரை கைது செய்துள்ளதோடு களவாடிய பொருட்களையும் மீட்டுள்ளனர். கைதானவர்கள் சாவகச்சேரி நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர்.

## புகையிரதத்தின் மலசலகூடத்தில் இருந்து குழந்தை மீட்பு!



அன்று (10) இரவு 7.00 மணியளவில் கோட்டை புகையிரத நிலையத்தில் கொழும்பு - மட்டக்களப்பு புகையிரதத்தின் மலசலகூடத்தில் இருந்து குழந்தை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. புகையிரத நிலைய அதிகாரிகள் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து, குழந்தை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## உயர்தர பெறுபேறுகள் இரண்டு வாரங்கள் தாமதமாகும்

உயர் தர பரீட்சை விடைத்தள்களை மதிப்பீடு செய்வோரின் வேலை நிறுத்தம் காரணமாக பெறுபேறுகளை வெளியிடுவது இரண்டு வாரங்கள் தாமதமாகும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த அன்று (10) பாராளுமன்றத்தில் தெரிவித்தார். மாணவர்களின் விடைத்தாள் மதிப்பீடு விடயத்தையும் வரிப்பிரச்சினையுடன் சேர்த்து குழப்ப வேண்டாம் என்றும் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்பு மற்றும் நாட்டின் தற்போதைய நிலைமை குறித்த சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த இந்த விடயங்களை குறிப்பிட்டார்.




## இந்திய பிரஜை உட்பட 5பேர் கைது

இந்திய பிரஜை உட்பட 5 பேர் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக 10.5 கிலோ கிராம் தங்கத்தை மும்பைக்கு கொண்டு செல்ல முற்பட்ட போதே கைது செய்யப்பட்டதாக இலங்கை சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.



# சினி துளிகள்




## குறைந்த வசூலை பெற்ற திரைப்படமாக "செல்பி"




தமிழில் "2.0" படத்தில் ரஜினிக்கு வில்லனாக நடித்தவர் அக்ஷய்குமார். இந்தியில் அதிக சம்பளம் பெறும் முன்னணி கதாநாயகனாக இருக்கிறார்.

இந்தியா மட்டுமன்றி. வெளிநாடுகளிலும் அக்ஷய்குமாருக்கு அதிக ரசிகர்கள் உள்ளனர். சமீபத்தில் இவரது நடிப்பில் தயாராகி வெளியான திரைப்படம் "செல்பி". செல்பி மலையாளத்தில் பிருதிவிராஜ் நடித்து வெற்றிபெற்ற "டிரைவிங் லைசென்ஸ்" படத்தின் இந்தி ரீமேக் ஆக உருவான இப்படத்தை ராஜ் மேத்தா இயக்கினார்.

மேலும். இந்த படத்தில் இம்ரான் ஹாஷ்மி. நுஷ்ரத் பருச்சா. டயானா பென்டி உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்தனர்.

செல்பி கடந்த பிப்ரவரி 24ஆம் திகதி திரையரங்குகளில் வெளியான இப்படம் முதல் நாள் வசூலாக ரூ.2.55 கோடியை மட்டுமே வசூலித்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்நிலையில். "செல்பி" திரைப்படம் வெளியாகி 14 நாட்கள் கடந்ததையடுத்து தற்போது வரை உலக அளவில் ரூ.21.85 கோடியை மட்டுமே வசூலித்துள்ளது.

இந்திய அளவில் ரூ.16 கோடியை படம் வசூலித்துள்ளதாக கூறப்படுகிறது. மேலும். அக்ஷய் குமார் படங்களில் முதல் நாள் வசூலில் மிக குறைந்த வசூலை பெற்ற திரைப்படமாக "செல்பி" உள்ளது.

## STR48 பட அறிவிப்பு!



சிம்பு அடுத்து கமல்ஹாசன் தயாரிப்பில் நடிக்க போகிறார் என முன்பே தகவல் வந்த நிலையில் அந்த படத்தின் அதிகாரபூர்வ அறிவிப்பு தற்போது வந்திருக்கிறது.

கண்ணும் கண்ணும் கொள்ளையடித்தால் பட புகழ் நடிகர் தேசிங்கு பெரியசாமி தான் இந்த படத்தினை இயக்குகிறார்.

தற்போது மோஷன் போஸ்டர் உடன் இந்த படத்தின் அறிவிப்பை வெளியிட்ட சிம்பு "கனவு நிஜமாகிவிட்டது" என குறிப்பிட்டு இருக்கிறார்.

நல்ல ரோல்களில் நடிக்க காட்டுப்பசியில் இருப்பதாக சிம்பு கூறி இருந்த நிலையில். 'காட்டுப்பசிக்கு' விருந்து! என இயக்குனர் இந்த படத்தை குறிப்பிட்டு இருக்கிறார்.

"குலேபகாவலி. "ஜாக்பாட்" ஆகிய படங்களை இயக்கி பிரபலமடைந்த இயக்குனர் கல்யாண். தற்போது காஜல் அகர்வால் இரட்டை வேடங்களில் நடித்திருக்கும் "கோஸ்டி" படத்தை இயக்கியுள்ளார்.

இந்த படத்தில் யோகிபாபு. கே.எஸ்.ரவிக்குமார். ரெடின் கிங்ஸ்லி. தங்கதுரை. ஆடுகளம் நரேன். மனோபாலா. ராஜேந்திரன். மயில்சாமி. ராதிகா. ஊர்வசி ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். கோஸ்டி சாம்.சி.எஸ் இசையமைத்துள்ள இப்படத்தை சீட் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. இப்படத்தின் டீசர் அண்மையில் வெளியாகி கவனம் பெற்றது. இப்படம் வருகிற மார்ச் 17-ந் திகதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

இந்நிலையில் "கோஸ்டி" டிரைலரை படக்குழு வெளியிட்டுள்ளது. காமெடி கலந்த பேய் படமாக உருவாகியுள்ள இந்த படத்தின் டிரைலரை ரசிகர்கள் பலரும் வைரலாக்கி வருகின்றனர்.

## வைரலாகும் காஜல் அகர்வாலின் கோஸ்டி



## அட்ஜஸ்ட்மென்ட் குறித்து ஆவேசமாக பேசிய வரலட்சுமி

மாஸ் ஹீரோவாக நடித்து தமிழ் சினிமாவில் தனக்கென ஒரு இடத்தை பிடித்தவர் தான் சரத்குமார். இவரின் மகள் வரலட்சுமியும் ஹீரோயின். வில்லி என வித்தியாசமான கதைகளில் நடித்து அசத்தி வருகிறார்.

சமீபத்தில் இவர் நடிப்பில் "கொன்றால் பாவம்" என்ற திரைப்படம் வெளியானது. இதற்கு ரசிகர்கள் கலவையான விமர்சனம் கொடுத்து வருகின்றனர்.

வரலட்சுமி தயக்கம் இல்லாமல் தனது கருத்தை முன்வைப்பவர். சமீபத்தில் இவர் சினிமாவில் நடக்கும் அட்ஜஸ்ட்மென்ட் பிரச்சனையை குறித்து பேசியுள்ளார்.

அதில் அவர். "ஒருவர் என்னிடம் ஷோ குறித்து பேச வந்தார். அதுவும் என் வீட்டிற்கு. அப்போது பேசி முடித்த பிறகு. அந்த நபர். மற்ற விஷயத்திற்கு நாம் ஹோட்டலில் மீட் பண்ணலாம் என்று சொன்னார். நான் அவரிடம் இங்கு இருந்து கிளம்புங்கள் என்று சொன்னேன்".

"சினிமாவில் முக்கியமான இடத்தில் என் பெற்றோர்கள் இருக்கும் நிலையில் எனக்கே இது போன்ற விஷயம் நடந்தது என்றால். சாதாரண பெண்களுக்கு எவ்ளோ பிரச்சனைகள் ஏற்படும்" என்று வரலட்சுமி கூறியுள்ளார்.



## வைரலாகும் விக்ரம் பதிவு



தமிழ் திரையுலகின் முன்னணி நடிகர் விக்ரம் தற்போது இயக்குனர் பா.இரஞ்சித் இயக்கத்தில் "தங்கலான்" திரைப்படத்தில் நடித்து வருகிறார்.

இந்தப் படத்தை ஞானவேல் ராஜா தயாரிக்க ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைக்கிறார். இப்படம் கர்நாடக மாநிலத்தில் உள்ள கே.ஜி.எஃப். குறித்த கதை என்று இயக்குனர் பா.இரஞ்சித் தெரிவித்திருந்தார்.

இதனால் இந்த படம் மீது ரசிகர்களிடையே மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. தங்கலான் சமீபத்தில் இப்படத்தின் ஃபர்ஸ்ட்லுக் போஸ்டர் வெளியாகி கவனம் பெற்றது. மேலும். நடிகர் விக்ரம் கேஜிஎஃபில் வாழும் தமிழர்களை சந்தித்த புகைப்படமும் வைரலானது.

சில தினங்களுக்கு முன்பு நடிகர் விக்ரம் "தங்கலான்" கெட்டப்பில் இருக்கும் புதிய புகைப்படங்களை தனது சமூக வலைதளத்தில் பகிர்ந்திருந்தார்.

இந்நிலையில் நடிகர் விக்ரம் சமூக வலைத்தளப் பக்கத்தில் பதிவிட்டிருப்பது ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

அதில். "உதிக்கும் போதும் மறையும் போதும் ரசிக்கும் உலகம்.. உச்சிக்கு வந்தால் திட்டித் தீர்க்கும்" என்று பதிவிட்டுள்ளார்.

## பதான் திரைப்படம் ஓடிடி-யில் எப்போது?




இயக்குனர் சித்தார்த் ஆனந்த் இயக்கத்தில் ஷாருக்கான் கதாநாயகனாக நடித்திருக்கும் படம் "பதான்". இப்படத்தில் ஷாருக்கானுக்கு ஜோடியாக நடிகை தீபிகா படுகோனே நடித்திருக்கிறார். மேலும் பிரபல பாலிவுட் நடிகர் ஜான் ஆபிரகாம் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார்.

இப்படம் கடந்த ஜனவரி 25-ஆம் திகதி இந்தியா முழுவதிலும் 8000 திரையரங்குகளில் வெளியானது. பதான் பல எதிர்ப்புகளை தாண்டி வெளியான இப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. "பதான்" திரைப்படம் இந்தியாவில் ரூ.629 கோடியும் வெளிநாடுகளில் ரூ.380 கோடியுமாக மொத்தம் ரூ.1009 கோடியை வசூல் செய்துள்ளதாக படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்திருந்தது.

இந்நிலையில் இப்படத்தின் ஓடிடி ரிலீஸ் குறித்த தகவல் இணையத்தில் வலம் வந்து கொண்டிருக்கிறது. அதன்படி இப்படம் வருகிற ஏப்ரல் 26ம் திகதி அமேசான் பிரைம் ஓடிடி தளத்தில் வெளியாகவுள்ளதாக கூறப்படுகிறது. இதனை ரசிகர்கள் பலரும் வைரலாக்கி வருகின்றனர்.

# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?



சுழியோடி

11

மட்டக்களப்பின் சிறப்பான கிராமமாக பழுகாமம் அமைந்திருக்கிறது. இங்கு உதிர்த்தவர்தான் கேணல் ரமணன் அவர்கள். இவர் பழுகாமத்தில் பிறந்து வளர்ந்து சிறு வயதில் விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்து செயற்பட்ட ஒரு சிறந்த போராளி. மட்டக்களப்பு மாவட்டத்தின் புலனாய்வு துறை பொறுப்பாளராக செயற்பட்ட இவர் மறைமுகமாக வெளியில் உள்ளவர்களுக்கு இவரை பற்றி தெரியாத அளவிற்கு இவரது செயற்பாடுகள் இருந்தது. எனினும் இவர் தனது பொறுப்பு என்று இல்லாமல் எல்லோரிடமும் சிரித்து பேசி கதைத்து கவரக்கூடிய தன்மையை கொண்டிருந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழினத்துக்கு எதிராக செயற்படும் துரோகிகளை இனம் காண்பதிலும் அதாவது தமிழ் முஸ்லீம் மக்களிடையே பிரச்சனைகளை தோற்றுவிப்பவர்களை இனக்கலவரத்தை தூண்டி விடுபவர்கள் விடுதலை உணர்வாளர்களை காட்டிக்கொடுப்பவர்கள் ஒட்டு குழுக்களுடன் இணைந்து செயற்படுபவர்கள் உட்பட தமிழ் துரோகிகளை இனம்கண்டு அவர்களை களையும் நடவடிக்கையுடன் விடுதலைப்புலிகளின் படையணிகளில் புலனாய்வு கட்டமைப்பின் செயற்பாடுகளை வளர்த்து எடுப்பதிலும் தீவிரமாக செயற்பட்டவர். இவருக்கு என்று மட்டக்களப்பு மண்ணில் நீண்ட



வரலாறு உண்டு. இவர் தனது களமுனை செயற்பாடுகளை களமுனைக்கு சென்று பார்வையிடுவார். இவ்வாறு தான் (21.05.2006) அன்று முன்னணி காவலரண் பகுதியை பார்வையிடுவதுக்காக இவர் சென்றிருந்த போது எதிரியின் சினைப்பர் தாக்குதலுக்கு இலக்காகி வீரச்சாவை தழுவிக்கொண்டார். மட்டக்களப்பு மண்ணில் உதிர்த்த ரமணன் மட்டக்களப்பு மண்ணில் முதல் கேணல் என்ற பெருமையுடன் விதைக்கபடுகிறார்.

இவ்வாறான வீரம் செறிந்த போராளிகளால் நிறைந்த மண்தான் மட்டக்களப்பு. ஆனால் இந்த மண்ணில் பிறந்தும் கோடாரிக்காம்பாக மாறியிருந்தார் கருணா. விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளை சீர்குலைக்க ஒட்டுக்குழுவினர் குறிப்பாக கருணா குழுவினர் படுவான்கரை மண்மீது தமது எதிர் செயற்பாடுகளை காண்பிக்கிறார்கள். விடுதலைப்புலிகளின் காவலரண் மீது கருணாகுழு தாக்குதல் செய்வதும் பின்பு கருணா குழுவினரை விடுதலைப்புலிகள் விரட்டியடித்து களைவதுமாக சில காலங்களாக காணப்படுகிறது. கருணா குழுவினை வைத்து சிறிலங்கா அரசு விடுதலைப்புலிகள் மீது போர் தொடுத்து பார்த்தார்கள். முட்டி முட்டி மோதி கருணா குழுவால் இயலாத நிலையில் அவர்களுடன் சிறிலங்கா படையினரும் இணைந்து விடுதலைப்புலிகள் மீது போர் தொடுக்கிறார்கள். இவ்வாறு படையினரின் போர் செயற்பாடு உக்கிரமடைகிறது. சாதாரண இயந்திர துப்பாக்கி சண்டையாக காணப்பட்ட தாக்குதல். பின்பு பீரங்கி தாக்குதலாக விரிவடைகிறது இதனால் அங்கு வாழ்ந்த மக்கள் நகர் பகுதி நோக்கி நகர்கிறார்கள். இதனிடையே பொலநறுவை காட்டினுள் கருணா குழுவின் முகாம்கள் விடுதலைப்புலிகளால் தாக்கி அளிக்கப்பட்டு அப்புறப்படுத்தபடுகிறார்கள்.

இதன்போது அங்கு மக்களுக்கு தொண்டுசெய்த தமிழர் புனர்வாழ்வு பணியாளர்கள் கருணா குழுவினரால் வாகனத்துடன் கடத்தப்பட்டு படுகொலை செய்யபட்ட கொடூர சம்பவம்கள் கூட விடுதலைப்புலிகளால் அம்பலப்படுத்தப்படுகிறது. இத்தனையும் நடந்து கொண்டு இருந்தும் சமாதானத்தை குழப்பும் வகையில் ஆயுததாரிகளின் நடவடிக்கையை ஊக்குவிக்கும் சிறிலங்கா அரசு உலகநாடுகள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தன மட்டக்களப்பில் உள்ள போர்நிறுத்த கண்காணிப்பு குழு தனது செயற்பாடுகளை செய்யவே இல்லை போர்நிறுத்த கண்காணிப்பு குழு பேரளவில்தான் அங்கு இருந்தது. இவ்வாறு படுவான்கரையில் கிழக்கின் இதயம் என்ற பெயரில் சிறிலங்கா அரசு போரினை தீவிரபடுத்தியது. முதற்கட்டமாக படுவான்கரையின் எல்லை கிராமங்களை பீரங்கி தாக்குதல் விமான தாக்குதல்கள் மூலம் நீர்முலம் ஆக்கியது. இதில் குறிப்பிட்டு கூறவேண்டிய விடயம் என்னவெனில் சிறிலங்கா வான் படையினர் கரடியன்று பகுதியில் தான் முதன் முதல் வெளிச்ச குண்டுகளை வீசி தாக்குதலை நடத்தினார்கள். அதாவது அன்று மழைக்காலம் கரடியன்று பிரதேசத்தில் மழை மேகம் சூழ்ந்திருந்தது. இருள் சூழ்ந்த நேரம் அது அப்போது தாக்குதல் நடத்த வந்த மிக் விமானங்கள் வெளிச்ச குண்டுகளை வீசின நிலம் பகல் போல காட்சி அளித்தது. இதனை பயன்படுத்தி தாக்குதலை நடத்தின அங்கிருந்த மக்களுக்கு இந்த தாக்குதல் பெரும் அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியது. இரவில் இவ்வாறான தாக்குதல்கள் தொடர்ந்தால் அழிவுகள் அதிகமாகும் என மக்கள் அஞ்சினார்கள். இவ்வாறான மழை வெய்யில் இரவு பகல் பாராது விமானங்கள் தாக்குதலை நடத்தின அத்துடன் வாழைச்சேனை படை முகாமிலிருந்து அட்லேறி பீரங்கிகள் ரொக்கட் எறிகணைகள் ஏவப்படுகின்றன படையினரின் தீவிரம் அடைகின்றன. படுவான்கரையில் ஒருசில இடங்களை பிடித்துவிட்டதாக படையினர் அறிவிக்கின்றார்கள். இருந்தும் விடுதலைப்புலிகள் படையினர் மீதும் தீவிர எதிர்தாக்குதலை நடத்தி படையினருக்கு பாரிய இழப்பினை ஏற்படுத்திக்கொண்டு இருந்தார்கள். காடுகளில் பொறிவெடிகள் மிதிவெடிகளால் படையினர் பெரும் இழப்பை சந்திக்கின்றார்கள்.

இவ்வாறு படையினரின் இழப்பு படைத்தளபதிகளுக்கு வெறுப்பை ஏற்படுத்துகின்ற அளவுக்கு இருந்ததை புலனாய்வு தகவல்கள் மூலம் அறியக்கூடியதாக இருந்தது. இந்த நிலையில் டாங்கிகள் மல்டிபெரல் எறிகணைகள் பல இடங்களில் இருந்தும் ஒரு பகுதியை இலக்குவைத்து கடுமையான தாக்குதலை நடத்தின. ஒரு முற்றுகைக்கு உட்பட்ட பிரதேசமாக படுவான்கரை மாறுகின்றது. சிறிலங்கா பாரிய ஆயுத தளபாட பின் உதவிகளுடன் போரை தொடக்கி இருக்கிறது என்பது புரிந்தது. அதன் எறிகணை மலைகள் இதை புரியவைத்தன தாக்குதல் ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்க விடுதலைப்புலிகள் அடுத்த கட்ட திட்டமிடல்களில் ஈடுபட்டார்கள்.

படுவான்கரையில் இருந்து பின்வாங்குவதே சரியென முடிவெடுக்கப்பட்டு அங்கிருந்து கரடியனாறுகுடும்பிமலையில் உள்ள காடுகளை நோக்கி விடுதலைப்புலிகள் படையணிகளை நகர்த்தினார்கள். படுவான்கரையில் இருந்த வெடிபொருட்கள் பாரிய ஆயுதங்கள் அன்றைய காலகட்டத்தில் நகர்த்த முடியாத சுழல் காணப்படுகிறது. இவற்றை புதைக்கும் நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள். சிலவற்றை தகர்கின்றார்கள் அன்று மட்டக்களப்பு மாவட்ட தளபதியாக இருந்த கேணல் பானு அவர்களின் பணிப்பின் பெயரில் விடுதலைப்புலிகளின் சொத்துக்கள் படையினர் கையகப்படுத்தாத வண்ணம் எரிக்கப்பட்டும் புதைக்கப்பட்டும் மறைக்கப்படுகின்றன.

தாக்குதல் தீவிரமடைந்த நிலையில் போராளிகள் காயம் அடைவதும் அதிகரிக்கிறது அவர்களை வன்னி கொண்டு செல்ல ஒரு பெரும் அணி தயாராகிறது. அதில் பொறுப்பானவர்கள் சிலரும் அடங்கியிருந்தார்கள். காட்டு வழியாக வன்னிக்கு மிக நீண்ட பயணம் அது காட்டில் நீண்டதூரம் நடக்க வேண்டும் தமக்கு தேவையான உணவு வெடிபொருட்கள் என்பவற்றுடன் காட்டில் அணி நகர்கிறது. மட்டக்களப்பில் இருந்து வன்னிக்கு செல்லும் போராளிகள் மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதியை கடக்க வேண்டும் இதன் போது படையினருடன் கடுமையாக மோத வேண்டி வரும் இதனால் பாதை வழிகாட்டிகள் முன் செல்கிறார்கள். விடுதலைப்புலிகள் செல்லும் வழி என்று படையினருக்கு ஏற்கனவே தெரியும். ஏனெனில் வன்னியில் இருந்து மட்டக்களப்பிற்கும் மட்டக்களப்பில் இருந்து வன்னிக்கும் செல்லும் படையணிகள்.

கொழும்பு வீதியில் படையினருடன் சண்டை பிடித்தே பாதையை கடக்க வேண்டும். தாக்குதல் உச்சம் அடையும் போது விடுதலைப்புலிகள் வன்னிக்கு செல்வார்கள் என்று தெரிந்திருந்த சிறிலங்கா இராணுவ தலைமை கொழும்பு வீதியில் மேலதிக படையினரை குவித்திருந்ததுடன் சண்டைகள் இன்றி போராளிகளுக்கு கடும் இழப்புக்களை ஏற்படுத்தும் வகையில் எறிகணை வீச்சு தாக்குதலுக்கான இலக்குகளை தீர்மானித்து காத்திருந்தார்கள். ஒரு பெரும் அழிப்பு தாக்குதலை படையினர் நடத்த போகிறார்கள் என்ற புலனாய்வு தகவல்கள் எதுவும் கிடைத்திராத நிலையில் போராளிகள் வன்னி நோக்கி நகர்ந்துகொண்டு இருக்கிறார்கள்.

தொடரும்...



முன்னாள் வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவனேசன்(பவான்)

# பொட்டுஅம்மான் உயிருடன் இருந்தால் பிரபாகரனும் உயிருடன் இருப்பார் பழ. நெடுமாறன் கருத்தில் தவறில்லை

கடந்தவார தொடர்ச்சி...

**கேள்வி : போர் மௌனிக்கப்பட்டதன் பின்னர் மே 18 2009 ஆம் ஆண்டு அவரை கடலிலே வீசி எறிந்து விட்டோம் என அறிவிக்கின்றது. இவ்வாறிருக்க அதன் பின்னரான காலப்பகுதியிலே கருணா அம்மான் அவர்களையும் தயா மாஸ்டர் அவர்களையும் அந்த இடத்திலே உறுதிப்படுத்தும் வகையிலே அரசாங்கம் அவர்களை கொண்டு சென்றது. 16, 17 ஆம் திகதிகளில் போர் நிறைவடைந்த நிலையிலே அந்த உடல் 18 ஆம் திகதி நந்திக்கடலின் கரையோரப் பகுதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டதாக கூறி அடையாளங்கள் காட்டுவதற்கு அந்த இருவரையும் அழைத்துச் சென்றார்கள். அதில் முன்னாள் தமிழீழ விடுதலைப்புலிகளினுடைய இராணுவ கட்டளைத்தளபதி கூறினார் எனது போராட்ட வரலாற்றில் ஆயுதங்களை பொறுத்தவரையிலும் அதில் எழுச்சி பெற்றவன் என்ற வகையிலும் அவர் பாவித்த டொக்காரா பிஸ்டலால் தலையில் சுடும் பொழுது பின் தலையை பிரித்துக்கொண்டு சென்றிருந்தது எனவே அதை நான் உறுதிப்படுத்துகின்றேன் என கூறினார். அவர்கள் கூறிய மூன்று விடயங்களிலும் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றதல்லவா?**

பதில் : அண்மையில் அவர்கள் கூறிய கருத்துக்களையும் நான் கேட்டிருக்கின்றேன் அதே நேரம் ஆரம்பத்தில் அவர்கள் சென்று கூறிய கருத்துக்களையும் நான் கேட்டிருக்கின்றேன். விடுதலைப்புலிகளில் இருந்து கருணா பிரிந்து சென்று அரச கட்சியிலே இணைந்து செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற ஒரு தரப்பினர். நீங்கள் சொல்லுகின்ற மூன்று தரப்பினரும் ஒன்று தான். எனவே இவர்கள் ஒரு சுயாதீனமாக கருத்தை தெரிவிப்பார்கள் என நான் நம்பவில்லை. அவர்களது கருத்தை வைத்துக்கொண்டு நாங்கள் அதை ஒரு விடயமாக கொண்டு செல்ல முடியாது. ஏனென்றால் அவர்கள் ஒரு தரப்பில் சார்ந்து தான் தங்களது கருத்துக்களை கூறுகின்றார்கள்.

**கேள்வி : அரச தரப்பு கூறுவது பொய் என்று சொல்லுகின்றீர்களா?**

பதில் : அரச தரப்பு அவர்களே மாறுபட்ட சில கருத்துக்களை கூறுகின்ற பொழுது அதை எப்படி உண்மை என நாம் எடுத்துக்கொள்வது. அதாவது அரச தரப்பே மூன்று விதமான கருத்துக்களை கொண்டிருக்கின்றார்கள். ஒரு தரப்பு அவரது உடலை கண்டெடுத்தோம் என கூறுகின்றது. இன்னுமொரு தரப்பு சரணடைந்தார் என கூறுகின்றது அரசதரப்பில் இருக்கும் மந்திரிமார்களே மாறி மாறித் தானே சொல்லுவார்கள். எனவே இவர்களது கருத்து பொய் என்று தான் சொல்ல வேண்டும் அதில் எந்த மாற்றுக்கருத்துமில்லை. அவர்கள் உண்மை பேசுகின்றார்கள் என்றால் ஒரு கருத்தை மட்டும் சொல்ல வேண்டும் சரணடைந்தார் என்றால் சரணடைந்தார் என கூறலாம். சரணடைந்த வரை கொலை செய்வது என்றால் யுத்த குற்றம் எனும் விடயங்கள் இருப்பதால் அதை மறைக்கலாம் அல்லது அவர் யுத்தத்தில் இறந்தாரா அல்லது பழ.நெடுமாறன் சொன்னது போன்ற இறக்கவில்லையா? என்பதும் ஒரு வாதம் தான் அதை நான் மறுக்கவில்லை உறுதிபட சொல்லவில்லை. என்னைப் பொறுத்தவரை அவர் உயிருடன் இல்லை என்பதை நான் 90 வீதம் நம்புகின்றேன். நான் கூறும் 90 வீதம் கூட சிலவேளை பிழையாக போகலாம் அது வேறு விடயம். ஏனென்றால் அதற்கான நேரடி சாட்சியங்கள் இல்லையே சாட்சியங்களை வைத்துப் பார்க்கும் பொழுது ஒரு தரப்பு பொய் சொல்கிறது அது அவர்களது மாறுபட்ட கருத்தியலில் இருந்து வருகின்றது அரச தரப்பு ஒரு கருத்தை தெரிவிக்கவில்லை அவர்கள் அடையாளப்படுத்த வேண்டிய இடத்தில் அல்லது மரண சான்றிதழ் கொடுக்காமல் விட்டது அவர்கள் செய்த மிகப்பெரிய தவறு. அது கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். உறவினர்களை வைத்து அடையாளப்படுத்தியிருக்க வேண்டும். விஞ்ஞான ரீதியிலான டீ என் ஏ பரிசோதனை செய்யப்பட்டு அது சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். இவை அனைத்தையும் செய்யாமல் அவர்கள் ஒரு கருத்தை சொல்லுகின்றார்கள் என்றால் பொய் சொல்லுகின்றார்கள் அதில் மாற்றுக்கருத்தில்லை. கருணா பொய் தான் சொல்லுகின்றார் ஏனெனில் அவர் ஒரு கருத்தை சொல்லவில்லை. சென்று பார்த்த பொழுது ஒரு கருத்து இடையில் ஒரு கருத்து இன்று நெடுமாறன் கூறிய பின் ஒரு கருத்து என மூன்று விதமான விடயங்களை கூறுகின்றார். எனவே இவர்கள் அனைவரும் பொய் சொல்லுகின்றார்கள் அதை வைத்துக்கொண்டு நாங்கள் ஒரு முடிவிற்கு வரமுடியாது. பழ. நெடுமாறன் சொல்லும் கருத்தானது மிகப் பெறும் தலைவர்கள் மறைந்தால் சர்ச்சைகள் ஏற்படுவது உலக வரலாற்றில் பல இடங்களில் நடந்திருக்கின்றது. அந்த அடிப்படையில் பிரபாகரனின் மரணத்திலும் நடந்திருக்கின்றது.

**கேள்வி : இந்திய இராணுவம் இருந்த காலகட்டத்திலே செக்மேட் இராணுவ நடவடிக்கையில் பிரபாகரன் கொலை செய்யப்பட்டுவிட்டார் அவர் கதையை முடித்துவிட்டோம் என்றார்கள். ஆனால் ஆறு ஆண்டுகளிற்கு பின்பு பிரபாகரன் நேரடியாக வந்து மாவிலாற்றில் உரையாற்றுகின்றார் மீண்டும் சுனாமி தாக்குதல் ஏற்பட்ட பொழுது பிரபாகரன் இறந்துவிட்டார். அதன் முக்கிய போராளிகள் இறந்துவிட்டார்கள் என அறிவித்திருந்தார்கள். அதன் பின்பும் மீண்டும் பிரபாகரன் வந்து உரையாற்றுகின்றார். எனவே தற்பொழுதும் மக்கள் 13 ஆண்டுகளின் பின்னரும் பிரபாகரன் வந்து உரையாற்றுவார் என எதிர்பார்ப்பது பிழை இல்லையே. இதை நீங்கள் எப்படி பார்க்கின்றீர்கள்?**

பதில் : இந்திய இராணுவத்தினுடைய காலகட்டத்தில் அப்பொழுதும் நாங்கள் இங்கே இருந்தநாங்கள் எங்களுக்கும் தெளிவாக தெரியும் அவர்கள் இங்கு இருக்கின்றார்கள் என்று. எங்களை பொறுத்தவரையில் அந்த காலகட்டங்களில் கொமினிகேசன் ஊடாக நாங்கள் தொடர்பில் இருந்தபொழுது ஒரு இயக்கம் இன்னொரு இயக்கத்தினூடான தொடர்பு கொள்ளக்கூடிய சூழல் அந்த நேரத்தில் இருந்தது.

எனவே சாதாரண மக்களுக்கு பிரபாகரன் இல்லை என்ற விடயம் போயிருக்கலாமே தவிர எங்களைப்போன்று அந்த நேரம் இருந்த போராளிகளுக்கு அது அதிர்ச்சி இல்லை ஏனென்றால் அவர் இருக்கின்றார் என்பதை நாங்கள் நன்கு அறிந்திருந்தோம். அதன் பின்னர் சுனாமி நேரத்தில் உள்ள விடயங்களும் கூட அதையும் நாங்கள் நம்பவில்லை ஆனால் நீங்கள் சொல்லும் விடயம் அதே போன்று இருக்குமா என்பதை பொறுத்தவரையிலே அந்த இரண்டு விடயத்தையும் விட இது வித்தியாசமான சூழல் ஏனென்றால் அந்த சூழ்நிலைகள் வேறு. இராணுவ நடவடிக்கை செக்மேட் என்பதற்கு நாங்கள் எதிரும் இல்லை ஆதரவும் இல்லை. ஆனால் இந்திய இராணுவம் எங்களை கண்டால் பிடித்து செல்லப்படுவதும் இருந்தது அந்த நேரத்தில் எங்களுக்கு தொடர்பும் இருந்தது 1988 காலப்பகுதியில் இறுதியாக இந்திய இராணுவம் வந்து பிரபாகரன் இருந்த பிரதேசத்தை சுற்றிவளைத்து இக்கட்டான சூழல் வந்தது உண்மை. அந்த நேரம் நாங்கள் அவர்களுடன் தொடர்பு கொண்டு தருகின்றோம் உதவி தேவை என்றும் கேட்டோம் வெறுமனே நாங்கள் வெளிப்படையாகக் கூட அந்த அறிவித்தலை விட்டோம். அவர்களது முற்றுகைக்கு கூட உடைத்து வெளியில் எடுப்பதற்கு நாங்கள் ஏதும் செய்ய வேண்டுமா என்று கூட கேட்டோம்.

**கேள்வி : இரண்டு சந்தர்ப்பங்களின் அவர் இறந்துவிட்டார் என்ற பின்னரும் பிரபாகரன் வெளியில் வருகின்றார். தற்பொழுது இது மூன்றாவது சந்தர்ப்பம் மக்கள் அப்படி நம்புகின்றார்கள் என்றால் அது பிழை இல்லையே?**

பதில் : இதில் நீங்கள் எங்களை கேட்பதை விட தற்போதைய அரசியல் தரப்பில் இரண்டு பேர் இருக்கின்றார்கள் இதைப் பற்றி தெளிவாக கேட்கக்கூடியவர்கள். ஒருவர் சம்பந்தன் ஐயா அடுத்தது சுமந்திரன் இவர்கள் அவர் இருக்கின்றார் என தெளிவாக சொன்னாலும் கூட பிரபாகரன் இருந்த காலத்தில் தமிழ் மக்களையோ அல்லது அவர்களது இயக்கத்தையோ தலைவரையோ இழிவுபடுத்தும் எந்த ஒருவரையும் விட்டு வைத்தது இல்லை இது வரலாறு. அப்படி இருக்கும் பொழுது இந்த 2 பேரும் எப்படி தெளிவாக மிகவும் ஆணித்தரமாக பாராளுமன்றத்திலும் சரி. சிங்கள மக்கள் மத்தியிலும் சரி இந்த ஆயுத போராட்டத்தையும் போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர் பிரபாகரனையும் ஏனைய இயக்கங்களையும் மிக தெளிவாக பொதுவெளியில் இருந்து சுதந்திரமாக குற்றஞ்சாட்டுவது மட்டுமல்ல இழிவுபடுத்தி தாங்களது கருத்தை தெரிவித்துக்கொண்டு இருக்கின்றார்கள்.

எனவே அவர்கள் மிகத் தெளிவாக தெரிந்து வைத்திருக்கின்றார்கள் பிரபாகரன் உயிருடன் இல்லையென்று. நான் அதை வைத்துக்கொண்டு தான் 90 வீதம் என்று சொல்லுகின்றேன். நீங்களே கூறுங்கள் பிரபாகரன் உயிருடன் இருந்தால் இவர்கள் இவ்வளவு தெளிவான கருத்தை இந்த பொதுவெளியில் விடுவார்களா அவர்கள் ஆயுதம் வைத்துக்கொண்டிருப்பதை வைத்துக்கொண்டு நான் ஒன்றை சிந்திக்கின்றேன் என்னவென்றால் பிரபாகரன் உயிருடன் இருக்கின்றாரா இல்லையா என்பதில் மிகத் தெளிவாக உள்ள 2 பேர் என்றால் அவர்கள் சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோர்கள் தான். இந்த போராட்ட காலத்தில் எந்த ஒரு சூழ்நிலையிலும் இவர்கள் வாய் திறந்தது இல்லை அக்கால கட்டத்தில் அவர்கள் ஏகபிரதிநிதிகளாகவும் இருந்தவர்கள். சம்பந்தன் ஐயா இன்று பேசிய எல்லாவற்றையும் வெறுமனே தமிழ் செல்வன் இவற்றை தூக்கிக்கொண்டு திரிந்தவர் தானே எப்படி இவ்வளவு ஆக்கிரோசமாக இன்று சொல்லுகின்றார். உதாரணத்திற்கு பாராளுமன்றத்தில் யுத்தம் முடிந்த கையோடு பிரபாகரன் இறந்துவிட்டார் என பலமாக அனைவராலும் நம்பப்பட்ட நேரத்தில் பாராளுமன்றத்தில் சம்பந்தன் ஐயா சொல்லுகின்றார் மகிந்தவிற்கு வாழ்த்து தெரிவித்துவிட்டு நான் நிம்மதியாக என்னுடைய ஊருக்கு போய் வருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி தந்த மகிந்தவிற்கு நன்றிகள் தெரிவிக்கின்றேன் என கூறுகின்றார்.

**கேள்வி : அரசியலில் வந்து அவர்களது அரசியலுக்காக பேசுவது ஒரு வழக்கம். நீங்கள் புளொட் ஆயுத கட்சியில் இருந்தவர் புளொட்டிற்கோ ரெலோவிற்கோ அல்லது ஈபிஆர்எல்எப் இற்கோ இராணுவ தரப்பு தொடர்பு கொள்ளவில்லையா பிரபாகரன் இறந்து விட்டார் இதனை உறுதிப்படுத்துங்கள் என உங்களிடம் கேட்கவில்லையா?**

பதில் : இல்லை கேட்கவில்லை. யுத்தம் முடிந்த கையுடன் நெருக்கமான உயர் அதிகாரிகளுடன் சந்தித்த பொழுது அவர்கள் ஒரு விடயத்தை மட்டும் தான் எங்களிடம் கேட்டார்கள் ஏனைய விடயங்கள் அனைத்தும் எங்களுக்கு தெரியும். பொட்டம்மானுடைய விடயம் என்ன நடந்தது என்பது எங்களால் உறுதிப்படுத்த முடியுமே தவிர மற்ற எல்லா விடயங்களும் எங்களுக்கு தெரியும் இதில் உங்களிடம் ஏதாவது தகவல் இருந்தால் தாருங்கள் என கேட்டார்கள். அவருக்கு என்ன நடந்தது என்பது எங்களுக்கு தெரியாது. ஆனால் ஏனைய விடயங்கள் எல்லாம் தங்களுக்கு தெரியும் அதில் எந்த பிரச்சனையும் இல்லை அவற்றை பற்றி நீங்கள் ஆராய வேண்டிய தேவையில்லை பொட்டம்மானுடைய விடயங்கள் உங்களுக்கு தெரியுமா என்பதை மட்டும் தான் அவர்கள் கேட்டார்கள். எனவே அவற்றை வைத்து நாங்கள் ஊகித்துக்கொண்டது தான் அவர்கள் தெளிவாக தெரிந்து வைத்திருக்கின்றார்கள் யார் யாருக்கு என்ன நடந்தது என்பதனை.

**கேள்வி : பொட்டம்மான் உயிருடன் இருக்கின்றார் என்றால் பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் என பலர் கூறுவார்கள். இராணுவம் சந்தேகத்தில் உங்களிடம் கேட்கின்றது பொட்டம்மான் உயிருடன் இருக்கின்றாரா? இல்லையா? என்று அப்படியெனில் பொட்டம்மான் இருக்கக்கூடும் என்று அவர்கள் நினைக்கலாம் தானே?**

பதில் : நினைத்திருக்கலாம் யுத்தம் முடிவடைந்து அந்த ஒரு வாரத்திற்குள் உள்ள விடயத்தை தான் கூறுகின்றேன் இப்படியான கேள்வியை எங்களிடம் கேட்டார்கள் அதைப் பற்றி தகவல் கிடைத்தால் எங்களுக்கு சொல்லுங்கள் ஏனையவர்களைப் பற்றி எங்களுக்கு தெரியும் பிரச்சனை இல்லை என்று சொன்னார்கள். எனவே இந்த தகவல் அந்த நேரத்தில் என்னிடம் கேட்கப்பட்டதால் நான் உங்களிடம் சொல்லுகின்றேன். இது 13 வருடங்களிற்கு பின்னர் இந்த பிரச்சனை மீண்டும் துளிர்விட்டு மீண்டும் பேசப்படும் விடயமாக வருவதால் இதுவொரு அரசியலுக்காக இருக்குமோ என்பது தான் எனது கருத்தாக இருக்கின்றது. அரசியல் விடயங்களிற்காக சிலர் பிரபல்யமாகுவதற்கு அல்லது ஏதேனும் ஒரு தரப்பு இந்த விடயத்தை கொண்டுவந்து இன்று இருக்கின்ற பொருளாதார பிரச்சனைகளை மறைப்பதற்காக இருக்கலாம் இன்று மக்களை பொறுத்தவரையில் வாழ்வாதார பிரச்சனைகள் பல இலங்கையில் இருக்கின்றன அது மட்டுமல்ல சீனாவினுடைய இலங்கை ஊடுறுவல் இந்தியாவிற்கு அதில் உள்ள பயம் என பல விடயங்கள் இருக்கின்றன இவ்வாறான சர்வதேச விடயங்கள் அல்லது தமிழ் நாட்டின் அரசியலை பொறுத்தவரையிலே அங்கிருக்கும் சிலர் தங்களை பிரபல்யப்படுத்திக்கொள்வதற்கு செய்கின்றார்கள் அல்லது ஏதோவொரு காரணமாக இருக்கலாமே தவிர வேறு விடயமாக எனக்கு தெரியவில்லை.

**நேர்காணல் : இரணியன்**

# மகளிர் பக்கம்



## கணினி முன் வேலை செய்பவர் கண் பார்வையை அதிகரிக்க

உடல் உறுப்புகளில் முக்கியமானது கண்கள். கண்கள் இல்லையென்றால் எதையும் செய்ய இயலாது. கணினியில் அதிக நேரம் வேலை செய்வதால் கண்கள் சூடாகவும், பார்வை மங்கலாகவும் இருக்கும்.

இன்றைய இயந்திர உலகில் கண்களை கவலையில்லாமல் 24 மணி நேரமும் கணினி முன் அமர்ந்து வேலை செய்கின்றனர்.

சிலருக்கு சத்துக் கோளாறு, வெப்பம், சுற்றுச்சூழல் போன்ற காரணிகளாலும் கண்கள் பாதிப்பு அடைகின்றன. இதனால் கண்களில் வலி, எரிச்சல் ஏற்பட்டு மிக அவதிக்குள்ளாகின்றனர். இதனால் கண் நோய்கள், தொற்றுகள் ஏற்பட்டு சிகிச்சைப் பெற வேண்டியுள்ளது.

கண் பார்வை குறையாமல் எளிதில் சோர்வடையாமல் இருக்க இவற்றை எல்லாம் பின்பற்ற வேண்டும்.

**பண்ணைக் கீரை, முருங்கைக்கீரை, சிறு கீரை, கறிவேப்பிலை கீரை மற்றும் வெந்தயக்கீரை சாப்பிட வேண்டும்.**

**உணவில் கரட், பப்பாளிப் பழம், பாதாம், மீன், முட்டை இவைகளை அடிக்கடி சேர்த்துக்கொள்ள வேண்டும்.**

**பொன்னாங்கண்ணிக் கீரையைப் புளி சேர்க்காமல் சமைத்து நாற்பது நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டால் நல்லது.**

**இரவு நேரங்களில் தூங்குவதற்கு முன்பு இரு உள்ளங்கால்களின் நடுவிலும் சுத்தமான நெய்யைத் தேய்த்து உறங்க வேண்டும்.**

**இரவில் ஒவ்வொரு கண்ணிலும் மூன்று துளி சுத்தமான நீர் விட்டு இமைகளை தேய்த்து நிலாவை பார்ப்பது நல்லது.**

**இரவு தூங்கும் முன் தினமும் திரிபலா சூரணம் ஒரு கிராம் சாப்பிட்டால் நல்லது.**

**தூதுவளைக் காய் மற்றும் கீரையை சமைத்து நெய் சேர்த்து சாப்பிட்டு வர கண்ணில் உண்டாகும் பித்த நீர் முதலான நோய்கள் நீங்கும்.**

**சந்தனாதி தைலம், திரிபலா தைலம், பொன்னாங்கண்ணிக் தைலம் வாரம் ஒரு முறை தலைக்கு தேய்த்து குளிக்க வேண்டும்.**

**நெல்லி வற்றல், கஸ்தூரி மஞ்சள், வேப்பம் வித்து, மிளகு இவற்றை பொடியாக்கி பசும்பாலில் காய்ச்சி வாரம் ஒரு முறை தலைக்கு தேய்த்து குளிக்க வேண்டும்.**

**தினமும் குறைந்தது 2 லிட்டர் தண்ணீர் குடிக்க வேண்டும்.**

இவற்றை செய்து வந்தால் கண் வழியில் இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ளலாம் என்பது குறிப்பிடத்தக்கது.



தேனில் சிறிது எலுமிச்சை சாறு மற்றும் தயிர் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து கழுவினால், முகம் ஆரோக்கியமாகவும், பளிச்சென்றும் காணப்படும். மேலும் இந்த முறையை தொடர்ந்து இரண்டு நாட்கள் செய்து வந்தால், முகத்தின் நிறம் அதிகரித்திருப்பதைக் காணலாம்.





நீ
யாரென்று
கவலை எனக்கில்லை
ஏனென்றால் – நீ
யாராக
வேண்டுமானாலும்
இருந்து கொள்
இந்த நிமிடம்
எனக்கு
உன்னை
பிடித்திருக்கின்றது
ஆகவே
இந்த நொடி மட்டும்
உன்னுடன்
வாழ்ந்து
செல்கின்றேன்.

## தலை முடி உதிர்வை தடுக்க சில டிப்ஸ்



பொதுவாக இந்த காலகட்டத்தில் முடி உதிர்வு என்பது ஒரு மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கிறது.

இதற்கான மாற்று வழிகளாக கெமிக்கல் நிறைந்த தயாரிப்புகளை பயன்படுத்தி வருகின்றனர்.

அது தற்காலிகமாக ஒரு பலனை கொடுக்குமே தவிர பின்விளைவுகளை ஏற்படுத்திவிடும்.

அந்தவகையால் இதற்கான தீர்வினை இயற்கை வழி மூலமாக சரிப்படுத்த வேண்டும்.

**தேவையான பொருட்கள்**

**சுத்தமான செக்கிலாட்டின தேங்காய் எண்ணெய்–250 மி.லீ**
**வேப்பம்பட்டை –20 கிராம்.**
**செம்பருத்தி பூ–(நிழலில் காய வைத்தது । கைப்பிடி அளவு )**
**நெல்லிக்காய் –(சிறு துண்டுகளாக வெட்டி காய வைக்கது)**
**வெட்டிவேர்–20 கிராம்**

செய்முறை

தேங்காய் எண்ணெயில் ஒரு இரவு முழுவதும் மேற்குறிப்பிட்ட பொருட்களை ஊறவைத்துக்கொள்ளுங்கள்.

முடிந்தால் இதே எண்ணெயில் பாசிப்பருப்பு - 50கி, வெந்தயம் - 50கி சேர்த்துக்கொண்டால் இன்னும் அதிகமான பயன்கள் கிடைக்கும்.

உடற்குழுமை உள்ளவர்களாக இருந்தால் இந்த 2 பொருட்களை மட்டும் தவிர்த்துக்கொள்ளுங்கள். ஊறவைத்த எண்ணெயை ஒரு கண்ணாடி கொள்கலனிற்கு மாற்றி 2 நாட்கள் சூரிய ஒளியில் (காலை சூரிய உதயம் முதல் காலை 10 மணிவரை ). மாலையில் 2 மணிமுதல் வைக்கலாம். இதன் சக்கையை வீசிவிடாமல் வைத்திருந்து பயன்படுத்தலாம்.

எண்ணெய்யின் நிறம் சிவப்பாக மாறும்போது பொருட்களை மாற்றுவது சிறந்தது.

இதனை நன்றாக மயிரவேர்கால்களில் படுமாறு மசாஜ் செய்து வைக்க வேண்டும்.

இதற்கு தலையில் மேற்பகுதியில் உள்ள இறந்த செல்கள் மற்றும் பொடுகை நீக்கும் சக்தி உள்ளது எனவே தினமும் பயன்படுத்தலாம்.

இதன்மூலம் முடி அதிர்வை தடுப்பதோடு . நீளமான கரு கரு முடியையும் பெறலாம்.

## சிறுநீரகத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கு!

உங்கள் சிறுநீரகத்தைப் பாதுகாக்க நீங்கள் அவசியம் தவிர்க்க வேண்டிய உணவுகள் என்னென்ன என்று இங்கே பார்க்கலாம்.

பன்றி இறைச்சி, ஹாட் டாக் மற்றும் பர்கர் போன்ற பதப்படுத்தப்பட்ட இறைச்சிகள் உங்கள் சிறுநீரக ஆரோக்கியத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளன. அவற்றில் அதிக சோடியம் உள்ளது மற்றும் அதிகப்படியான சோடியம் தொடர்ந்து உட்கொள்வது இரத்த அழுத்தத்தை அதிகரிக்கும் மற்றும் உங்கள் சிறுநீரகங்களில் கூடுதல் அழுத்தத்தை ஏற்படுத்தும்.

சோடாக்களில் சர்க்கரை உள்ளடக்கம் அதிகம் மற்றும் ஊட்டச்சத்து மதிப்பு கொஞ்சமும் இல்லை. இவை உங்கள் உணவில் கூடுதல் கலோரிகளை சேர்க்கின்றன, இதன் விளைவாக எடை அதிகரிக்கும். சோடாக்களை உட்கொள்வது ஆஸ்டியோபோரோசிஸ் (எலும்புகள் பலவீனமாகவும் உடையக்கூடியதாகவும் மாறும்), சிறுநீரக நோய், வளர்சிதை மாற்ற நோய்க்குறி மற்றும் பல் பிரச்சனைகள் போன்றன ஏற்படுவதனால் இவற்றை தவிர்ப்பது நல்லது.

உறைந்த உணவுகள் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகள் டைப் 2 நீரிழிவு நோயின் வளர்ச்சிக்குக் காரணமாக இருக்கலாம்.எப்பொழுதும் புதிய மற்றும் முழு உணவுகளைத் தயாரிப்பது மற்றும் உறைந்த உணவுகளைத் தவிர்ப்பது நல்லது.

# ஆயுதகட்சிகள் துரோகிகள் என்றால்? தமிழரசுக்கட்சி துரோகிகள் இல்லையா?

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் அவர்களுடனான சிறப்பு நேர்காணல்



கடந்தவார தொடர்ச்சி...

**கேள்வி : தேர்தல் பரப்புரைகளை பார்த்தால் சரமாரியாகத்தானே போகின்றது. அவர்கள் சொல்லுகின்றார்கள் தூள், கொள்ளை, கடத்தல், கப்பம் இல்லாத தூய்மையான கட்சிகள் என புதுக்குடியிருப்பிலே பேசுகின்றார்களே?**

பதில் : அப்படியெனில் மற்றவர்களை பெயர் சொல்லி யார் என்ன செய்தது என குற்றம் சாட்ட வேண்டும் அதைவிட்டு பொதுவாக அவர்கள் சொல்லமுடியாது. அப்படியெனில் சமூக விரோத செயல்களை செய்தவர்கள் யார் என பெயர் சொல்லி சொல்ல வேண்டும் ரெலோ கட்சியின் உறுப்பினர் என்றால் அது யார் என்று பெயரை சொல்லட்டும். அதை கூறவில்லை எனவே சும்மா ரெலோ கட்சியை கூறுகின்றார் ரெலோ இயக்கத்தை சொல்லுகின்றார் அதில் யார் செய்தது என்று அவர்களுக்கு தெரியவில்லையா. கூட்டமைப்பில் உள்ளவர்கள் சொன்னதாக தான் நான் அறிந்தேன் அப்படியெனில் ஏன் 20 வருடங்களாக இருக்கின்றீர்கள்? இவர் ஏன் 12 வருடங்களாக பயணித்தார்? அவ்வளவு படுபாவத்தை செய்தவருடன் இவர் பயணித்தது பிழையா இல்லையா? அதை மக்கள் மத்தியில் கொண்டு செல்வது தவறா இல்லையா அந்த தவறை ஏன் செய்கின்றீர்கள்? அது சின்னத் தவறு மற்றையது பெரிய தவறா.

**கேள்வி:சுமந்திரனைஓரங்கட்டாதுஅவரைதமிழரசுக் கட்சி மீண்டும் உள்வாங்கியிருக்கின்றார்களே?**

பதில் : தமிழரசுக் கட்சிக்கு முதுகெலும்பு இல்லாத தலைவர் இருக்கின்றார் எல்லாம் செவிட்டு கும்பல் எனவே நான் பகீரங்கமாக கூறுகின்றேன் சுமந்திரன் தலைவராக வருவது என்பது தவிர்க்க முடியாதது இது தான் இன்றைய நிலவரம். மாவை சேனாதிராஜா ஐயா கூட எங்களுக்கு நல்ல மதிப்பு இருக்கின்றது. 45 வருடங்களிற்கு மேலாக இந்த போராட்டத்திலே பயணித்த ஒருவர் நீண்ட கால சிறை வாழ்க்கையை அனுபவித்த ஒருவர் ஆனால் அவர் இன்று வவுனியாவில் இருந்து நான் இனி என்ன செய்வது விட்டுவிட்டு பேசாமல் இருப்போம் என நினைப்பதுஎல்லாம்அவ்வாறானஅழுத்தத்தை திரு. சுமந்திரன் கொடுக்கின்றார் என்றால் அது அவரது திறமை. அதற்கு சுமந்திரனா சிறிதரனா என்பதை தமிழரசுக் கட்சி தீர்மானிக்கட்டும். ஆனால் தமிழரசுக் கட்சி தவறான பாதையில் போவதை நாங்கள் அம்பலப்படுத்தி அரசியல் ரீதியாக இவர்களை நாங்கள் தோற்கடிப்பதற்கான முழு முயற்சிகளையும் நாங்கள் ஈடுபடுவோம். ஏனென்றால் இனப்படுகொலை என்பதனை சொல்ல வருவதற்கு 2021 வரை நாங்கள் இருக்க வேண்டி இருந்தது. 1983 இல் அன்னை இந்திராகாந்தி இனப்படுகொலை என சொல்லி தலைவர் அமிர்தலிங்கம் இனப்படுகொலையை ஏற்றுக்கொண்ட விடயத்தை உங்களுக்கு ஏற்றுக்கொள்ள பிரச்சனையாக இருந்தது. சர்வதேச விசாரணை முடிந்து எனக் கூறினார்.

எனவே இவரது வியாக்கியானங்களுக்கு எல்லாம் எங்களது லோயர் ஐயாவிற்கு அவர் புதுப்புது வியாக்கியானங்கள் விடுவார். சர்வதேச விசாரணை முடிந்துவிட்டது இப்பொழுது சர்வதேச குற்றவியல் நீதிமன்றிற்கு போக வேண்டும் என்பார், நிரூபிப்பது கடினம் என்று சொல்லுவார்கள். தேர்தல் டெக்னிக்கல் ரீசன் என்பார்கள் முழு இலங்கைக்குமான தேசிய தலைவர் மாதிரி செயற்பட தொடங்குகின்றார் அவரே கூறியிருக்கின்றார் 5 வயதில் இருந்து நான் சிங்கள மக்களுடன் வாழுகின்றேன் அவர்கள் நன்றாக இருக்கின்றார்கள் என்று. அவருக்கு தெரிந்திருக்க வேண்டும் 1977 இல் இனப்படுகொலையின் போது கொழும்பில் வீடுகள் எரிக்கப்பட்ட பொழுது இவரது வீடு எரிக்கப்பட்டதா? இல்லையா? என்பது எனக்கு தெரியவில்லை அயலில் அல்லது நண்பனது வீடு எரிக்கப்பட்டிருந்ததை பார்த்திருப்பார். ஏன் 1983 இல் இருந்து மிகப்பெரிய அளவில் அழிக்கப்பட்டதை பார்த்ததில் இருந்து சிங்கள மக்களை நாங்கள் கூறவில்லை அவர்களில் நல்லவர்களும் இருக்கின்றார்கள் அதை விட்டுவிட்டு அவர்கள் நல்லவர்கள் அவர்களுடன் தான் நான் வாழ விரும்புகின்றேன் என்றால் நீங்கள் அங்கு சென்று தேர்தலை கேட்டு அங்கு வாழுங்கள். எங்களது மக்களின் பிரச்சனை என்பது மிக இருக்கமான ஒரு பிரச்சனை இதில் இறுக்கமாக செயற்படக் கூடியவர்கள் தேவை. அதைவிடுத்து கொழும்பு காற்றையும் குளோரின் தண்ணியையும் மறக்காது இருந்தால் தமிழ் மக்களை மறக்க வேண்டிவரும்.

**கேள்வி : இதில் ஒருவிடயம் என்னவெனில் அண்ணன் சிவாஜிலிங்கத்தை பொறுத்தவரையிலே அரசியல் ரீதியிலான கருத்து இருக்கின்றது. அதாவது நீங்கள் மகிந்த ராஜபக்சவுடனோ அல்லது ஏனைய அரசியல் தலைவர்களோ இருந்த பொழுது நீங்கள் அவர்களுக்கு எதிரான அரசியலை தொடங்குவது அதாவது நீங்கள் ஒரு இனவாத கருத்தை யாழில் இருந்து கொண்டு கூறுகின்றீர்கள் அதுபோன்று பௌத்த துறவிகள் அதே இனவாதத்தை தான் கூறுகின்றார்கள். அவர்கள் 13 ஐ எறிக்கின்றபொழுது நீங்கள் 20 ஐ கொழுத்துங்கள் என்று கூறுகின்றீர்கள். இது சமாதானத்திற்கான ஒரு சமிக்கையை ஏற்படுத்தாது மீண்டுமொரு குரல் கொடுக்கின்ற திட்டத்தை உருவாக்குகின்றது என சிங்கள ஊடகங்கள் கூட விமர்சிக்கின்றது**

பதில் : சிங்கள ஊடகங்கள் விமர்சித்து விட்டு போகட்டும் எங்களுக்கு அதுபற்றி கவலை இல்லை. இலங்கையில் இவ்வளவு காலமும் நாங்கள் கஷ்டப்பட்டதை கதைத்து விட்டோம் சுத்தி சுத்தி சுப்பனின் கொள்ளைக்குள் தான் நிற்கின்றது. நல்லாட்சி அரசாங்கம் என ஓடி ஓடி வந்து ஒற்றையாட்சியை வைத்துக்கொண்டு சுமந்திரன் ஆட்கள் என்ன சுத்துமாத்துவிட்டார்கள் சிங்களத்தில் ஒற்றையாட்சி ஏகே ராட்சிய, தமிழில் ஒருமித்த நாடு ஆங்கிலத்திலும் ஒருமித்த நாடாம் என்ன இது ஆங்கிலத்தில் ஒரு சொல் இல்லையா அதற்கு. உலகத்திலே எத்தனையோ அரசியலமைப்பு முறையீடுகள் ஆங்கிலத்தில் இருக்கும் பொழுது ஒரு சொல் இல்லாமல் செய்யுமளவிற்கு மோசமான பித்தலாட்டத்தை ஆடிவிட்டு ஏமாற்றியதை என்னைப்பொறுத்தவரை நான் தெளிவாக சொல்லுவேன் இலங்கைக்குள் ஒரு தீர்வு வராது. இது இன்று நேற்று அல்ல ஒற்றையாட்சிக்கு கீழ் ஒரு அங்குலம் கூட அவர்கள் தயாராக இல்லை அதுபோன்று 2005 ஆம் ஆண்டு அப்பொழுது நாங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆறு பேர் சம்பந்தன் ஐயா தலைமையிலே இந்திய வெளியுறவு அமைச்சர் அவர்களை சந்தித்து பேசிக்கொண்டிருந்த பொழுது தாஜ் சமுத்திரா ஹொட்டலிலே விடுதலைப்புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட சுனாமிக்கு பின்னரான கட்டுமானம் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு அதை உயர் நீதிமன்றத்திலே ஜேவிபி பிரச்சனைப்படுத்திய நேரத்திலே அதனுடைய தலைமைச் செயலகம் கிளிநொச்சியில் அமைந்தது குற்றம் எனக் கூறி தற்பொழுது பிக்குகள் நடந்துகொண்டதைப் போல தடைகளை மீறி அவர்கள் பாய்ந்துகொண்டிருந்தது ஜனாதிபதி மாளிகையை அவர்கள் முற்றுகையிட்டு போராட்டம் வெடித்ததும் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்கள் தண்ணீர் புகை குண்டுகள் வீசப்பட்ட நேரத்திலே சத்தம் தாஜ் சமுத்திரா அந்த ஹொட்டல் அறைக்குள்ளும் அதிர்வுகள் கேட்டுக்கொண்டிருந்த பொழுதும் அவரைப் பார்த்துக்கேட்டேன் ஐயா மனிதாபிமானமாக 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டதிலே 25 ஆயிரம் பேர் வடக்கு கிழக்கிலே தமிழ் பேசும் மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

இதற்கு கட்டுமானத்தை செய்வதற்கு அமெரிக்காவினுடைய ஜனாதிபதியாக இருந்த பில்கிளின்டன் ஆதரவு தெரிவித்திருக்கின்றார். சந்திரிக்கா பண்டாரநாயக்க உட்பட பலரும் பேசி நோர்வேயில் சம்பந்தப்பட்ட மனிதாபிமான கட்டமைப்பு கொண்டுவருவதற்கு எதிராக இவ்வளவு ஆவேச கூத்தாடுபவர்கள் எங்களுக்கு ஒரு தீர்வு தர அனுதிப்பார்களா? என்று நீங்கள் சொல்லுங்கள் என கேட்ட பொழுது அவர் நீண்ட மௌனத்தின் பின்னர் புன்னகைத்தார் அவ்வளவும் தான். இது தான் நிலவரம் அது 2005 இல் இல்லை 2025 இலும் இது தான் நிலவரம் எனவே நாங்கள் சர்வதேச ரீதியாக அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டும் எவ்வாறு இன்றுவரை சட்ட புத்தகத்திலே பேரளவில் இருப்பது ஒரு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் வெளிநாட்டின் தலையீடு காரணமாக அதுபோன்று பல நாடுகள் இந்த தலையீட்டின் காரணமாகத்தான் ஒரு பொதுசன வாக்கெடுப்பு சுதந்திர தமிழீழம் வேண்டுமா? மாகாண சபைகளா? என கேட்கின்ற வாக்கெடுப்பை நடத்துவதன் ஊடாகத்தான்.

1990 ஆம் ஆண்டுக்கு பின்னர் பல இடங்களிலே இவ்வாறு தான் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. சில நாடுகள் பிரிந்து இருக்கின்றன. சில நாடுகள் பிரிய விரும்பவில்லை. எனவே அந்த ஒரு விடயத்தை தவிர இலங்கையிலே அரசியல் தீர்வுக்கு சந்தர்ப்பம் இல்லை இவர்கள் வேண்டுவதெல்லாம் வேண்டி திண்டுவிட்டு இன்று இந்தியாவிற்கும் விசுவாசமாக இல்லை. இந்தியா 60 ஆயிரம் கோடியை கொடுக்கவில்லை என்றால் இங்கு அடிபட்டு செத்திருப்பார்கள். இப்பொழுது இந்தியா கொஞ்சம் விட்டுபிடிக்கின்றார்கள் இங்கு பிரச்சனைகள் கூடுகின்றது மின்சார கட்டணம் மற்றும் பல கட்டணங்கள் ஏறியிருக்கின்றது மின்சாரம் ஏறியவுடன் அனைத்தும் ஏறும். எரிபொருள் ஏறினால் எல்லாம் ஏறும். இந்த இரண்டும் ஒன்றுடன் ஒன்று அனைத்துடனும் தொடர்புடையது. உற்பத்திகள் அனைத்துக்குமே மின்சாரம் முக்கியமானது. எனவே இதை வைத்துக்கொண்டு இலங்கை மீண்டும் மீண்டும் அதாள பாதாளத்திற்குள் செல்லுமாக இருந்தால் இவர்கள் மீள வேண்டுமாக இருந்தால் இனப்பிரச்சனை தீர்வு எட்டப்பட வேண்டும். நீங்கள் தரும் பிச்சையை ஏற்க வேண்டிய தேவை ஈழத்தமிழர்கள் ஆகிய எங்களுக்கு இல்லை. நிச்சயமாக நாங்கள் சுதந்திரமாக தலை நிமிர்ந்து வாழக்கூடிய எங்களை நாங்களே ஆழக்கூடிய தீர்வை நாங்கள் வென்றெடுப்போம் மக்கள் தீர்மானிக்கட்டும் மக்கள் அனைவரும் எங்களுக்கு சுதந்திரம் வேண்டாம் நாங்கள் இலங்கையில் இருக்கின்றோம் தருகின்ற பிச்சையை வேண்டுகின்றோம் என்று சொன்னால் அதன் பின்னர் நாங்கள் ஒன்றும் பேசமாட்டோம். ஏன் கிழக்கு மாகாணத்தில் தனிய வாக்கெடுப்பை நடத்த முடியும் என்றால் ஏன் வடக்கு கிழக்கிலே ஒரு வாக்கெடுப்பை நடத்தக்கூடாது. அதை யாரும் இல்லை என்று கூற முடியாது எனவே இந்த அடிப்படையிலே இந்த கோரிக்கையை கூட தற்பொழுது இலங்கை தமிழரசுக் கட்சியும் அகில இலங்கை தமிழ் காங்கிரசும் வைக்க மறுக்கின்றது. அகில இலங்கை மக்கள் முன்னணி தங்களது தேர்தல் அறிக்கையிலே சொன்னார்கள் பாராளுமன்ற தேர்தலிலே அதன் பின்னர் வலியுறுத்தவில்லை. அன்றும் சொல்லவில்லை இன்றும் சொல்லவில்லை என்றும் சொல்லுவார்களோ தெரியாது. இன்னுமொரு விடயம் அண்மைக்காலத்தில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்களால் அமைக்கப்பட்ட அரசியலமைப்பு குழுவிற்கு முன்னால் த.தே.கூட்டமைப்பு சென்று எழுத்து மூலமான ஆவணங்களை தாக்கல் செய்து கருத்துக்களை கூறிவிட்டு வெளியிலே வந்த பொழுது த.தே .கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஐயா அவர்கள் சொன்ன விடயம் நாங்கள் உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலே தற்பொழுது உள்ளக சுயநிர்ணய உரிமையிலே சமஷ்டியை கேட்கின்றோம். இது மறுக்கப்படுமாக இருந்தால் வெளியக சுயநிர்ணய உரிமையில் கேட்கின்ற உரித்து எங்களிடம் உண்டு என்றால் இதற்கு மேலதிகமாக பிரிந்து போவதுமான உரிமை. அதைத்தான் நான் கூறுகின்றேன் 2005 இல் கேட்பதா 2022 இல் கேட்பதா 2030 இல் கேட்பதா சமஷ்டி சமஷ்டி என அனைத்து கட்சிகளும் தூக்கி வைத்துக்கொண்டிருக்கின்றீர்களே. சில கட்சிகள் அதற்கு மேலே கூட்டு சமஷ்டி என்கின்றோம் அதைத் தரப்போகின்றார்களா இல்லையே 13 இல்லை என்னும் பொழுது அதைப் பற்றி நாங்கள் கேட்டுக்கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை அடுத்த கட்டம் போக வேண்டும். அடுத்த கட்டம் என்பது பொதுசன வாக்கெடுப்பை எல்லோரும் சேர்ந்து வலியுறுத்தினால் அதில் நிச்சயமாக சர்வதேச சமூகம் அமெரிக்கா இந்தியா உட்பட பல நாடுகள் இதற்கு ஆதரவு தந்து பொதுசன வாக்கெடுப்பை நடத்தக்கூடிய சூழ்நிலைகளை எங்களால் ஏற்படுத்த முடியும் அதற்கு அனைத்து மக்களும் தயாராக வேண்டும். அவர்கள் சொல்லுவார்கள் மக்கள் மத்தியில் இருந்து கேட்கவில்லை இவர்கள் ஒருசிலர் தான் சொல்லுகின்றார்கள் என்று. எனவே சிவில் அமைப்புக்கள் மக்கள் மயப்பட்ட கோரிக்கையாக வரவேண்டும்.

**கேள்வி : அப்படியெனில் மக்கள் புரட்சி உருவாகும் என்கின்றீர்களா?**

பதில் : புரட்சி எல்லாம் தேவையில்லை கோரிக்கை கேட்பதற்கும் அமைதியாக கேட்பதற்கும் உங்களால் இயலுமானால் புரட்சியே தேவையில்லையே. பேரணியில் அல்லது ஒரு அறிக்கையில் போரில் தங்களது கருத்துக்களை தெரிவிப்பது என்பது நிச்சயமாக ஏனைய நாடுகள் உள்வாங்கிக்கொள்ளும். தற்பொழுது கூட பல்கலைக்கழக மாணவர்கள் 13 ஐ நாங்கள் நிராகரிக்கின்றோம். வடக்கு கிழக்கு இணைந்த பொதுசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் எல்லாம் நிச்சயமாக சர்வதேசத்தினுடைய கவனத்திற்கு அது சென்றிருக்கின்றது.

ஏனென்றால் உன்னிப்பாக அவர்கள் பல விடயங்களை பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய பல கருத்துக்கள் டுவிட்டரிலே வருவதை நாங்கள் பார்க்கின்றோம். அந்த வகையிலே நாங்கள் கேட்காமல் இருந்து எல்லாம் செய்து அவர்கள் தரமாட்டார்கள் எனும் பொழுது பேசாமல் இருந்தோம் என்றால் அவர்கள் கொடுக்கக்கூடாது என்பதில் உக்கிரமாக கோசமாக நிற்கின்றார்கள் எனில் அதே அளவில் 100 இல் ஒரு 5 பேர் கூட இங்கு இல்லை என்றால் அவர்களும் தரவில்லை என்று தான் அர்த்தம் இதுதான் நிலைமை.

**கேள்வி : அவ்வாறிருந்தால் அடுத்த கட்ட நகர்வு என்று கூறும் பொழுது ஒவ்வொரு கட்சியும் மக்கள் ஆணையை பெற்று வருகின்றோம் என்று டக்ளஸ் தேவானந்தா கூட சொல்லுகின்றார் இவ்வளவு ஆசனங்கள் இருந்தால் வடகிழக்கை நான் மாற்றியமைப்பேன் என்றெல்லாம் கூறுகின்றார். அவ்வாறெனில் நீங்கள் சமஷ்டியும் எட்டப்படாத தீர்வாக இல்லை 13 ம் ஒரு தீர்வாக இல்லை என்று சொன்னால் மக்கள் வாக்கெடுப்பின் மூலம் அதற்கான தீர்வாக இருந்தால் இதற்கு சர்வதேச நாடுகள் உறுதுணையாக வரும் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?**

பதில் : இல்லை அதை நோக்கித் தான் நாங்கள் செல்லுகின்றோம். ஆரம்பத்தில் இனப்படுகொலை என்று சொன்னால் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் இன்று இனப்படுகொலையை ஏற்றுக்கொள்ள வைத்திருக்கின்றோம். சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தில் செல்ல வேண்டும் என்பதை ஐ.நாவின் மனித உரிமை ஆணையாளரே கூறுகின்ற அளவிற்கு வந்துவிட்டன. தீர்மானம் எடுக்கப்பட்டு கொண்டு செல்லப்படவில்லையே தவிர ஒவ்வொரு விடயமும் நாங்கள் கேட்டு இறுக்கமாக போகும் பொழுது தான் அதை அவர்கள் செய்வார்கள். நாங்களே கேட்கவில்லை என்றால் கேட்கமாட்டார்கள். அதைப் போல தான் வடக்கு மாகாண சபையிலே பொதுசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற தீர்மானம் 2018 இல் நாங்கள் நிறைவேற்றியிருக்கின்றோம். அது நடந்து 5 வருடங்கள் ஆகிவிட்டது. வடக்கு மாகாணம் 11 இலட்சம் மக்களுடைய ஒரு தீர்மானமாகத்தான் பார்க்கப்படும். அதை அவர்கள் அமெரிக்க காங்கிரஸில் கொண்டு வந்து தீர்மானத்தை முன்மொழிகின்ற பொழுது அவர்கள் அதிலே கோடிட்டு காட்டியிருக்கின்றார்கள் வடக்கு மாகாணசபையால் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலே இவ்வாறு சொல்லப்பட்டிருக்கின்றது என்ற ஒரு முன்மொழிவை அமெரிக்க எம்பிக்கள் தங்களது முன்மொழிவில் கொடுத்திருக்கின்றார்கள். இது போன்று தான் ஒவ்வொன்றும் வருமே தவிர கேட்டால் வரும். வராது என்று சொல்லி நீங்கள் கேட்டால் வருமா என்றால் வடக்கு மாகாண சபையிலே கொண்டு வரும் பொழுது எத்தனை பேர் அதனை பார்த்தார்கள். எத்தனை பேர் அதை கணக்கெடுத்தார்கள்.

ஆனால் அமெரிக்க காங்கிரஸிலே அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இனப்படுகொலை பற்றி நாங்கள் செய்ததை கோடிட்டு காட்டியிருக்கின்றார்கள். அதைப்போல நாங்கள் முன்னர் பேசிய சில தீர்மானங்கள் பற்றி இலங்கை பாராளுமன்றிற்கு சமாந்தரமாக ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நாயகம் காட்டியிருந்தார்.

எனவே இது எல்லாம் சாதாரணமான விடயங்கள் அல்ல. பல விடயங்களை நாங்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையிலும் சரி ஐக்கிய நாடுகள் சபையிலும் சரி பல விடயங்களை நாங்கள் சமர்ப்பித்திருக்கின்றோம் சர்வதேச ரீதியாக இதை நோக்கி நாங்கள் முன்னேறியிருக்கின்றோம் அது சரிவரும் சரி வராது என்றில்லை தமிழீழ விடுதலைப்புலிகளை பார்த்து யாரும் கேட்டார்களா உங்களுக்கு தமிழீழம் தருகின்றோம் என்று யாரும் சொல்லியா நீங்கள் வாறீங்கள் என்று அப்படியல்ல. அதை நோக்கி செல்லுகின்ற பொழுது அதற்கான வழி தன்பாட்டிலே பிறக்கும்.

**நேர்காணல் : இரணியன்**

# வடபகுதி கடற்தொழிலின் சமகால நிலவரங்கள்

இன்றைய அரசியல் சமூக பொருளாதார நிலை என்ன? மாற்றம் வேண்டுமாயின் போக்கென்ன வீச்சென்ன?" என்கிற தலைப்பில் ஆவணி மாதம் 6 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு ஒரு கருத்தரங்கு நடந்தது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றிய கேட்போர் கூடத்தில் எழுத்தாளர் சாந்தன் தலைமையில் இடம்பெற்றது. "ஆய்வு" நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள 'எம்மால் முடியும்' கருத்தரங்கத் தொடரின் முதல் நிகழ்வு இது.

இந்நிகழ்வில் பங்கேற்ற யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் புவியியற்துறை பேராசிரியர் கலாநிதி சூசைஆனந்தன் "வடபகுதி கடற்தொழிலின் சமகால நிலவரங்கள்" தொடர்பில் ஆற்றிய உரையின் தொகுப்பு வருமாறு:

எங்களுடைய வடக்கு கிழக்கு பொருளாதாரத்தில் விவசாயத்திற்கு அடுத்தாக அமைவது இந்த கடல் வளமே. விதையாமலே பயன் தருகின்ற மிக பெரிய கடல் வளம் எம்மிடம் உள்ளது. தரையிலிருந்து 200 கிலோமீற்றர் தூரம் வரையிலான பிரத்தியோக பொருளாதார வலயம் இருக்கின்றது. இலங்கையினுடைய மொத்த கடல் பரப்பு 5 இலட்சத்து 17000 சதுர கிலோமீற்றர். இதில் கடற்கரையின் நீளம் 1925 கிலோமீற்றர். அதில் மூன்றில் இரண்டு பங்கு எங்களுடைய கடற்கரையோரம். அது வடக்கு கிழக்கிற்கு சொந்தமானதாக இருக்கின்றது. மன்னார் மாவட்டத்தின் முள்ளிக்குளத்தில் இருந்து மட்டக்களப்பு. அம்பாறை வரை பார்த்தால் கிட்டத்தட்ட 900 கிலோமீற்றர் அளவில் எங்கள் கடற்கரை இருக்கின்றது.

இந்தக் கடற்கரையோரத்தில் முக்கியமான துறைமுகங்கள் திருகோணமலைத்துறைமுகம். மன்னார் ஒலுவில் மற்றும் பருத்தித்துறை. காங்கேசன்துறை. தலைமன்னார் என எல்லா இடமும் துறைமுகங்கள் உள்ளன. யாழ்ப்பாணம். ஆனையிறவு. மன்னாரில் நிறைய ஏரிகள் உள்ளன. எங்களுடைய கடற்பரப்பில் அதிக தீவுகளும் உள்ளன. ஏழு தீவுகள் உட்பட ஆளில்லாத தீவுகளும் எங்களுடைய கைகளில் இருக்கின்றன. கச்சதீவு. கற்கடதீவு. பாலைதீவு இவற்றில் ஆட்கள் இல்லை. ஆனால் இவை முக்கியமான தீவுகளாகும். எங்களை சுற்றிவர அகலமான கண்டத்திட்டு கண்டமேடை இருக்கின்றது. உலகப்பிரசித்தி பெற்ற மீன்பிடி மேடை (Petro bank) எங்களுடைய கையில் தான் இருக்கின்றது. பருத்தித்துறையில் இருந்து கிழக்காலை 200 கிலோமீற்றர் முல்லைத்தீவு வரை நாங்கள் ஆழ்கடல் போகலாம். எங்களிடம் நிறைய கடல்வளம் இருக்கின்றது என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால் கடலில் கால் வைப்பது என்றால் மத்திய அரசிடம் அனுமதி பெற்றுத்தான் நாங்கள் கால் வைக்க வேண்டும். எங்களுடைய கையில் எதுவும் இல்லை. கடல் வளம் சம்பந்தமான கடற்றொழில் அமைச்சு என்பது மத்திய அரசின் கீழ் தான் இருக்கின்றது. வடமாகாணத்தில் நன்னீர் மீன்பிடி அமைச்சு மட்டும்தான் இருக்கின்றது. கடல் சம்பந்தமான அனுமதி எவருமே செய்யமுடியாத அளவிற்கு முழு கட்டுப்பாடும் மத்திய அரசின் கையில்தான் இருக்கின்றது. முழு வளமும் அவர்களுடைய கையில் இருப்பதால் இந்த வளப்பயன்பாடு எங்களுடைய கரையில் இருக்கின்ற மக்களைவிட தென்பகுதி மக்களுக்கும் அந்நிய இந்திய மீனவர்களும் தான் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற நிலைதான் காணப்படுகின்றது. எங்களுடைய வளத்தின் பயன்பாட்டை பார்த்தமென்றால் நிறைய பிரச்சனை இருக்கின்றது. அதாவது இதனை மூன்று கட்டங்களாக பார்க்கலாம். போருக்கு முற்பட்டகாலம். போர்க்காலம். போருக்கு பின்னான காலம் என பார்கலாம். போருக்கு முன்னர் அதாவது 1983 ஆம் ஆண்டிற்கு முன்னர் பார்த்தால் இலங்கையின் உற்பத்தியில் யாழ்ப்பாண மாவட்டம் மட்டும் பார்த்தால் கிட்டத்தட்ட ஐம்பதாயிரம் மெற்றிக் தொன் உற்பத்தி நடந்திருக்கின்றது. இதே போல மன்னார். முல்லைத்தீவு கடற்கரை அண்டியவை. கிழக்கிலை திருகோணமலை. மட்டக்களப்பு. அம்பாறை வரும். வடக்கைத்தான் நான் இதிலை முன்னிலைப்படுத்துகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் மீனவர்கள் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் பேர் இருக்கின்றார்கள். முல்லைத்தீவு. கிளிநொச்சி. மன்னார் சேர்ந்து ஒரு இலட்சம் பேர் இருக்கின்றார்கள். கிட்டத்தட்ட எல்லாமாக இரண்டு இலட்சம் பேர் மீன்பிடியோடு சம்பந்தப்பட்டவர்கள். வளமும். ஆளணி வளமும் எங்களுடைய கையில் இருக்கின்றது. ஆனால் பயன்பாட்டில் தான் பிரச்சனை இருக்கின்றது. யுத்தத்திற்கு முன்னர் யாழ்ப்பாணம் மன்னார். கிளிநொச்சி. முல்லைத்தீவு எல்லாம் சேர்ந்து நிறைய உற்பத்தியை வடக்கு பகுதிதான் கொடுத்தது. இலங்கையின் மொத்த கடல்வள உற்பத்தியில் தெற்கைவிட மூன்றில் இரண்டு பகுதியை வடக்கு பகுதிதான் கொடுத்தது. இங்கிருந்து ஏற்றுமதி இடம் பெற்றது. கடலட்டை. சங்கு. இறால். சிங்கஇறால் என இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது. நிறைய அந்நிய செலாவணியை பெற்றுக்கொடுத்தது வடக்கு. அப்பொழுது இந்திய மீனவர்களுடைய வருகையோ தென்பகுதி மீனவர்களுடைய ஊடுருவலோ இல்லை. ஆனால் போர் தொடங்கிய பின்னர் மிக மோசமாக பாதிக்கப்பட்டது கடல்வளத்துறை தான். இனப்பிரச்சினை தீவிரமடைந்த போது இலங்கையின் கரையோரங்களின் முழுப்பகுதியும இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் போனது. மீனவர்கள் தொடர்ச்சியாக இடம்பெயர்ந்தமை. நிறையப்பேர் கடலில் இறந்தார்கள். அப்படி நிறைய பிரச்சனைகள் இருந்தன. கரையோரப்பகுதி இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருந்ததால் நிறைய சட்டங்கள் அதாவது பொருளாதார தடை. கடல் வலயத்தடை. இரவில் கடலுக்கு போக முடியாது. இயந்தரப்படகு பாவிக்க முடியாது. குறிப்பிட்ட தூரம் வரைக்கும்தான் போகலாம். பகலில்தான் கடல் தொழிலுக்கு போகலாம் என நிறைய சட்டங்கள் போட்டுத்தான் மீன் பிடிக்க விட்டார்கள். இவை தான் வடபகுதி மீன்வள வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாக இருந்தன. 25வீதமாக இருந்த உற்பத்தி 2 தொடக்கம் 3 சதவீதம் வரைக்கும் செங்குத்தாக கீழிறங்கியது.



சமாதான காலங்களில் கொஞ்சம் கடற்தொழிலுக்கு அனுமதித்தார்கள். பின்னர் இந்தியப் படைகள் இருந்த போது ஓரளவு நன்றாக இருந்தது. யுத்தம் முடிந்து 2009 ற்கு பின்னர் போன தாயக கடல்வளம் மீள கட்டியெழுப்பப்படும். இராணுவத்தினர் கடற்கரையோரங்களை விட்டு முழுமையாக போவார்கள் என்று தான் நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் எதிர்பார்த்ததிற்கு மாறாக எங்களுக்கு அவ்வளவு வெற்றி கிடைக்கவில்லை. இன்று யாழ்ப்பாணத்தில் பார்த்தால் 15000 - 20000 மெற்றிக்தொன் உற்பத்திதான் இடம் பெறுகின்றது. அன்று இருந்த 50000 மெற்றிக் தொன் அளவை எட்ட முடியாமல் உள்ளது. அதே போல் முல்லைத்தீவு. மன்னாரிலையும் மிக மோசமான நிலையில் உற்பத்தி வீழ்ச்சி அடைந்து உள்ளது. அந்நியர்களின் வடபகுதியை நோக்கிய ஊடுருவல் இடம்பெறுகின்றது. அதாவது தென்பகுதி மீனவர்கள். இந்திய மீனவர்களுடைய அத்துமீறிய ஊடுருவல் வடபகுதி மீனவர்கள் சுதந்திரமாக தொழில் செய்ய பெரும் தடையாக உள்ளது. கரையோரம் முழுக்க இராணுவ முகாம்கள் உள்ளபடியால் தென்பகுதி மீனவர்கள் இங்கு வந்து இராணுவ முகாம்களுக்கு அருகில் வாடிகளை போட்டுக்கொண்டிருந்து தொழில் செய்து எங்களுடைய வளங்களை சுரண்டுகின்றார்கள். அரசாங்கம் அவர்களுக்கு அனுமதியும் வழங்கி அவர்களுக்கு பாதுகாப்பும் வழங்குகின்றது. கொக்கிளாய். நாயாறு எல்லைப் பிரதேசம் அப்படியே அவர்கள் வசம் போய்விட்டது.

மன்னாரில் முள்ளிக்குளம் என்ற கிராமம் 300ற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழுகின்ற தமிழ் கிராமம். அது எல்லைக்கிராமம். எல்லையை அகற்றிவிட வேண்டும் என்பதற்காக பாரம்பரியமாக அங்கு வாழ்ந்த தமிழ்மக்களை கட்டாயப்படுத்தி வெளியேற்றினார்கள். யுத்தம் முடிய விடுவோம் என்று அவர்களாகவே கூறினார்கள். ஆனால் இன்று வரை அம்மக்களை அங்கு விடவேயில்லை. வடமேற்கு கட்டளைச்செயலகம் அக்கிராமத்தில் தான் இருக்கின்றது. அங்கிருக்கும் வீடு. கோயில். விவசாய நிலங்களை அவர்கள் தான் பயன்படுத்துகின்றார்கள். அங்கிருந்த மக்களெல்லாம் மன்னார். மடு என்று இடம்பெயர்ந்து சென்று விட்டார்கள். கொஞ்சப்பேர் 10 கிலோமீற்றர் தள்ளி காட்டுக்குள்ளே இருக்கின்றார்கள். தங்கள் சொந்த ஊருக்கு என்றோ ஒருநாள் திரும்புவோம் என்ற ஏக்கத்துடன் இருக்கின்றார்கள். ஆனால் அதற்கான எந்த முயற்சியும் எடுக்கப்படுவதாக தெரியவில்லை. தென்பகுதி மீனவர்கள் குறிப்பிட்ட காலத்தில் வந்து வாடி அடித்து இருந்து கடற்தொழில் செய்து விட்டு குறிப்பிட காலம் முடிய திரும்ப போய்விடுவார்கள். வாடைக்காற்று நேரம் வந்து வாடியடித்து இருந்து விட்டு சோழக காற்று நேரம் அவர்கள் போய்விடுவார்கள். ஆனால் வாடியெல்லாம் அப்படியே இருக்கும். அதற்கு கடற்படையினர் காவல் காக்கின்றார்கள். தலைமன்னார் பியர். சவுத்பார். சிலாபத்துறை அப்படியே அவர்கள் கையில் போய்விட்டது. அதுமட்டுமல்லாமல் ஆழ்கடலில் பலநாள் கலங்களை (Multiday Boats) பயன்படுத்துகிறார்கள். ஆழ் கடலில் சென்று மீன் பிடிக்கும் அந்தக் கலம் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபா பெறுமதி வரும். அது கடலில் 15 நாள்வரை நின்று மீன் பிடிக்கக் கூடிய வசதி உடையது. தென்னாசியாவில் இலங்கையின் தென்பகுதி மீனவர்கள் ஆழ்கடல் மீன் பிடியில் முதலிடத்தில் உள்ளார்கள். எங்களுடைய கிழக்குப் பக்கத்தால் வந்து அவர்கள் இந்த கலத்தை பயன்படுத்தி எங்களுடைய பெறுமதி மிக்க கடல் வளங்களை சுரண்டி செல்கின்றார்கள். எங்களுடைய கையில் அவ்வாறான ஒரு படகுகூட கிடையாது. இன்று பருத்தித்துறையில் கொஞ்ச பலநாள் கலங்கள் உள்ளன. ஆனால் அவை அந்தளவிற்கு பெரியதல்ல. அதில் நாலைந்து நாள் நின்று மீன் பிடிக்ககூடிய வசதி தான் இருக்கின்றது. ஆழ்கடல் வளம் முழுவதும் அவர்கள் தான் பயன்படுத்துகின்றார்கள் நாங்கள் பயன்படுத்துவதில்லை. முல்லைத்தீவில் அட்டை பிடிக்கும் பிரச்சனை பெரும் பிரச்சனை. தென்பகுதி மீனவர்களுக்குத்தான் ஆழ்கடலில் மூழ்கி அட்டை பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்படுகின்றது. எங்களுக்கு அவ்வாறு வழங்குவதில்லை. இலாபம் முழுக்க அவர்கள் தான் பெற்றுக்கொள்கின்றார்கள். கடல் அட்டையை பிடித்து மதிப்புக்கூட்டி தென்பகுதி நிறுவனங்களுக்கு ஏற்றுவது வரை அவர்களே பார்க்கின்றார்கள். மன்னாரில் எங்களுடைய ஆட்கள் சிலர் பிடிக்கின்றார்கள். ஒரு அட்டை 50 ரூபாதான். சில அட்டை 20 ரூபா. இரண்டு இன அட்டைதான் இருக்கின்றது. அவர்களுக்கு ஒரு நாளைக்கு 300. 400 அட்டை கிடைக்கும் என்கிறார்கள். இதை ஒரு கம்பனி எடுத்துச் சென்று தாங்களே மதிப்புக்கூட்டி வர்த்தகம் செய்கின்றது. அதனை நாங்கள் செய்வதற்கான வாய்ப்பு எங்களிடம் இல்லை. கடுமையாக உழைத்து அவர்களுக்குத்தான் கொடுக்கின்றமே தவிர வேறொன்றுமில்லை. பெரிய பிரச்சனையாக அட்டைப்பிரச்சனை இருக்கின்றது. அவர்கள் அட்டை பிடிக்கும் போது எங்களுடைய வலைகளை வெட்டிவிடுவார்கள். தென்பகுதி மீனவர்களால் எங்களுக்கு பாரிய பிரச்சனை இருக்கின்றது. இதைப்பற்றி பாராளுமன்றத்திலே யாருமே கதைப்பதில்லை.

அடுத்தது இந்திய மீனவர்களின் பிரச்சினை. வடபகுதி முழுக்க 3000 மேற்பட்ட இந்திய மீனவர்களின் றோலர்கள் நிற்கின்றன. ஒரு கிலோ இறால் பிடிக்கின்றது என்றால் 18 கிலோ மீன் விரயமாகின்றது. ஒரு றோலர் ஒரு நாளைக்கு 25. 30. 50 கிலோ இறால் பிடிக்கின்றது என்றால் பாருங்கோ 18 ஆல் 50 பெருக்கும் போது எவ்வளவு மீன் விரையம் ஆகின்றது என்று. இப்படி 3000 றோலர்களுக்கு பார்த்தால் எவ்வளவு போகின்றது. கோடிக்கணக்கில் எங்களுடைய வளம் அழிந்து போவதோடு கோடிக்கணக்கில் அவன் வியாபாரம் செய்கின்றான். அதனால் எங்களுடைய வளம் வரைமுறையின்றி சுரண்டப்படுகின்றது. 3 நாளைக்கு அவர்கள் இங்கு வந்து போகின்றார்கள். அப்பொழுது எங்களுடைய ஆட்கள் தொழிலுக்கு போக முடியாது ஏனென்றால் இங்கத்தைய மீனவர்கள் படுப்பு வலை தான் போடுவார்கள். அதை றோலர் வந்து இழுத்து போட்டு போய்விடும். அதனால் அந்த நேரத்தில் இவர்கள் அங்கு செல்வதில்லை. ஒரு வலை போனால் 3 இலட்சம் 4 இலட்சம் நட்டமாகிவிடும். நிறையப் பேருக்கு அப்படி நடந்திருக்கின்றது. அதனால் அவர்கள் கடலுக்கு போவதில்லை. 3 நாட்கள் தொழில் இழப்பு நட்டஈடும் ஒன்றுமில்லை. றோலர் இழுவை மடி வலைகள் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் அரசு அதனை இன்னும் நடைமுறைப்படுத்தவில்லை. அதில் நிறைய அரசியல் ஓடுகின்றது.

மீன் வளத்தைப் பாதுகாப்பதற்காக இழுவை மடி வலைகள் உலகம் முழுவதும் தடை செய்யப்பட்டிருக்கின்றன. வடமராட்சியில் வல்வெட்டித்துறை. யாழ்ப்பாணத்தில் குருநகர் போன்ற இடங்களில் 300. 400 றோலர் நிற்கின்றது. அதனால் வருமானம் இருக்கின்றது. இறால். அட்டை. நண்டு பிடிபடுவதனால் நிறைய வருமானம் இருக்கின்றது. இதனால் நன்மையும் இருக்கின்றது ஆனால் தீமையும் இருக்கின்றது. அதற்கு தீர்வு என்ன? இது ஒரு அரசியலாக போய்க் கொண்டிருக்கின்றது. அதற்கு தீர்வு இன்னும் கண்டு பிடிக்கமுடியாமல் இருக்கின்றது. றோலர் பயன்பாட்டை நிற்பாட்டினால் இறால் எப்படி பிடிக்க முடியும் என்று அவர்கள் கேட்கிறார்கள். இறால் பிடிப்பதற்கும் றோலர் தான் நல்ல முறை. இதைவிட வேறு முறை இருந்தாலும் றோலராலை பிடிக்கின்ற மாதிரி பிடிக்க முடியாது. டிஸ்கோ நெட் ஆலும் இறாலைப் பிடிக்கலாம். சரியான முறையில் இறால் பிடிப்பதற்கான பொறிமுறையை நாங்கள் இன்னும் கண்டு பிடிக்கவில்லை. அதற்கான தொழிநுட்பவியலாளர்கள் இங்கு இல்லை. றோலரை பயன்பாட்டை நிற்பாட்டுவதென்றால் வேறு வழிமுறையை கண்டுபிடித்து கொடுக்க வேண்டும். இறால். அட்டை. நண்டு எல்லாவற்றையுன் தென்பகுதியிலிருந்து வரும் கம்பனிகள் தான் கொண்டு போகின்றார்கள். நீல நண்டு 400 தொடக்கம் 450 ரூபா வரை போனது இன்று ஒரு கிலோ நண்டு 1500 ரூபா. முதலிடத்து நண்டு இங்கே வாங்க முடியாது இங்கே சந்தையில் வருவதெல்லாம் மூன்றாம் தரமுடையதுதான் வருகின்றது. பெரிய இறால் எல்லாம் இன்று 2500 ரூபா முதல் 3000 ரூபா வரை விற்பனையாகின்றது. இன்று நாங்கள் அவை எல்லாம் சாப்பிட முடியாத கட்டம். நிறைய அள்ளிச் செல்கின்றார்கள். ஆனால் சம்பாத்தியம் முழுக்க எங்களுக்கு வருவதில்லை. அது தென்பகுதி கம்பனிகள் போன்றவற்றிற்கே சென்றடைகின்றது.

கடல் அட்டை. நண்டு. இறால் போன்றவை வளர்க்கலாம். இங்கு அதற்கு சரியான இடம் இருக்கின்றது. ஆனால் சரியான ஆளணி இல்லை. முதலீடில்லை. பாதுகாப்பு இல்லை அவ்வாறாக நிறைய பிரச்சனை இருக்கின்றது. அது பற்றிய ஆய்வும் இல்லை அக்கறையும் இல்லை. வடக்கு கிழக்கு கடல் வளத்திற்கு இந்திய மீனவர்களும். தென்பகுதி மீனவர்களும் பெரிய அச்சுறுத்தலாக இருக்கின்றார்கள். எல்லா துறைமுகங்களும் கடற்படையினரிடமே இருக்கின்றது. துறைமுகங்களை நாங்கள் பயன்படுத்த முடியாது. இன்று மீன்பிடித்துறைமுகம் என்று சொல்லி ஒன்றுமில்லை. மயிலிட்டித்துறைமுகம்தான் கொஞ்சம் விடப்பட்டிருக்கின்றது. கொஞ்சப்பேர் போயிருக்கின்றார்கள். அதிலும் சில இடங்கள் இன்னும் விடவில்லை. முக்கியமான இடங்கள் விடப்படவில்லை. அந்த மக்கள் இன்னமும் முகாமில் இருக்கின்றார்கள். இந்தியாவில் கொஞ்சப்பேர் இடம்பெயர்ந்து முகாம்களில் இருக்கின்றார்கள். அவர்கள் பெரும்பாலும் மீனவர்கள். அவர்கள் இன்னமும் வரவில்லை. வந்து தங்கள் தங்கள் இடத்திற்கு போக வேண்டும். இடப்பெயர்வு. மீளக்குடியேற்றல். தற்கால குடியிருப்பு பிரச்சனைகள் என பல பிரச்சனைகள் இருக்கின்றன. ஒரே குடும்பத்தை சேர்ந்த இருவருக்கு இரண்டு கண்ணுமில்லை. இரண்டு கைகளுமில்லை. ஒருவருக்கு ஒரு கையில்லை. இவையெல்லாம் எதனால்? சட்ட விரோதமாக டைனமற் வெடிபொருள் பயன்படுத்தி மீன் பிடித்ததனால் ஆகும். பெரிய கடல் பன்றிகளை டைனமற் அடிச்சு பிடிக்கின்றார்கள். இதனால் கடலில் வாழ்கின்ற சிறிய மீன்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகின்றன. ஏராளமாக செத்து மிதக்கின்றன. கரையோரத்தில் கண்டத்தாவரங்கள் எல்லாம் வெட்டி. கண்டல் தாவரங்கள். மரக்குற்றியை ஏற்றிக்கொண்டு போய்விடுவார்கள். படுப்பு வலை போட்டால் அதிலை சிக்கி வலை எல்லாம் கிழிந்து அழிந்து போய்விடும்.

தொடரும்...

# உலக வலம்

## விமானத்தில் 1.4 கிலோ தங்கம் கடத்தல்

கொச்சி சர்வதேச விமான நிலையம் வழியாக 1.4 கிலோ தங்கத்தை கடத்த முயன்ற ஏர்இந்தியா எக்ஸ்பிரஸ் விமானப் பணியாளர் சுங்கத் துறையால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பஹ்ரைனில் இருந்து கொச்சி வந்த விமானத்தில் பணியாற்றிய அந்த பணியாளர் தனது கையில் பட்டை வடிவில் தங்கத்தை கட்டி மறைத்து எடுத்து வந்துள்ளார். விமானப் பணியாளர் தங்கம் கடத்துவது தொடர்பாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் சுங்க வரித் துறையினர், தீவிர சோதனை மேற்கொண்டனர். அப்போது, அந்த பணியாளர் 1.4 கிலோ தங்கத்துடன் சிக்கினார். கேரள மாநிலம் வயநாட்டைச் சேர்ந்த ஷாகூரி என்ற அந்த நபரை சுங்கத் துறை அதிகாரிகள் கைது செய்தனர். அவரை உடனடியாக பணியிடைநீக்கம் செய்வதாக ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் அறிவித்துள்ளது. ஊழியர்கள் இதுபோன்ற சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டால் துறைரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

## வீட்டு வேலை செய்த மனைவிக்கு 1.7 கோடி இழப்பீடு

ஸ்பெயின் நாட்டில் விவாகரத்து செய்யப்பட்ட மனைவிக்கு வீட்டு வேலை செய்ததற்காக ரூ.1.7 கோடி இழப்பீடு வழங்க வேண்டும் என கணவனுக்கு அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

25 ஆண்டுகளாக ஒன்றாக இருக்கும்போது வீட்டு வேலை செய்ததற்காக குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்து ரூ.1.7 கோடி ஒதுக்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர் இவானா மோரால். இவருக்கு திருமணமாகி 25 ஆண்டுகளாகின்றன. இந்நிலையில், இவானாவின் கணவர் அவரை விவாகரத்து செய்துள்ளார்.

இந்த வழக்கை விசாரித்த அந்நாட்டு நீதிமன்ற நீதிபதி லவுரா ருயிஸ் அலமினோஸ், 25 ஆண்டுகளாக ஊதியமின்றி இவானா வீட்டு வேலைகளைச் செய்து வந்ததைக் குறிப்பிட்டு அவருக்கு குறைந்தபட்ச ஊதியம் ஒதுக்கி 25 ஆண்டுகளுக்கு கணக்கிட்டு ரூ.1.7 கோடி ஊதியமாக வழங்க வேண்டும் என உத்தரவிட்டார்.

சுத்தம் செய்வது, கழிவறை கழுவுவது, சமையலறையை பேணுவது என வீட்டை பராமரிக்கும் வேலைகளை ஆணும் பெண்ணும் சரிசமமாக பங்கிட்டு செய்ய வேண்டும் என சுட்டிக்காட்டிய நீதிபதி, அவ்வாறு சமமாக பிரித்துக்கொள்ளவில்லையெனில், வீட்டில் அதிக வேலை செய்பவருக்கு ஊதியம் வழங்க வேண்டும் என வலியுறுத்தினார்.

## சீன ஜனாதிபதியாக மீண்டும் ஜி ஜின்பிங்

சீன ஜனாதிபதியாக ஜி ஜின்பிங் மீண்டும் அந்நாட்டு பாராளுமன்றத்தில் அன்று (10) பதவியேற்றார். தொடர்ந்து 3ஆவது முறையாக அவர் ஜனாதிபதியாக பதவியேற்றிருக்கிறார். சீன ஜனாதிபதி அந்நாட்டின் ஒற்றை அரசியல் கட்சியான சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில் தேர்வு செய்யப்படுவார். அதன்படி, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில் ஜி ஜின்பிங் மீண்டும் ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டார். கட்சி அவரை ஒருமனதாக தேர்வு செய்தது.

அதோடு, அவர், மத்திய இராணுவ ஆணையத்தின் தலைவராகவும் தேர்வு செய்யப்பட்டார். சீன கம்யூனிஸ்ட் கட்சியின் முடிவை அப்படியே அங்கீகரிக்கும் அந்நாட்டின் பாராளுமன்றமான தேசிய மக்கள் காங்கிரஸ், ஜி ஜின்பிங்கை முறைப்படி ஜனாதிபதியாக தேர்வு செய்தது. இதையடுத்து, அவர் அந்நாட்டு பாராளுமன்றத்தில் சீன ஜனாதிபதி உறுதிமொழி ஏற்றார். சீன கம்யூனிஸ்ட் கட்சியின் நிறுவனரான மவோவுக்குப் பிறகு 2 முறைக்கு மேல் சீன ஜனாதிபதியாகி இருக்கும் முதல் நபர் ஜி ஜின்பிங். இவர் தனது வாழ்நாள் முழுவதும் அந்நாட்டின் ஜனாதிபதியாக இருப்பதற்கு வாய்ப்புகள் அதிகம் என கூறப்படுகிறது.

முன்னதாக கடந்த ஆண்டு ஒக்டோபரில் கூடிய சின கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில் கட்சியின் பொதுச் செயலாளராக ஜி ஜின்பிங் தேர்வாகி இருந்தார். சீன பிரதமரான லி கெகியாங்கின் பதவிக்காலம் முடிவடைய உள்ளதை முன்னிட்டு தேசிய மக்கள் காங்கிரசில் புதிய பிரதமர் தேர்வு செய்யப்பட உள்ளார். ஜனாதிபதி ஜி ஜின்பிங்கிற்கு மிகவும் நெருக்கமானவரான லி கியாங் அந்நாட்டின் பிரதமராக தேர்வு செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய மக்கள் காங்கிரசின் கூட்டம் வரும் 13ஆம் திகதி நிறைவடைய உள்ள நிலையில் அன்றைய தினம் புதிய பிரதமர் பத்திரிகையாளர்களை சந்திப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



## உலகச் சந்தையில் மசகு எண்ணெய் விலையில் சரிவு

அன் றைய (10) நிலவரப்படி உலக சந்தையில் மசகு எண்ணெய் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. பிரெண்ட் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 81.12 டொலராகவும், WTI மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 75.13 டொலராகவும் பதிவாகியுள்ளது.

04 நாட்களுக்கு முன்னர் பிரண்ட் மசகு எண்ணெய் பீப 'பாய் ஒன்றின் விலை 86.26 டொலராக பதி வாகியிருந்தது. WTI கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 04 நாட்களுக்கு முன்பு 80.46 டொலராக காணப்பட்டது.




## இந்தியாவில் வேகமாக பரவும் வைரஸ் காய்ச்சல்

இந்தியாவில் இன்புளுயன்சா H3 N2 வகையை சேர்ந்த வைரஸ் காய்ச்சல் பர வி வருகிறது. காய்ச்சல், தொண்டைப் புண், இருமல், சளி உள்ளிட்டவை இந்த வைரஸ் காய் ச்சலின் அறிகுறிகளாகும். இந்த வைரஸ்கொரோனாவைப் போல வேகமாக பரவும் என தன்மை கொண்டது.

H3 N2 இன்ப்ளூாயன்சா காய்ச் சலுக்கு இந் தியாவில் 2 பேர் உயிரிழந 'துள்ளனர். அரி யானா மற்றும் கர்நாடகாவில் தலா ஒருவர் இந் த காய்ச்சலால் உயிரிழந்து ள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலு ம், இந்த இன்புளூாயன்சா வை ரஸ் காய் ச்சலால் 90 பேர் பாதிக் கப்பட்டுள்ளதாகவும் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இந்த வைரஸ் காய்ச்சலை தடுக்கத் தேவையான நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.

# விளையாட்டு

## இலங்கை – நியூஸிலாந்து அணிக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம்

சுற்றுலா இலங்கை அணிக்கும் நியூஸிலாந்து அணிக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் அன்று(10) நிறைவுபெற்றது. போட்டியில் தமது முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடும் நியூஸிலாந்து அணி, அன்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில், 5 விக்கெட்டுக்களை இழந்து, 162 ஓட்டங்களை பெற்றிருந்தது.

துடுப் பாட்டத்தில் நியூஸிலாந்து அணிசார்பில் டொம் லத்தம் 67 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். இலங்கை அணி சார்பில் பந்துவீச்சில், அஸித்த பெர்னாண்டோ மற்றும் லஹிரு குமார ஆகியோர் தலா இரண்டு வீக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளனர்.

முன் னதாக தமது முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, சகல விக்கெட்டுக்களையும் இழந்து 355 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இலங்கை அணிசார்பில் குசல் மெண்டிஸ் 87 ஓட்டங்களையும், திமுத் கருணாரத்ன 50 ஓட்டங்களையும், ஏஞ்சலோ மெத்யூஸ் 47 ஓட்டங்களையும், தனஞ்சய டி சில்வா 46 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் நியூஸிலாந்து அணியின் டிம் சவுத்தி 64 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், மாட் ஹென்றி 80 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளனர்.



## மகளிர் ஐபிஎல் போட்டியில் மும்பை இண்டியன்ஸ் வெற்றி!

மகளிர் ஐபிஎல் போட்டியின் 7 ஆவது ஆட்டத்தில் மும்பை இண்டியன்ஸ் 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் டெல்லி கேப்பிட்டல்ஸை வியாழக்கிழமை வீழ்த்தியது. மும்பைக்கு இது 3 ஆவது தொடர் வெற்றியாக இருக்கும் நிலையில். டெல்லிக்கு இது முதல் தோல்வியாகும். இந்த ஆட்டத்தில் முதலில் டெல்லி 18 ஓவர்களில் 10 விக்கெட்டுகளையும் இழந்து 105 ஓட்டங்களே சேர்த்தது. அடுத்து ஆடிய மும்பை 15 ஓவர்களில் 2 விக்கெட்டுகள் மட்டும் இழந்து 109 ஓட்டங்கள் எடுத்து வென்றது.

நாணய சுழற்சியை வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய டெல்லியில் தலைவர் மெக் லேனிங் 5 பவுண்டரிகளுடன் 43 ஓட்டங்கள் சேர்த்ததே அதிகபட்சமாக இருந்தது. ஜெமிமா ரோட்ரிக்ஸ் 3 பவுண்டரிகளுடன் 25. ராதா யாதவ் 10 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க. எஞ்சிய பேட்டர்கள் சொற்ப ஓட்டங்களே சேர்த்தனர்.

மும்பை பௌலிங்கில் சாய்கா இஷாக். இசி வாங். ஹேலி மேத்யூஸ் ஆகியோர்தலா 3. பூஜா வஸ்த்ரகர் 1 விக்கெட் கைப்பற்றினர். பின்னர் மும்பை இன்னிங்ஸில் யஸ்திகா பாட்டியா 8 பவுண்டரிகளுடன் 41. ஹேலி மேத்யூஸ் 6 பவுண்டரிகளுடன் 32 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழக்க. நேட் ஸ்கீவர் 23. தலைவர் ஹர்மன்பிரீத் கௌர் 11 ஓட்டங்களுடன் அணியை வெற்றி பெறச்செய்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். டெல்லி தரப்பில் அலிஸ் கேப்சி. தாரா நோரிஸ் ஆகியோர் தலா 1 விக்கெட் எடுத்தனர்.




























இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 12.03.2023 அன்று வெளியிடப்பட்டது.